இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 171 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 02 செவ்வாய்க்கிழமை 16.05.2017

## இனவாதத்தின் உச்சம் விக்கி: சீறும் அமைச்சர்

கொழும்பு, மே 16
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனின் செயற்பாடுகள் இனவாதத்தின் உச்சம். மீண்டும் பன்னாட்டு அழுத்தங்களுக்குள் அரசைத் தள்ளி நல்லிணக்கத்தைக் குழப்பி அரசைச் சீண்டிப் பார்க்கிறார் அவர்.
இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.
பன்னாட்டுச் சமூகத்துக்கு » 25

## எங்கள் மருத்துவமனை இது



படம்: அமரதாஸ்

## குமுதினிப் படுகொலை நினைவு நெடுந்தீவில்



யாழ்ப்பாணம் மே 16
குமுதினிப் படகுப் படுகொலையின் 32 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.
1985 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி குமுதினி படகில் பயணம் செய்தவர்கள் கூட்டாகப் படு » 25

## வடமத்திய மாகாண சபையை கைப்பற்றுவதில் மகிந்த அணி தீவிரம்

கொழும்பு, மே 16
வட மத்திய மாகாண சபையைக் கைப்பற்றித் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதில் மகிந்த அணியினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். 17 உறுப்பினர்கள் தமது அணியில் இருப்பதால் தம்மை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என்று அவர்கள் ஆளுநரிடம் கோரியுள்ளனர். » 25

## திக்கமுனைக் கடற்கரையில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு



» 25

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக

## சிவாஜிலிங்கத்தைச் சாடுகிறார் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 16
தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நடத்தி வரும் நிகழ்வுகளுக்காகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன அவரைச் சாடியுள்ளார்.
"வடக்கில் விளக்கேற்றி முப்படையினரை அசௌ » 25

காணாமற்போனோர் தொடர்பாக

## சவேந்திரசில்வாவை சாட்சியாக்கும் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிப்பு

முல்லைத்தீவு, மே. 16
இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைக்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை நீதிமன்றத்துக்கு அழைக்க விடுக்கப்பட்ட கோரிக்கை முல்லைத்தீவு நீதிவான் மன்றால் நிராகரிக்கப்பட்டது.
விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் » 25

# முதல்வர் - ஆளுநர் இடையே இழுபறி

## திணறும் வடக்கு மாகாண அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மே 16
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கும் இடையே கடந்த சில தினங்களாக அதிகார இழுபறி ஏற்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் ஆளுநர் வழங்கிய அதிகாரிகளின் இடமாற்றல்களே இந்த இழுபறியைத் தோற்றுவித்துள்ளன. முதலமைச்சரின் செயலாளரையும் சில தினங்களுக்கு முன்னர் ஆளுநர் இடமாற்றிவிட்டார். இதனால் பொங்கியெழுந்த முதலமைச்சர் ஆளுநரின் பணிப்புக்கமைய இடமாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் நேற்றுமுன்தினம் அவசர அவசரமாக அறிவித்தார். இதனால் வடக்கு மாகாண சபை அதிகாரிகள் என்ன செய்வது என்று தெரியாது திணறிப் போயுள்ளனர். » 25

முச்சந்தி முரளி



பழையபடி மோதல் தொடங்கிற்றுது போல...!

## பாதுகாப்பற்ற கடவையில் டிராக்டரை பந்தாடியது ரயில்; 2 இளைஞர்கள் சாவு

புளியங்குளத்தில் நேற்றுத் துயரச் சம்பவம்



வவுனியா, மே 16
பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் உழவு இயந்திரத்தை மோதித் தள்ளியது தொடருந்து. இதனால் அதில் பயணித்த இரு இளைஞர்கள் அந்த இடத்திலேயே உயி » 24

## இன்று கூடாது அமைச்சரவை

கொழும்பு, மே 16
இன்றைய அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தலைமை அமைச்சர் ரணில் நாடு திரும்பிய பின்னர், அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட பின்னரே, அமைச்சரவைக் கூட்டம் » 23

## பெருமளவு வெடிபொருள்கள் நேற்றும் தையிட்டியில் மீட்பு



யாழ்ப்பாணம், மே16
வலி. வடக்குதையிட்டிப் பகுதிக் கிணற்றில் இருந்து நேற்றும் பெருமளவு வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டன.
குறித்த கிணற்றில் மேலும் வெடி » 24

## நந்திக் கடலோரம் மிதிவெடி அபாயம்

முல்லைத்தீவு மே 16
முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் தற்பொழுதும் மிதிவெடிகள் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட சமயம் அது நந்திக் கடலோரத்திலேயே முடிவடைந்தது. பல வருடங்கள் கடந்த » 25

## கேரளக் கஞ்சாவுடன் நேற்று ஒரே இடத்தில் 18 பேர் கைது

பெரும் அதிர்ச்சியில் பொலிஸார்

கொழும்பு, மே 16
கொழும்பு மினுவாங்கொடைப் பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஒரே இடத்தில் » 25

## வித்தியா படுகொலை வழக்கை கொழும்புக்கு மாற்றவேண்டாம்

வலியுறுத்திப் புங்குடுதீவு மக்கள் நேற்று உணவு ஒறுப்பு



யாழ்ப்பாணம் மே 16
படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வழக்கு விசாரணைகளைக் கொழும்புக்கு மாற்றக்கூடாது என வலியுறுத்திப் புங்குடுதீவு மக்கள் நேற்று அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். » 25

## மோடி யார் இதைச் சொல்ல? குமுறும் உதய கம்மன்பில

கொழும்பு, மே 16
இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கு காய்நகர்த்தப்படுவதாக பிவிதுறு ஹெல உறுமய குமுறியுள்ளது.
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் அண்மைய இலங்கைப் பயணம் இதனை உணர்த்தியுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.
புறக்கோட்டையில் அமைந்துள்ள பிவிதுறு » 25

## வடக்கு -கிழக்கை இணைத்து அதிவேக நெடுஞ்சாலை

இந்திய உதவியில் அமைக்க யோசனை முன்வைப்பு

கொழும்பு, மே 16
வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஊடறுத்து நிர்மாணிக்கப்படவுள்ள அதிவேக நெடுஞ்சாலைக்கு இந்தியா உதவவுள்ளது. அதற்கான யோசனையொன்று இந்தியாவால் கையளிக்கப்பட்டுள்ளது என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். » 25

# சைபர் தாக்குதல் அபாய நிலை இலங்கைக்கும்

## இணையத்தளப் பாவனையாளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 16

150 இற்கும் அதிகமான நாடுகளை அச்சுறுத்தியுள்ள சைபர் தாக்குதல் இலங்கையை எந்தச் சந்தர்ப்பத்திலும் தாக்கக்கூடிய அபாயமான சூழல் நிலவுவதால் இணையதளப் பாவனையாளர்களை அவதானமாக இருக்கும்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் இணைய ஊடுருவல் தாக்குதல்கள் எனப்படும் சைபர் தாக்குதலால் கடந்த வெள்ளிக்கிழமை 150 இற்கும் அதிகமான நாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன. இதனால் இரண்டு இலட்சம் கணினி மென்பொருள் கட்டமைப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தாக்குதல் எதிர்வரும் நாள்களில் எந்தச் சந்தர்ப்பத்திலும் மீண்டுமொரு முறை ஏற்படலாம். இதனால் அதில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த தாக்குதலில் இலங்கைக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால், அதற்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் மென்பொருள்களை கணினியில் பதிவேற்றிக் கொள்ளுமாறு இலங்கை தொலைத் தொடர்பு அவசர ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (த-5)

# கணவனைக் கடத்திய பெண்ணை தேடிச் சென்று வெட்டிய மனைவி

## சாவகச்சேரிப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி, மே 16

கணவனைக் கடத்திச் சென்ற 30 வயதுப் பெண்ணை வீடு தேடிச் சென்று கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினார் 26 வயது இளம் குடும்பப் பெண்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 30 வயதுப் பெண்ணையும் அவரது இரண்டரை வயதுச் சிறுவனையும் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக, 26 வயது இளம் பெண் தனது இரண்டு மாதக் குழந்தையுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

தலையில் வெட்டுக் காயத்துக்கு இலக்கான தாயும் மகனும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தனது கணவனைக் கடத்திச் சென்ற பெண்ணையே இவர் வெட்டினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பெண்ணை பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த பெண்ணை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (த-109)

# சக உத்தியோகத்தருக்கு எதிராக பொலிஸ் அதிகாரி முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 16

சக பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராகப் பொலிஸ் அதிகாரி முறைப்பாடு செய்த சம்பவம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் இடையே பணி நிமித்தம் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் மதுபானம் அருந்துவதற்காகப் பொலிஸ் அதிகாரி அங்கு சென்றுள்ளா். அதேநேரம் முரண்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரும் மது அருந்துவதற்கு அதே விடுதிக்குச் சென்றுள்ளார். இருவரும் தற்செயலாக அங்கு சந்தித்தபோது அவர்களுக்குள் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகச் சக பொலிஸார் தெரிவித்தனர்.

வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பாக மாறியது. இதன்போது பொலிஸ் பரிசோதகரைப் பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கியுள்ளார். விருந்தினர் விடுதியின் முகாமையாளர் இருவரையும் சமரசம் செய்து பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி வைத்தார் என்றும் சக பொலிஸார் மேலும் கூறினர்.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் அதிகாரி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்துள்ளதுடன், குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யுமாறு தெரிவித்தமைக்கு ஏற்ப, பொலிஸ் அதிகாரி முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# தமிழரசுக் கட்சி அலுவலகத்திலும் நினைவேந்தல்

கொழும்புத்துறை, மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியிலுள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 5 மணிக்கு சுடரேற்றல், மலரஞ்சலி, இந்து, கிறிஸ்தவ ஆன்ம சாந்திப் பிரார்த்தனைகள், அஞ்சலியுரைகள் என்பன இடம்பெறும். கட்சி உறுப்பினர்கள், தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் இணைந்து நினைவேந்தலில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-135)

# மோடிக்கு கறுப்புக்கொடி காட்ட எத்தனித்த கூட்டம் அன்றே அவருடன் பேச்சு

## மைத்திரிபால கிண்டல்



கொழும்பு, மே 16

கறுப்புக் கொடி பறக்கவிடுவதாக அறிவித்தவர்கள் அன்று இரவே தலைமை அமைச்சர் நரேந்திர மோடியைச் சந்தித்தனர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரலகங்விலவில் நடைபெற்ற நிகழ்வில் நேற்றுப் பங்கேற்றபோது அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: மகிந்த ராஜபக்ச, இந்தியத் தலைமை அமைச்சரைச் சந்திப்பதற்கு இந்தியத் தூதரகம் கேட்டது. அதற்கு நான் சம்மதித்தேன்.

இந்தியத் தலைமை அமைச்சரின் இலங்கைப் பயணத்தின்போது எந்தவொரு அரச சொத்துக்களும் இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்படவில்லை.

இந்தியத் தலைமை அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடி காட்டப் போவதாகத் தெரிவித்தவர்கள், இந்தியத் தலைமை அமைச்சர் வந்த அன்றிரவே நேரில் சென்று சந்தித்தனர் என்றார். (த-5)

# களுத்துறைச் சிறைச்சாலை அத்தியட்சகர் இடமாற்றம்

களுத்துறை மே 16

களுத்துறைச் சிறைச்சாலை அத்தியட்சகரை உடனடியாக இடமாற்றுமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சின் ஊடகச் செயலாளர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறைச்சாலை அத்தியட்சகரை இடமாற்றுவதற்கு மூன்று முக்கிய விடயங்களில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி சிறைச்சாலைப் பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப் பட்ட குழுவினால் முன்வைக்ப்பட்ட விடயங்கள், சமயங் என்பவரின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் மீது சிறைச்சாலையினுள் தாக்குதல் நடத்தியமை, களுத்துறைச் சிறைச்சாலைச் சமையல் அறைக்கு விநியோகிக்கப்பட்ட மரக்கறியினுள் கையடக்கத் தொலைபேசி ஒன்றும், புகையிலையும் கண்டு பிடிக்கப்பட்டமை ஆகிய விடயங்களை உள்ளடக்கியே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டால் அவர்களின் பதவி நிலை பாராது தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்றுள்ளது. (த-8)

# முள்ளிவாய்க்கால் கடற்கரையில் இன அழிப்பு நினைவாக வழிபாடு

## யாழ்ப்பாண சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் வியாழனன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நினைவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவாக நடத்தப்படும் சமய வழிபாடும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளரும் சர்வதமக் குழுவின் இணைப்பாளருமான அருட்தந்தை ஐ.டி.டிக்சன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சர்வமதக் குழுவினரால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வமதக் குழுத் தலைவர் நல்லை ஆதீன முதல்வர் அகில இலங்கை இந்து குருமார் ஒன்றியத் தலைவர் மனோகர குருக்கள், கிருபானந்தக் குருக்கள், வற்றாப்பளை கண்ணகி அம்மன் முதன்மை குருக்கள், முன்னை நாள் யாழ்ப்பாண குரு முதல்வர் வண எஸ்.பி. நேசகுமார், அருள் கலாநிதி ஜெயசீலன், முல்லைத்தீவு ஜமயத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி ஏ.எம்.ஏ அசீஸ் சிறிநாகவிகாரை சிறி விமலதேரர் நாயாறு ரஜமகா நாகவிகாரை தேரர், வட்டாரக்க விஜித்த தேரர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (த-10)

# பிணை முறி ரகசிய ஆவணம் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 16

பிணை முறி விநியோகம் தொடர்பான இரகசிய ஆவணத்தை, பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழுவிடம் மத்திய வங்கி சமர்ப்பித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிணை முறி விநியோகம் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழு கடந்த ஒரு மாத காலமாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணை முறி மோசடி தொடர்பில் முன்னதாகக் கோப் குழு விசாரணை நடத்தி வந்தது.

இந்தக் குழுவுக்குப் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், அரச தலைவர் மைத்திரிபாலவின் பணிப்புரையின் பேரில் சிறப்பு ஆணைக்குழு நிறுவப்பட்டு முறி விநியோகம் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# வடக்கு அதிபர் நியமனத்தில் அடிப்படை உரிமை மீறல்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை ஆசிரியர் சங்கம் முறையீடு

யாழ்ப்பாணம், மே16

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டதாகக்கூறப்படும்முறையற்ற அதிபர் நியமனங்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட காசிப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி அ.த.க.பாடசாலை, கலட்டி அ.மி.த.க. பாடசாலை, பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் அ.மி.த.க.பாடசாலை, பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம்,

தீவகம் கல்விவலயத்துக்குட்பட்ட அல்லைப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை, தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட வரணி வடக்கு சைவப்பிரகாச பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க.பாடசாலை, வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க. பாடசாலை,

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தர்மங்கேணி அ.த.க.பாடசாலை, முகாவில் அ.த.க.பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பம் தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்டிருக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

கல்வியமைச்சின் சுற்றறிக்கைகளை மீறி ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களுக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை எமது சங்கத்தின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் 389 பேர் அதிபர்களாக நியமனம் பெற்று - தகுதியான பயிற்சிகளை மேற்கொண்டு வெளியேறியுள்ளனர். ஆயினும் அவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகளை வழங்காமல் புதிய அதிபர் நியமனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தையும் மீறி ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களுக்கு அதிபர் பதவி வழங்கப்பட்டுள்ளமை மிகப் பெரும் முறைகேடாகும்.

முறையான நடைமுறைகளைப் பின்பற்றாது - அதிபர் தரத்தை உடையவர்கள் வடக்கு மாகாணத்தில் அதிகமாக இருக்கின்றபோதிலும் ஆசிரியர் தரத்தில் இருப்பவர்களை அதிபர்களாக நியமித்தமையானது - வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட அதிகார துஷ்பிரயோகம் என்பதுடன் இலங்கை அரசமைப்பில் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையையையும் மீறும் செயலாகும்.

இவ்வாறான முறைகேடுகளுக்கு எதிராக - விசாரணை மேற்கொண்டு-தீர்வைவழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-4)

---

கீதாவின் எம்.பி. பதவி

## இடைக்கால தடை நீடிப்பு

கொழும்பு, மே 16

நாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கீதா குமாரசிங்க தகுதியற்றவர் என, மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக கீதா தாக்கல் செய்த மனு நேற்று மீளவும் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

தமது கட்சிக்காரர் சுவிற்சர்லாந்துக் குடிமகன் ஒருவரைத் திருமணம் செய்துள்ளமையால், அவருக்கு அந்த நாட்டின் குடியுரிமை கிடைக்கப் பெற்றதாகவும், அது கேட்டுப் பெறப்பட்டி ஒன்றல்ல எனவும் பிரதிவாதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதிட்டார். (த)

---

## தீர்வையற்ற வாகன அனுமதிகளை விற்ற நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டரசின் எம்.பிக்கள்

*அனுரகுமார குற்றச்சாட்டு*

கொழும்பு, மே 16

கூட்டு அரசின் நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு அரசால் வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைக் கூடிய விலைக்கு வெளியாருக்கு விற்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்களுக்குத் தீர்வை அறவிடப்பட்டிருந்தால் திறைசேரிக்கு சுமார் மூன்று கோடியே 30 இலட்ச ரூபா கிடைத்திருக்கும் எனவும், மக்கள் சேவைக்கென தீர்வையற்ற ரீதியில் வழங்கப்பட்ட இந்த அனுமதிப்பத்திரங்களை கூடிய விலைக்கு விற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பணம் தேடிக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்மோடு வைத்துக் கொள்ள அரசு இலஞ்சமாக அவர்களுக்கு இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருப்பது நாடறிந்த உண்மை.

அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்திருப்பது அரசுக்கு நன்றாகத் தெரிந்திருந்தபோதிலும் அவர்களது அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் கண்களை மூடிக் கொண்டு இருப்பதாகவும் அநுர குற்றம் சுமத்தியுள்ளார். (த-5)

---

பொருளாதார மையக் கட்டடம்;

## சிவசக்தி ஆனந்தனின் கோரிக்கையை உடன் நிராகரித்தார் விக்கி

வவுனியா, மே 16

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்படும் பொருளாதார மையக் கட்டடத்தை மாற்றுத் தேவைக்குப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் விடுத்த கோரிக்கை வடக்கு மாகாண முதலமைச்சரால் நிராகரிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே குறித்த விடயம்தொடர்பில்நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கையை முன்வைத்தார். இதற்கு உடனடியாகவே முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில்:

வவுனியா மாவட்டத்தின் மதகுவைத்தகுளம் பகுதியில்தற்போது புதிதாக அமைக்கப்படும்பொருளாதார மையக் கட்டடத்தை மாற்றுத் தேவைக்குப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராயவேண்டும். குறித்த கட்டுமானப் பணிகள் இடம்பெற்று முடியும் போது அதனை சந்தைச் செயற்பாட்டுக்கு அல்லாமல் மாற்றுச்செயற்பாட்டுக்கு உபயோகப்படுத்தலாம் -என்றார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய வடக்கு முதலமைச்சர்,

நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தை அவரது கருத்தாகப் பதிவு செய்யுங்கள். ஆனால் அவ்வாறான தீர்மானங்கள் எவையும் கிடையாது. எனப் பதிலளித்தார். (த-101-402)

---

## சுமந்த சவப்பெட்டியை நடுவீதியில் கைவிட்டுத் தலை தெறிக்க ஓட்டம்

*குளவிகள் கலைந்து தாக்க ஆரம்பித்தமையால்*

கொழும்பு, மே 16

கம்பளைப் பிரதேசத்தில் சவப்பெட்டியொன்றை மயானத்துக்குச் சுமந்து சென்றுகொண்டிருந்தவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்கானதால் சவப்பெட்டியை நடுவீதியில் கைவிட்டுவிட்டுத் தலைதெறிக்க ஓடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கம்பளை, புப்புரெஸ்ஸ பிரதேசத்தில் உயிரிழந்த 79 வயது முதியவரின் உடலத்தை மயானத்துக்குக் கொண்டு சென்றபோது பாதையின் இருபுறமும் விசிறி எறியப்பட்ட பட்டாசுகளால் குளவிக்கூடு கலைந்துள்ளது.

குளவிக் கொட்டுக்கு இலக்கான எட்டுப் பேர் கலஹா மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

மாலை ஆறு மணியளவில் தீப்பந்தங்களின் உதவியுடன் வந்தபோது சில உறவினர்கள் உடலத்தை எடுத்துச் சென்று புதைத்திருக்கிறார்கள். (த-5)

---

## சாவுத் தண்டனைக் கைதிகள் விரைவில் தலதா மாளிகைக்கு

*மிகப் பெரும் வெசாக் பந்தல் அமைத்தமைக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில்*

கொழும்பு, மே 16

கொழும்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வெசாக் பந்தல்களில் மிகப்பெரியதெனக் கணிக்கப்படும் வெலிக்கடைச் சிறைச்சாலை பந்தலை வடிவமைத்துப் பூரணப்படுத்திய சாவுத் தண்டனைக் கைதிகளைக் கண்டி தலதா மாளிகைக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரி சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

லட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்த இந்தப் பிரமாண்டமான வெசாக் பந்தலை நிர்மாணிக்கச் சாவுத் தண்டனைக் கைதிகள் இரண்டு மாத காலம் இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள். அவர்களது உழைப்புக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் முகமாகவே தலதா மாளிகை தரிசன்ம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலதா மாளிகை தரிசனத்துக்கு மேலதிகமாக இவர்களது கடும் உழைப்பு பற்றிய விவரங்கள் அவர்களது அந்தரங்கக் கோப்புகளில் பதியப்படும் எனவும், அது அவர்களது நன்னடத்தைக்கான முக்கிய சான்றாகக் கருதப்படும் எனவும் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டார். (த-5)

---

## அரச மருத்துவர்களே போராட வேண்டாம் பேச்சுக்கு வாருங்கள்

*பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன அழைப்பு*

கொழும்பு, மே 16

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை விடுத்து அரசுடன் அர்த்தமுள்ள பேச்சுகளை மேற்கொள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வர வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்:

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிப் பிரச்சினை தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்குக் கருத்து வெளியிட முழுச்சுதந்திரம் உள்ளது. இது குறித்து அவர்கள் அரசுடன் பேச்சு நடத்த முன்வருவார்களாயின் நாம் அதனை ஒரு போதும் தட்டிக்கழிக்க மாட்டோம்.

பேச்சுக்கள் மூலம் தான் இதற்கான தீர்வுகளையும் முன்வைக்க முடியும். அதனை விடுத்துப் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களை மேற்கொள்வது ஆரோக்கியமான விடயமல்ல. அரச பாடசாலையில் கல்வி கற்று, அரச பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி முடித்துப் பட்டம் பெற்று, அரச வைத்தியசாலைகளிலேயே வேலை செய்து சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு அரசுக்கு எதிராகவே இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளக் கூடாது.

அரச மருத்துவ சேவையை எதிர்பார்த்து பல இன்னல்களுக்கு மத்தியில்தான் பொது மக்கள் அரச வைத்தியசாலையை நாடுகின்றார்கள். அப்படியானவர்களுக்கு அந்தச் சேவையைக் கொடுக்காமல் இருப்பது முறையான ஒன்றல்ல.

எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இலங்கையில் மட்டும்தான் அரச மருத்துவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவை குறித்தெல்லாம் இந்தத் தரப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார். (த-5)

## வித்தியாவின் வழக்கை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு

# யாழ்ப்பாணப் பல்கலையில் இன்று கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், மே 16

வித்தியா கொலை வழக்கின் விசாரணைகளை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நடத்தக் கோரியும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கொல்லப்பட்டமைக்கு நீதி வழங்கவேண்டும் என வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று முற்பகல் 11.30 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த விடயங்களுக்கு அரசு 30 நாள்களுக்குள் பதிலளிக்கவேண்டும் எனக் கோரி, மாணவர்களால் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-21-101)

## பொலனறுவை மாவட்டத்தில்

# முஸ்லிம்களின் சொத்துக்களை சேதமாக்கியது பொதுபலசேனா

கொழும்பு, மே 16

பொலனறுவை,தம்பாளை சின்னவில்பட்டிப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த பொதுபலசேனா மற்றும் ராவண பலய அமைப்பைச் சேர்ந்தவர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 5 மாட்டுப் பண்ணைகளை அடித்து நொருக்கியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் எனவும் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று குறித்த பிரதேச விவசாய சங்கத்தின் தலைவரான நூர்தீன் தாஹிர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.10 அளவில் பொதுபலசேனா, ராவணபலய அமைப்புகளைப்பிரதிநிதித்துவப்படுத்தி அங்கு வந்த கலபொடஅத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினரே அடாவடியில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

அவர்கள் நடத்திய தாக்குதலால் மாட்டுப் பண்ணைகள்சேதமடைந்துள்ளன. சுமார் 3 இலட்சம் ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளது. 22 மாடுகள் காணாமல்போயுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

மகாவலிகங்கையின் கரையோரப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் காலம் காலமாக வசித்து வருகின்றனர். இவர்களின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயமும் பண்ணை வளர்ப்பும் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் 1927ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருவதற்கான காணி உறுதிகளும் அவர்களிடம் காணப்படுகின்றன.

எனினும், பௌத்த இனவாதிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித பூமி என்ற போர்வையில் அங்கு அட்டகாசம் புரிந்துள்ளனர். சம்பவம் நடந்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸாரும் இவர்களின் தாக்குதலைத் தடுப்பதற்கான எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்று பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். (த)



# இறுதிப்போரின் தடயங்களை சுமந்து நிற்கும் முள்ளிவாய்க்கால்

முல்லைத்தீவு, மே. 16

ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்ட முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரின் தடயங்களை இப்போதும் காணமுடிகின்றது..

விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் காலப் பகுதியில் இராணுவத்தின் பிடியில் இருந்து தமது உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பல இடம்பெயர்வுகளைச் சந்தித்த தமிழ் மக்கள் இறுதியாக முள்ளிவாய்க்கால் பகுதியை வந்தடைந்தனர்.

மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் சிறிய நிலப் பரப்புக்குள் அடக்கப்பட்டவேளை இராணுவம் ஏவிய ஏறிகணைகளால் தினமும் வகைதொகையற்ற உயிரிழப்புகள் ஏற்பட்டன. மக்களின் உடல்கள் சிதறிக் கிடந்தன. இதன்பின்னர் மீள்குடியேற்றக் காலத்தில் தடயங்கள் இராணுவத்தால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. ஆயினும் பல இடங்களில் மனித எலும்புகள் சிதறிக் கிடப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இனப் படுகொலையின் சாட்சியாக இன்றும் பல தடயங்களை தன்னகத்தே சுமந்துள்ளது முள்ளிவாய்க்கால். (த-7)



யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் உள்ள முஸ்லிம் மையவாடியை சிரமதானம் செய்யும் முயற்சியில் யாழ்ப்பாண முஸ்லிம் சமூகம் ஈடுபட்டது. நேற்று முன்தினம் காலை பற்றைக்காடுகளாக காணப்பட்ட மையவாடியைப் பொதுமக்கள் இணைந்து துப்புரவு செய்தனர். (த-10)

# வடமத்தியில் மகிந்த அணிக்கு ஒத்துழைப்பு வழங்காது ஐ.தே.க.

கொழும்பு, மே 16

வட மத்திய மாகாண சபையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் மகிந்த அணிக்கு எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாது என்று மாகாண சபையின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

ஆட்சியைக் கவிழ்ப்பது தொடர்பில் மகிந்த அணியினர் எம்முடன் பேச்சு நடத்தவில்லை. அவ்வாறு நடத்தப்பட்டாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படாது, என்று வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அனில் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் தமக்கு ஆதரவு வழங்குவர் என்று மாகாண சபையிலுள்ள மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் அறிவித்திருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மாகாணத்தின் எதிர்க்கட்சித் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

மகிந்தவுக்குச் சார்பாகச் செயற்பட்டு வந்த வட மத்திய மாகாண அமைச்சர் கே.எச்.நந்தசேனவைத் தூக்கிவிட்டு, அந்தப் பதவிக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.ஹேரத் பண்டாவை மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் நியமித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதிலடி கொடுக்கும் வகையில் மகிந்தவுக்குச் சார்பாகச் செயற்பட்டு வந்த மாகாண சபையின் மற்றுமோர் அமைச்சரான எஸ்.எம்.ரஞ்சித் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.

இதனால் வட மத்திய மாகாண சபையின் அரசியல் களம் ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது.

'வட மத்திய மாகாணத்தில் மொத்தமாக 33 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இதில் பெரும்பான்மை பலம் எம்பக்கமே இருக்கின்றது. ஏனைய சிலரும் விரைவில் இணையவுள்ளனர். இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் மாற்றமொன்றை ஏற்படுத்த முயற்சிப்போம். அதுவரை சுயாதீன குழுவாகச் செயற்படவுள்ளோம்' என்று மகிந்த் அணியினர் குறிப்பிடுகின்றனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி வட மத்திய மாகாண சபை அமர்வு இடம்பெறவுள்ளது. அதற்குள் அரசியல் களத்தில் அதிரடி மாற்றங்கள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மகிந்தவுக்கு சார்பாகச் செயற்படும் மற்றுமொரு மாகாண அமைச்சரும் பதவியிலிருந்து தூக்கப்படுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

# நினைவேந்தல் நிகழ்வுக்கு போக்குவரத்து ஏற்பாடுகள்

## வடக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ளது

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வுக்கான பேருந்து ஒழுங்குகள் மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, நினைவேந்தல் குழு சார்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முல்லைத்தீவு மாவட்டம் பேருந்து ஒழுங்குகள் துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக காலை 7.30, மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக காலை 7.30, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் முன்பாக காலை 8மணி

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவை 077-4188975 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வள்ளுவர்புரம் (விசுவமடு) பாடசாலை முன்பாக காலை 8மணி, மாகாண சபை உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரனை 077-0284481 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தொட்டியடிச்சந்தி (விசுவமடு) முன்பாக காலை 7.30மணி, த.சிவச்சந்தரமூர்த்தியை 077-5285403 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விசுவமடுச்சந்தியிலிருந்து காலை 7.30மணி, கைவேலி சந்தியிலிருந்து காலை 7.30மணி, த.யோகேஸ்வரனை 077-2206776 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை விட முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக காலை 8 மணி, 8.30 மணி மற்றும்9 மணி ஆகிய நேரங்களிலும் இலவசபோக்குவரத்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் பேருந்து ஒழுங்குகள் வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக காலை 7மணி (இரண்டு பேருந்துகள்) வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தை, 0710732726 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பேருந்து ஒழுங்குகள் கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து காலை 7.30மணி (இரண்டு பேருந்துகள்) வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவை, 0773273629 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டம் பேருந்து ஒழுங்குகள் மன்னார் பேருந்து நிலையம் முன்பாக காலை 6மணி (இரண்டு பேருந்துகள்) வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை, 077-2083020 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் பேருந்து ஒழுங்குகள் தொண்டமானாறு சந்தி காலை 6.30மணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தை, 077-7729020 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கைதடிச் சந்தியில் இருந்து காலை 7.00 மணி, க.அருந்தவபாலனை, 0776186554 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

காரைநகர் சந்தியிலிருந்து காலை 6.30மணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனை, 0777447288 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையம் முன்பாக காலை 6.30 மணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியை, 077-6450292 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த-5)

## வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றப்படும் கிரவல் மண்

*ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு*

வவுனியா, மே 16
வடக்கு மாகாணத்துக்கு வெளியில் கிரவல் மண் கொண்டு செல்லப்படுவதால், வடக்கு மாகாணத்தில் உள்ள கட்டடத் தேவைகள் மற்றும் வீதிகளைச் சீரமைப்பதற்குப் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளதுஎன்று வவுனியாமாவட்ட உதவிச் செயலர் கமலதாசன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மாவட் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு மாகாணத்தில் பல வீதிகளைச் சீரமைப்பதற்கு மண் தேவை உள்ளது. இவ்வாறு இருக்க நாளாந்தம் அளவுக்கு அதிகமாக மண் அகழப்படுகிறது. அதனால் எதிர்காலத்தில் கிரவல் மண் தட்டுப்பாடு உருவாகும். எனவே கிரவல் மண் அகழ்வில் மட்டுப்பாடுகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். "என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்ததாவது,

"இந்த விடயத்தை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கான வரையறைகளை அபிவிருத்திக்குத் தடையேற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மாவட்டச் செயலகமே தீர்வு வழங்க வேண்டும்.எனவே சம்பந்தப்பட்ட தரப்பிடம் இது தொடர்பில் உடனடியாக கதையுங்கள்" - என்றார்.

(ஐ-8-402)

# பனை வெல்லக் கொள்வனவில் புலம்பெயர்ந்த மக்கள் ஆர்வம்





கிளிநொச்சி,மே 16
பனை உற்பத்திகளில் ஒன்றாகிய பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்வதில் புலம்பெயர் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று கிளிநொச்சிபனைதென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். துரைசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உடலுக்கு ஆரோக்கியத்தையும் , நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சிறந்த உற்பத்திப் பொருளாகவும் வெல்லம் காணப்படுகிறது. புலம்பெயர் வாழ் மக்கள் முற்பதிவு செய்து அதிகளவில் வெல்லத்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர். முன்னைய காலங்களில் உள்ளூர் மக்கள் பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்வதில் கூடிய நாட்டம் காட்டுவதில்லை. தற்போது அவர்களும் வெல்லத்தைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த வருடம் 30 ஆயிரம் கிலோ வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது ஒரு கிலோ வெல்லம் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. வெல்லத்தைக் கொள்வனவுசெய்ய விரும்புவோர் ஏ9 வீதி கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி எனும் முகவரியில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது முல்லைத்தீவு வீதி கண்டாவளைச் சந்தியில் அமைந்துள்ள வெல்ல உற்பத்தி நிலையத்திலோ கொள்வனவு செய்ய முடியும் . அத்துடன் புலம்பெயர்வாழ் மக்கள் 021 4924 218 என்ற எமது தலைமைக் காரியாலயத் தொலைபேசி இலக்கத்துடனோ, அல்லது 021 4924 221 என்ற வெல்ல உற்பத்தி நிலையத்தின் தொலைபேசிஇலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்வதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும். - என்றார்.

(ஐ-6)

## இரு பாடசாலைகளுக்கு நேற்று புதிய அதிபர்கள்

தென்மராட்சி மே. 16
தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட இரு பாடசாலைகளில் நேற்று புதிய அதிபர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றறுள்ளனர் என வலயத்தினர் தெரிவித்தனர்.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்துக்கு க.மங்களேஸ்வரனும், மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தி யாலயத்திற்கு தா.கணேச பாலேந்திரனும் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டு நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (து-9)

## இலவச வழிகாட்டல் வகுப்பு இன்று

யாழ்ப்பாணம், மே 16
முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 3இற்கான வினைத்திறன் காண் தடைகளப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்ல் வகுப்பு இன்றுமாலை4.30மணிக்கு யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் ச.தயாபரன் அறிவித்துள்ளளார். (து-21)

# மஞ்சள் கோடுகள் மறைவு பாதசாரிகள் பெரும் சிரமம்



யாழ்ப்பாணம் மே 16
யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதிகளில் போடப்பட்ட மஞ்சள் கோடுகள் தற்போது அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் பாதசாரிகள், வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

பாதசாரிக் கடவைகள் உள்ள பகுதிகளில் வரையப்பட்டிருந்த மஞ்சள் கோடுகள் அழிந்து காணப்படுவதால் பாதசாரிகள் உரிய இடத்தில் பாதையைக் கடக்காமல் வேறு இடத்தில் கடப்பதால் விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

மஞ்சள் கோடுகள் இருப்பது தெரியாமையால் வாகனச் சாரதிகள் வீதிகளின் பல்வேறு இடங்களிலும் வாகனங்களை நிறுத்துகின்றனர். இதனால் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் நிகழ்கின்றன.

எனவே இந்த மஞ்சள் கோடுகளை சீரமைக்குமாறு மக்கள் உரிய அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்புகொண்டுகேட்டபோது,

யாழ்ப்பாண மாவடத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 37 வீதிகள் காணப்படுகின்றன. இவற்றில் அழிவடைந்து காணப்படும் மஞ்சள் கோட்டுப் பாதசாரி கடவைகளை நாம் நிவர்த்தி செய்து வருகின்றோம். இவ்வாறு அழிவடைந்துள்ள மஞ்சள் கோடுகளை இன்னமும் 4 மாதங்களுக்குள் சரி செய்து விடுவோம்என்றனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்கள் தெரிவித்ததாவது:

யாழ்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான வீதிகளில் உள்ள மஞ்சள் கோட்டுக் கடவைகளைச் சீர்செய்யும் பணிகளில் எமது ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சீரமைப்பு வேலைகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. எம்மிடம் உள்ள மஞ்சள் வர்ணப் பூச்சின் இருப்பு குறைவடைந்துள்ளது. எனவே அதனை பெற்றுக்கொள்ள நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் - என்றார். (து-ரி)

# இரு வாரங்களுக்குள் கிடைக்கும் ஜி.எஸ்.பி.

*அமைச்சர் ஹர்ஸ டி சில்வா நம்பிக்கை*



கொழும்பு, மே 16
இன்னும் இரண்டு வாரங்களுக்குள் ஜீஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை கிடைத்துவிடும் என்று பிரதி வெளி விவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அரசு பன்னாடுகளுடன் நல்லுறவைப் பேணி அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று வெளிநாட்டு முதலீட்டாளர்களைச் சந்தித்து வருகிறார்.

மகிந்த ஆட்சியைப்போல் அல்லாது முழு ஜனநாயகம் எமது ஆட்சியில் நிலவுவதால் பன்னாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு விரும்புகின்றனர்.

மகிந்த ஆட்சியில் வெளிநாடுகளால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் இப்போது நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தால் மகிந்த ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த மீன் ஏற்றுமதிக்கான தடையை எம்மால் நீக்க முடிந்தது. அடுத்தது ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை. இலங்கையின் ஏற்றுமதித் துறையின் முதுகெலும்பாகத் திகழும் இந்த வரிச் சலுகை எமக்கு மீண்டும் கிடைக்கப் போவது உறுதியாகிவிட்டது. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இது எமக்குக் கிடைத்துவிடும் - என்றார்.

(கு-3)

## வாழ்வின் எழுச்சி மோசடி வழக்கு விசாரணை நேற்று

கொழும்பு,மே 16
வாழ்வின் எழுச்சி (திவிநெகும) அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான நிதியை மோசடி செய்த சம்பவம் குறித்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச உள்ளிட்ட சிலருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாடு குறித்த சாட்சி குறிப்புகள் உரிய முறையில் பிரதிவாதிகளுக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று பிரதிவாதித் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி குறிப்பிட்டார்.

குறித்த சாட்சிக் குறிப்புகளைப் பெற்றுக் கொடுப்பதாகச் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாக்குறுதி அளித்தார். அதற்கமைய, வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்க, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ உத்தரவிட்டார். (து-ஐ)

## வறுமையான மாணவர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் ஊக்குவிப்பு

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டும் தனது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த. உயர்தரம் பயிலும் வறுமைக் கோட்டினுள் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்க முன்வந்துள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1500 வீதம் 2 வருடங்களுக்கு குறித்த நிதியை வழங்கக் குறித்த கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்பிரகாரம்குறித்தமாணவர்கள்சங்கத்தின் எல்லைப் பரப்பினுள் இயங்கும் பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப்பரீட்சையில்முதல் தடவையாகச் சித்தியெய்தி இருக்கவேண்டும்.

மாணவர்களின் பெற்றோர் குறித்த சங்க எல்லைப் பரப்பினுள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராகவும் இருக்கவேண்டும்.

குறித்த நிதியத்தைப் பெற விரும்பும் மாணவர்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி கேட்கப்படும் நிபந்தனைகளை முழுமை செய்து எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2 மணிக்கு முன்பு சங்க தலைமைப்பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(து-122)

## சிறுதானியச் செய்கையில் ஆர்வமின்றி விவசாயிகள்

தென்மராட்சி மே. 16
வரணி இடைக்குறிச்சி மாவில் வெளிப் பிரதேசத்தில் வருடாவருடம் தொடர்ந்து சிறு தானியப் பயிர்ச்செய்கையில்ஈடுபட்டிருந்த விவசாயிகள் இந்த முறை அதில் அக்கறை காட்டவில்லை.

கடந்த ஆண்டு சிறுதானியப் பயிச்செய்கை செய்யப்பட்ட வேளை பெய்த கடும் மழை காரணமாகப் பயிர்கள் நாசமாகி சேதமடைந்திருந்தன. இதனால் விவசாயிகளுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது.

இதனால் மனமுடைந்த விவசாயிகள் குறித்த சிறுதானியப் பயிர்ச்செய்கையை மீண்டும் தொடரவில்லை என குறித்த உப உணவுப் பயிற்செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் தெரிவித்தார். (து-122)


# கேப்பாபிலவு முகாமை மாற்ற ராணுவத்திடம் நிதி கையளிப்பு

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு,மே 16
கேப்பாபிலவு இராணுவ முகாமை மாற்றுவதற்காக, இராணுவம் கோரிய 5 மில்லியன் ரூபா நிதி பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை விடுவிப்பது குறித்து கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரிடத்தில் உள்ள காணிகளை விடுவிப்பது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடக்கு கிழக்கு உறுப்பினர்கள் கோரிக்கையை முன்வைத்தி ருந்தனர். அதன்போது தாம் வேறொரு இடத்துக்குச் செல்வதனால் நிதி தேவையாகவுள்ளதாகவும், தமது முகாமை அகற்றுவதற்கு 5 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு வழங்கப்படுமிடத்து ஆறு வாரங்களில் தாங்கள் அவ்விடத்தை கையளிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் இராணுவத்தினர் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில் எனது அமைச்சினால் குறித்த இராணுவ முகாமை மாற்றுவதற்காக 5 மில்லியன் ரூபா நிதி பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டது." என்றார். (ஐ)



## இடர் முகாமைத்துவ பிரிவின் ஒத்திகை

யாழ்ப்பாணம்.மே.16
முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/434 கிராமசேவையாளர் பிரிவான போக்கறுப்பில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடர் முகாமைத்துவப் பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் யாரும் குழப்பமடைய தேவையில்லை என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

(த-12)

## வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட பிரிவுகள் கையளிப்பு

அச்சுவேலி, மே.16
நவமங்கையர் நிவாசத்தினால் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் ப்னரமைக்கப்பட்ட பிரிவுகளின் கையளிப்பு வைபவம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்..

நவமங்கையர் நிவாசத்தின் ஸ்தாபகர் சுவர்ணா நவரத்தினம் தலைமையில் நடைபெறும் கையளிப்பு வைபவத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் எஸ். சத்தியலிங்கம் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா கலந்து கொள்கின்றார். (த-11)

## நபர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தினால் தாக்கிய 4 பேருக்கு 4 ஆண்டு கடூழியம்

யாழ்ப்பாணம், மே, 16
நபர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிய உயிராபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு 4 ஆண்டுகளின் பின்னர் இரண்டு வருட கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

மருதங்கேணிப் பகுதியில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி இரவுவேளை நபர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். குறித்த நபரை பொல்லுகளாலும், கூரிய ஆயுதங்களாலும் தாக்கி உயிராபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் 41, 40 43 வயதுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். வழக்கு விசாரணைகள் இடம் பெற்றன. சந்தேக நபர்கள் பிணையில்விடுவிக்கப்பட்டனர். குறித்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப் பட்டது. வழக்கை விசாரணை செய்த பருத்திதுறை நீதிமன்ற நீதிவான், குற்றவாளிகளுக்கு 2 வருடச் கடூழியச் சிறை தண்டனையும், 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

(த-21-26)

## சங்காபிசேகம்

யாழ்ப்பாணம்.மே.16
திருநெல்வேலி ப்ழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வைகாசி திருவோணம் 1008 சங்காபிசேகம் நாளை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று நண்பகல் 12மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று பஞ்சமுக விநாயகர் தண்டிகை உற்சவம் நடைபெறவுள்ளது. பின்னர் மாலை 5மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி வசந்த மண்டப பூசை நடைபெற்று திருவூஞ்சல் பாடல் பாடி திருவூஞ்சல் நடைபெற்ற பின் எழுந்தருளி உற்சவம் நடைபெறவுள்ளது.

(த-12)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 180 | 200 | 240 | 240 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 140 | 100 | 80 | 100 |
| பாகல் | 160 | 200 | 160 | 240 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 250 | 240 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| கீரை | 25 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 40 | 30 |
| பச்சை மிளகாய் | 160 | 140 | 220 | 180 |
| புடோல் | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 140 | 200 | 240 | 120 |
| வெண்டி | 80 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 50-60 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 | 110 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 200 | 180 | |
| இராசவள்ளி | 180 | 250 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 120 | 120 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 700 |
| பாரை | 500 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 100 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 400 | 400 | 500 | 300 |
| கும்பிளா | 400 | 500 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 700 | |
| ஓரா | 300 | 300 | 500 | |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 400 | 300 | |
| திருக்கை | 350 | 250 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 | |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 200 | 220 | 600 | 400 |
| வாழை | 200 | – | 500 | |




பெண்களுக்கான அலங்கார வகை களில் அலங்கார கைச்செயின்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை வெள்ளியிலும் அமைந்துள்ளன. இவற்றை சாதாரண நிகழ்வுகளுக்கு அணிந்து செல்லும்போது மிக எடுப்பாக இருக்கும். இவை 900 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## பிளாஸ்ரிக் ஒழிப்பில் வவு. மாவட்ட செயலகம் முன்னுதாரணம்

வவுனியா, மே 16
பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்த தற்போது பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் வவுனியா மாவட்டச் செயலகம் முன்னுதாரணமான வகையில் செயற்படுகின்றது.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படவில்லை. குடிதண்ணீர் கண்ணாடிக் குவளைகளில் வழங்கப்பட்டன.
பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை செயற்படுத்தப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் பலரும் இந்த நடவடிக்கைக்கு வரவேற்பளித்தனர். (ற-10,402)



## நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறிய தேரர் மீது பிடியாணை

கொழும்பு, மே 16
கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குகளில் முன்னிலையாகத் தவறிய பல்கலைக்கழக ஒன்றியத்தின் உறுப்பினரான ஜம்புரே சுனீத தேரருக்கு கொழும்பு கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான செல்வி லங்கா ஜயரத்ன பகிரங்கப் பிடியாணை பிறப்பித்துள்ளார்.
கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு எதிரான வழக்குகளில் ஒன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர் பிரசன்னமாகத் தவறியிருந்ததார். பகிரங்கப் பிடியாணையைப் பிறப்பித்த நீதிவான் எதிராளி இல்லாமலே இந்த வழக்கின் ஏனைய சாட்சி விசாரணைகளை நடத்துமாறு கொழும்பு கோட்டை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் நடத்திய போராட்டத்துக்கு எதிராக கொழும்பு கோட்டை பொலிஸார் தொடுத்திருந்த சில வழக்குகளுக்கு சந்தேகநபர்களில் ஒருவரான ஜம்புரே சுனீத தேரர் தொடர்ந்தும் பிரசன்னமாகத் தவறியதாலேயே அவருக்குப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (ற)

# மகிந்தவின் ஒரு நாள் நிகழ்வுக்கு செலவு ரூ.15 லட்சம்

## தலையைச் சுற்ற வைக்கும் செலவு விவரம்



யாழ்ப்பாணம், மே 16
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பங்கேற்ற, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டடத் திறப்பு விழாவுக்கு மாத்திரம் 15 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்தது.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக எழுப்பப்பட்ட கேள்விக்கு வழங்கிய பதிலிலேயே இந்த விடயம் தெரிய வந்தது.
2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு திறந்து வைக்கப்பட்டது. அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டார். இந்த நிகழ்வுக்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் 14 லட்சத்து 98 ஆயிரத்து 536 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரங்கள் வருமாறு: (ற-5)

| | |
|---|---|
| கருங்கல்லிலான நினைவுக் கல் (3), பித்தளை நினைவுக் கல் (2), நினைவுக் குறிப்பு கள் (4) | 308,300 ரூபா. |
| போக்குவரத்துக்கு | 16,660ரூபா. |
| அழைப்பிதழ் (500), கட்அவுட் மற்றும் பெயர் பலகை, பனர் | 327,230 ரூபா. |
| மேடை, விருந்தினர் கதிரைகள், கார் | 450,000 ரூபா. |
| தையல் கூலி மற்றும் பொருத்து தலுக்கு | 75,000 ரூபா. |
| மாலைகளுக்கு | 15,140 ரூபா. |
| பொன்னாடை | 16,135 ரூபா. |
| தேசியக் கொடி (50) | 11,000 ரூபா. |
| மைக் ஸ்ரான்ரில் வைப்பதற்கான பூக்கள் | 4,000 ரூபா. |
| மலர்ச் செண்டு (பொக்கே) | 2,000 ரூபா. |
| மேசை விரிப்பு | 25,960 ரூபா. |
| கதிரை வாடகை மற்றும் போக்குவரத்து | 17,500 ரூபா. |
| நீர் விநியோகம் மற்றும் கழிவகற்றல் | 32,700 ரூபா. |
| பாம் மரம் | 10,400 ரூபா. |
| பூத் தொட்டிகள் | 6,400 ரூபா. |
| பான்சி குட்ஸ் | 31,568.40 ரூபா. |
| பிஸ்கட் மற்றும் தேநீர் | 18,250 ரூபா. |
| சிற்றுண்டி | 8,343 ரூபா. |
| பானங்கள் | 11,460 ரூபா. |
| மங்கள வாத்தியம் | 5,000 ரூபா. |
| பொது அறிவிப்பு முறைமை | 60,000 ரூபா. |
| பார்சல் உணவு | 490 ரூபா. |
| கூடாரம் | 45,000 ரூபா. |



(கோப்புப்படம்)

## மேட்டு நிலச் செய்கையின் அழிவு விவரம் சேகரிப்பு

அச்சுவேலி, மே 16
கடந்த கால போகத்தில் மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலப்பயிர்ச் செய்கையின் அழிவு விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. யாழ் மாவட்டத்தில் பெரும்பாக கமநல சேவை நிலைய பிரிவு வாரிய மேட்டு நிலப்பயிர்ச் செய்கையின் சேத விவரங்களை பதிவு செய்கின்றது.
தாழ் நில பயிர்ச்செய்கையான நெற்பயிர்ச்செய்கையில் வரட்சி தொடர்பான பாதிப்புக்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டது. அதே போன்று வெங்காயம், மிளகாய் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட சேதத்துக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அடுத்து அதுதொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன.
விவசாய சம்மேளனங்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், மற்றும் பெரும்பாக கமநல சேவை நிலைய அலுவலர்கள் தனித்தனியாக மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட சேத விவரங்களை திரட்டுகின்றனர்.
மேட்டுநில பயிர்ச்செய்கைக்கு கடந்த காலபோகத்தில் ஏற்பட்ட சேதவிவரங்கள் பதிவு செய்யப்பட்டு அவை ஒப்புநோக்கப்பட்டு சீர் செய்யப்பட்ட பின்னர் பெரும்பாக கமநல சேவை பிரிவு வாரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன என பெரும்பாக அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (ற-11)

## வெலிக்கடை படுகொலையின் சாட்சி இயற்கை எய்தினார்



யாழ்ப்பாணம், மே 16
தமிழ் மக்களின் மனங்களில் ஆறாவடுக்களில் ஒன்றான வெலிக்கடை சிறைப் படுகொலைச் சம்பவத்துக்குச் சாட்சியாக இருந்த ஜெயக்கொடி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது 63 வயதில் சென்னையில் இயற்கை சாவு எய்தினார்.
ஈழ மக்களின் 1983ஆம் ஆண்டு ஜீலை மாதம் நடைபெற்ற வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளை நேரில் கண்ட சாட்சியாகவும், அதனை அடுத்து மட்டக்களப்பு சிறையுடைப்பின் சாட்சியாகவும் இவர் உள்ளார். சாட்சியங்களை ஆவணமாகவும் பதிவு செய்து வைத்துள்ளார்.
யாழ்ப்பாணம் பாசையூரில் 1954ஆம் ஆண்டு ஜெயக்கொடி பிறந்தார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால போராளியும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினருமாக இவர் விளங்கினார். தமிழக மண்ணின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஈழத்து மக்கள் படும் அவலங்களையும் சிங்கள பேரினவாதிகளின் உண்மை முகங்களையும் வெளிச்சம் போட்டுக்காட்டியவர்.
தோழர் ஜெயக்கொடியின் இழப்பு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் அதன் தோழர்களுக்கும் மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்துக்கும் பேரிழப்பாகும். அன்னாரைப் பிரிந்து துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்தது. (ற-10)

# மடத்தடி வாள் வெட்டு வழக்கின் தீர்ப்பு இன்று

யாழ்ப்பாணம்.மே.16
வாள்வெட்டுச்சம்பவத்துடன்தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விளக்கமறியல் தீர்ப்புக்காக இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது.
2012ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மடத்தடியில் நடைபெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் எட்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுப் பின்பு தீர்ப்பு நாளுக்கு நிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
வழக்கின் தீர்ப்புக்கான நாள் நேற்று என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் மன்றுக்கு வந்தது. சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். அவர்களுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் சார்பில் முன்னிலையாகியிருந்தார்.
குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் கைவிரல் அடையாளம் சமர்ப்பிக்கப்படாததால் யாழ்ப்பாணம் நீதிவான் மன்று வழக்கின் தீர்ப்பை இன்று செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்து கட்டளையிட்டது.
கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்ப்புக்கான நாளாக மன்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றும் சந்தேகநபர்களின் கைவிரல் அடையாளம் சமர்ப்பிக்கப்படாததால் தீர்ப்பின் நாள் நேற்று என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நேற்றும் கைவிரல் அடையாளம் சமர்ப்பிக்கப்படாததால் இன்று தீர்ப்பின் நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-12)

# மறுக்கப்பட்ட தகவல் திடீரெனத் தரப்பட்டது

### கல்வி அமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான விவரங்கள், 'சிறப்புரிமை' காரணமாக வழங்க முடியாது என்று பதில் வழங்கப்பட்டிருந்த நிலையில், அவரது பயணங்கள் தொடர்பான விவரங்கள், கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனால் திடீரென வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு தகவல் அலுவலர், அமைச்சரின் சிறப்புரிமையுடன் தொடர்புடைய விடயம் என்பதால் விவரத்தை வழங்க முடியாது என்று பதில் வழங்கியிருந்தார்.

அதற்கு எதிராக, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் குறித்தளிக்கப்பட்ட அலுவலரான செயலாளர் இ.இரவீந்திரனிடம் மேன்முறையீடு செய்யப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய கல்வி அமைச்சின் செயலாளர், அமைச்சரின் சிறப்புரிமையுடன் தொடர்புடையது என்பதால் விவரம் வழங்க முடியாது எனவும், சட்டத்தின் 5 (ஓ) பிரிவுக்கு அமைவாக தகவல் வழங்குவது மறுக்கப்படுகின்றது என்றும் தெரிவித்திருந்தார்.

கடந்த 12 ஆம் திகதி தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழாக திடீரென அமைச்சரின் பயண விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி அனுப்பிய பதிலையே கல்வி அமைச்சின் செயலர் இப்போது அனுப்பியுள்ளார்.

கல்வி அமைச்சரின் பதிலில், கனடாவுக்கு இந்த ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வரையில் பயணம் மேற்கொள்ளப்பட்டது. கனேடிய தமிழ் பேரவையின் அழைப்பில் கலந்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார். அனைத்துச் செலவுகளும் கனேடிய தமிழ் பேரவையே ஏற்றிருந்தது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரையில் நோர்வேக்கு பயணம் மேற்கொண்டிருந்டேன். அன்னை பூபதி தமிழ் கலைக் கூடத்தின் அழைப்பில் சென்றிருந்தேன். இதற்கான செலவை, அவர்களே ஏற்றனர் என்று வழங்கியுள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார். (ந -5)

# சுகாதாரத் தொண்டர் நியமனம்; அரச தலைவரை அணுகுவேன்

### கே.கே.மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, மே 16

சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பாக அரச தலைவரை அணுகி சாதகமான தீர்வை வழங்க முயற்சிப்பேன். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார். 15 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டம் நேற்று 12 ஆவது நாளா தொடர்ந்தது.

அவர்களை நேற்று காலை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே.மஸ்தான் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சுகாதாரத் தொண்டர்கள் வாழ்வதற்காக போராடுகிறார்கள். இவர்கள் போர்க் காலத்தில் கடமையாற்றியுள்ளார்கள் கடந்த காலத்தில் இருந்த அரசில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. நியாயமற்ற வேலை வாய்ப்பு வழங்கல் போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன. கூட்டரசு யாரையும் பாதிக்காத வகையில் வேலை வாய்ப்புக்களை வழங்கும் என்று நம்புகின்றேன். ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது எனறு அறிகிறேன். இங்கு கல்வித் தகமை கவனத்தில் எடுக்கப்படுகிறது .

நீங்கள் பல ஆண்டுகள் பல கஸ்டங்களின் மத்தியில் வேலை செய்துள்ளீர்கள். அண்மையில் கொழும்பு சுகாதார அமைச்சர் சுகாதாரத் தொண்டர் நியமனம் பற்றி கதைத்துள்ளார். இதற்கு நல்ல முடிவை பெற்று தர நான் அரச தலைவரை அணுகவுள்ளேன். நல்ல முடிவு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

மைத்திரி அரசில் ஆரம்ப கட்டத்தில் கல்வித்தகமை கவனத்தில் எடுக்கப்படாது, சுகாதார தொண்டர்கள் நியமனம் வழங்கப்பட்டதாக சொல்கிறீர்கள். இதற்கான சுற்றறிக்கை மகிந்தவின் காலத்தில் வெளியிடப்பட்டது என்று சொல்கின்றீர்கள். நம்புகிறேன் அதுபற்றியும் நான் கதைக்கிறேன். உங்களுக்கு வேலை வாய்ப்பு அவசியம் என்பதை உணர்கின்றேன் - என்றார். (ந - 10, 402)

# வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கும் நிதி போதாது

### மாவட்ட திட்டம் தயாரித்தல் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 16

மீளக் குடியமர்ந்த குடும்பங்களின் வீடமைப்புக்கு அரசால் வழங்கப்படும் 8 லட்சம் ரூபா பயனாளிகளை மேலும் வறுமை நிலைக்குள்ளாக்கும். வீட்டுக் கட்டுமானம் நிறைவேறாது சீரழிவையே ஏற்படுத்தும்.

இவ்வாறு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட திட்டம் தயாரித்தல் கூட்டத்தில் கலந்து கொண்ட வலி. வடக்கு பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

"யாழ். மாவட்டத்தில் கடுமையான தகுதி விதிகளின் அடிப்படையில் பிரதேச செயலக ரீதியாக பயனாளிகளுக்கு வீடமைப்புத் திட்டம் வழங்கப்படுகிறது.

வெறும் 8 லட்சம் ரூபாவே பகுதி பகுதியாக வழங்கப்படுகிறது. பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு மீள்குடியேற்ற அமைச்சு 21 லட்சம் ரூபாவைச் செலவு செய்கிறது. அவ்வாறாயின் இனிவரும் காலங்களில் அரசு எட்டு லட்சம் ரூபா வீட்டுத் திட்டத்துக்கு பதிலாக 21 லட்சம் ரூபாவை வழங்க முன்வர வேண்டும்.

வெறும் எட்டு லட்சம் ரூபாவை மட்டும் வழங்கி அரச அதிகாரிகளையும் பயனாளிகளையும் சிக்கலில் மாட்டிவிட முனையக் கூடாது. மாவட்ட திட்டம் தயாரிக்கும் போது நிதிபோதாது என்ற கருத்து முனைப்பற்றது.

எவ்வளவு போதுமானது என்பதை இன்று நாம் 21 லட்சம் என தீர்மானித்துள்ளோம். அதன்படி ஒழுக முன்வர வேண்டும். இதேபோல மாற்றுத் திறனாளிகள் வேறு முள்ளந்தண்டு வடம் (உயிரிழை) பாதிக்கப்பட்டவர்கள் என்பது வேறு. முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களது விவரங்களை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக திரட்டி அவர்களுக்கு காணி வழங்கல் வீடு கட்டிக் கொடுத்தல், வாழ்வாதார உதவிகள் வழங்குதல் என பல திசைகளில் உதவ வேண்டும்" - என்று அங்கு வந்திருந்த அரச அதிகாரிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்தத் திட்டங்கள் யாவற்றையும் பரந்த அளவில் மீள்குடியேற்ற அமைச்சும் அரசும் மிகப்பொருத்தமான உயர்ந்த அளவில் தீர்மானித்து உதவ முன்வர வேண்டும்.

இல்லாவிடில் காலத்துக்கு காலம் அரசால் தயாரிக்கப்படும் 3 ஆண்டு நான்கு ஆண்டு திட்டம் போல ஐ.நா. அபிவிருத்தி நிறுவன பங்களிப்பில் தயாரிக்கும் ஐந்து ஆண்டு திட்டமும் கிடப்பில் போடப்படும் திட்டமாக மாறிவிடப்படாமல் இருக்க வேண்டும் என்பதை அரசு உயர்ந்த நோக்கில் செயற்படுத்தி வலுப்படுத்த முன்வரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந -50)



# கிறிஸ்ரி குகராஜாவின் நினைவு தினம் நேற்று

வவுனியா, மே 16

ரெலோ இயக்கத்தை சேர்ந்த மறைந்த இ.கிறிஸ்ரி குகராஜாவின் 19வது நினைவு தினம் நேற்றுக் காலை வவுனியா வைரவப் புளியங்குளத்தில் உள்ள குகராஜாவின் நினைவிடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கதின் தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதன் தலைமை தாங்கினார். கிறிஸ்ரி குகராஜாவின் உருவபடத்திற்கு முதலாவது மரலையை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அணிவித்தார். தொடர்ந்து அவரது உறவினர்கள் ரொரோ கட்சயின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் ரெலோகட்சியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வினோ நோகராதலிங்கம், ரெலோ கட்சி உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய செ.மயூரன், தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உட்பட பல்ரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். (ந - 10, 402)

# முறைப்பாடு பதிய சென்றவரை கொட்டன்களால் தாக்கிய குழு

பருத்தித்துறை, மே 16

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து திரும்பிய ஒருவர் இளைஞர் குழுவால் தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நடந்துள்ளது.

பருத்தித்துறை, கற்கோவளத்தைச் சேர்ந்த ஒருவர் பழைய முரண்பாடு ஒன்று தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றார். முறைப்பாடு பதிவு செய்து திரும்பிய போது பழைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகக் கொட்டன்களுடன் நின்றிருந்த சில இளைஞர்கள் அவரைத் தாக்கத் தொடங்கினர். அங்கு சிவில் உடையில் நின்ற பொலிஸார் சிலர் சம்பவத்தை அவதானித்து தாக்கிய இளைஞர்களைப் பிடிக்க முற்பட்டபோதும் அவர்கள் தப்பியோடினர் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கானவர் தாக்கியவர்களை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், சந்தேக நபர்களைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந - 10,26)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சில கிளினிக்குகள் இடைநிறுத்தம்

### சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று நோயாளர்கள் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, மே 16

சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்பட்ட சத்திரசிகிச்சைக்குப் பின்னரான காது, மூக்கு, தொண்டை கிளினிக் போன்றவை முன்னறிவித்தல் இன்றி நிறுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது என்று நோயாளர்கள் தெரிவத்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட நோயாளர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடைபெற்ற சத்திர சிகிச்சையின் பின்னரான கிளினிக்கில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்று வந்தனர். அந்தக் கிளினிக் கடந்த இரு வாரங்களாக நடத்தப்படவில்லை. வைத்தியர்கள் இடமாற்றல் பெற்றுச் சென்றுள்ளதால் கிளினிக் நடத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது என்று நோயாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கிளினிக் நடத்திய இரு வைத்தியர்கள் பதிலீடு வழங்கப்படாத நிலையில் இடமாற்றல் செய்யப்பட்டுச் சென்றுவிட்டனர். வைத்தியசாலையில் ஏற்பாடுகள் செய்யப்பட்ட கிளினிக்குள் மற்றும் விடுதிகள் வெளிநோயளர் பிரிவு போன்றவற்றில் மருத்துவர்கள் கடமையாற்ற வேண்டியுள்ளதால் சில கிளினிக்குகள் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த மாத இறுதியில் மேலும் மூன்று மருத்துவர்கள் மேல் படிப்புக்காகச் செல்லவுள்ளனர். சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இடமாற்றல் செய்யப்பட்டு இதுவரை விடுவிக்காத மருத்துவர்களை உடனடியாக விடுவித்து வைத்தியசாலையின் சேவையைத் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உரிய அதிகாரிடம் கோரப்பட்டுள்ளது" - என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (ந - 9)

# இலங்கையின் தாதியர் சேவை மூன்றாண்டுகளில் மோசமாகும்

## இலங்கை தாதியர் சங்கத் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, மே 16

அடுத்துவரும் மூன்று வருடங்களில் இலங்கையில் தாதியர் சேவை பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரும் என்று இலங்கை தாதியர் சங்கத் தலைவர் காமினி குமாரசிங்க எச்சரித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டுக்கு 74,270 தாதியர்கள் தேவைப்படுகின்றனர். அவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிக்கும் குறைவாக 31 ஆயிரம் பேரே இன்று பணியில் உள்ளனர். இந்தப் பற்றாக் குறையால் பணியில் உள்ளவர்கள் நான்கு மணித்தியாலங்கள் மேலதிக வேலைகளில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 5 ஆயிரம் தாதியர்கள் 2020இல் ஓய்வுபெறுவர். சுகாதார அமைச்சு தற்சமயம் போதுமான தாதியர்களை நியமிப்பதிலும் தவறிவருகின்றது. இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் இன்னும் மூன்று வருடங்களில் தாதியர் சேவையில் மிகப்பெரிய பற்றாக் குறை ஏற்படும் - என்றார். (ற)

## பாலியாற்றுப் பாலத்தை விரைந்து அமைக்க கோரிக்கை

மன்னார், மே 16

மன்னார் மாந்தை மேற்கு பாலியாற்றுப் பாலத்தை விரைவாக அமைக்க வேண்டும் என்று கிராமப் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பாலச் சீரமைப்புகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் மழை காலத்தில் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்து போக்குவரத்துத் தடைப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பாலக் கட்டுமான வேலைகள் நடைபெறுகின்ற போது பாலியாற்றின் மேற்குப் பகுதியில் வெள்ள நீர் பரவாமல் மண் அணை அமைப்பதற்கு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாந்தை மேற்கில் பாலியாறு பெருக்கெடுக்கின்ற போது ஐம்பது வரையான குடும்பங்கள் பாலியாற்று மேற்கில் பாதிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## போராட்டத்தில் பிறந்த நாள்

வவுனியா, மே 15

நிரந்தர நியமனம் கோரி வவுனியாவில் நடைபெறும் சுகாதாரத் தொண்டர்களின் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் போராட்டக் களத்தில் தனது பிறந்த நாளை நேற்றுக் கொண்டாடினார்.



நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த 4 ஆம் திகதி பிராந்திய வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாக வவுனியா சுகாதார தொண்டர்கள் முன்னெடுத்துள்ள கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 12 ஆவது நாளாகத் தொடர்கின்றது. வடக்கில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. எமக்கு நிரந்தர நியமனம் வழ்ங்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவ தில்லை.

கஷ்டப் பிரதேசங்களிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் சேவையாற்றிய எமது நியமனம் குறித்து இதற்கு முன்னர் பல போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த முறை எமக்கு உறுதியான தீர்மானம் வழங்கப் படும் வரை போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (ற-10)

## பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாட பாடசாலை அதிபர்களுக்கு அழைப்பு

கொழும்பு, மே 16

பாடசாலை அதிபர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு வருவதால் தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி ஆராய்வதற்காக நாடெங்குமுள்ள பாடசாலை அதிபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்புக்கு வரவழைக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 4,200 அதிபர்களுக்கு 2015ஆம் ஆண்டு பதவியுயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதுவரை அது நடைபெறவில்லை. மூவாயிரம் அதிபர்களுக்கு வழங்கப்படவேண்டிய நியமனங்களும் இது வரை நடைபெறவில்லை. அவர்களது சம்பளங்களில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிப்பதற்காக நாடெங்குமுள்ள சுமார் 11 ஆயிரம் அதிபர்கள் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ற)

## திருச் சொரூபம் மீட்பு

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் இறை இரக்க ஆலயத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன் இனம் தெரியாத நபர்களால் திருடப்பட்ட இறை இரக்க ஆண்டவர் திருச் சொரூபம் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது என்று அடம்பன் ஆக்காட்டி வெளி பங்குத்தந்தை அருட்தந்தை எ.டெஸ்மன் அஞ்சலோ தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் இனம் தெரியாத நபர்கள் ஆலயத்தில் உள்ள கண்ணாடிகளை உடைத்து இறை இரக்க ஆண்டவர் திருச் சொரூபத்தைத் திருடினர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் கருங்கண்டல் கிராமத்தில் உள்ள குளம் ஒன்றில் மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட சிலர் இறை இரக்க ஆண்டவர் திருச் சொரூபம் குளத்தில் காணப்பட்டதை அவதானித்துள்ளனர். அவர்களால் அடம்பன் பங்குத்தந்தைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட குறித்த திருச் சொரூபம் மீண்டும் அடம்பன் இறை இரக்க ஆலயத்தில் கொண்டு வரப்பட்டு மக்களின பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. (ற-5)


# அரசாங்க அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒப்பந்ததாரர்களினை பதிவு செய்தல் - 2017

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 06 பிரதேச செயலகங்களுக்குமான 2017 ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்கு ஏதுவாக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் அழைக்கப்படுகின்றார்கள். மேலும் விண்ணப்பபடிவம் 16.05.2017ஆம் திகதியிலிருந்து 31.05.2017 ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு முன்னர் கணக்கு கிளை, மாவட்ட செயலகம் முல்லைத்தீவில் ரூபா 500.00 இனை மீளளிக்க முடியாத வைப்பு பணமாக செலுத்தியும் தபால் மூலமாக பெற விரும்புபவர்கள் மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு எனும் பெயரிலுள்ள இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041979 இற்கு பணமாக வைப்பிலிட்டு உரிய வைப்புச் சீட்டை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 05.06.2017ம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கடித உறையின் (9"X4") இடது பக்கமேல் மூலையில் " ஒப்பந்த தாரர்களை பதிவு செய்தல் - 2017" எனக் குறிப்பிட்டு அரசாங்க அதிபர்" நிதிக் கிளை, மாவட்ட செயலகம், முல்லைத்தீவு" எனும் முகவரிக்கு கீழ்வரும் வகைகளிற்கு ஏற்ப உரிய பதிவு கட்டண தொகையுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

வழங்கல் மற்றும் சேவைகள் விவரம்

கட்டட நிர்மாணம், கட்டட திருத்த் வேலைகள் செய்தல், வீதி திருத்த வேலைகள், நீர் இணைப்புக்கள், மின் இணைப்புக்களை நிர்மாணித்தல், திருத்தம் செய்தல், அலுமினியப் பிரிப்பு பொருத்து வேலைகள், கதவு வேலைகள், கட்டடங்களிற்கு வர்ணம் பூசுதல் மற்றும் கட்டட வேலைகளுக்கான அனைத்துப் பொருட்கள் வழங்குதல்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2000000.00 இற்கு சமனான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2000000.00 இற்கு அதிகமானதும் 5000000.00 சமனான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5000000.00 இற்கு அதிகமானதும் 10000000.00 சமனான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5000.00 |

குறிப்பு :- உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற மற்றும் மேற் குறிப்பிட்ட நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யாத விண்ணப்ப படிவங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

**திருமதி றூ.கேதீஸ்வரன்**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.**
(c/29825)(11)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 . 10 . 1929



மறைவு 16 . 04 . 2017

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், மாங்குளம் மற்றும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

## கிருஸ்ணபிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்)

எமது குடும்பத்தலைவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து ஆறுதல் கூறி சகவழிகளிலும் உதவியவர்களுக்கும் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் பதாகை அச்சிட்டு வெளியிட்ட விலை மதிப்பீட்டு திணைக்களத்தினருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

அத்தருணம் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**"பொன்னகம்"**
**சித்தன்கேணி.**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.**



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வணிகமாணி பட்டப்படிப்பு (வெளிவாரி)
முதலாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் யூலை மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தங்களது பரீட்சை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| திகதி | விபரம் |
|---|---|
| 20.05.2017 | பரீட்சை விண்ணப்பப்படிவ விநியோகம் |
| 10.06.2017 | பரீட்சை விண்ணப்பப்படிவம் கையளிப்பதற்கான இறுதித் திகதி |
| 03.07.2017 | பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் |
| 15.07.2017 - 29.07.2017 | பரீட்சைக் காலம் |

பதிவாளர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தரராக கடமைபுரியும் **ஏரம்பு தேவகுமார்** அவர்களின் அன்புத் தந்தை

**நாகன் ஏரம்பு**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பு



**அமரர் நாராயணசாமி மகாலட்சுமி** (கிளி)

பிறப்பு
29.03.1936

இறப்பு
17.04.2017

கடந்த 17.04.2017 அன்று சிவபதமடைந்த நறுவிலடி ஒழுங்கை, வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் நாராயணசாமி மகாலட்சுமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.05.2017) புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி ஊறணி புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கலைச்சோலை, வல்வெட்டித்துறை.
தற்போதைய முகவரி:- நீர்வளைப்பிள்ளையார் கோயிலடி, 3ஆம் கட்டை, கொட்டுவத்தன், பொலிகண்டி.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்மகிழ
16 . 03 . 1941



கண்நெகிழ
18 . 04 . 2017

கடந்த 18.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் மனோரஞ்சிதம் குணரட்ணம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.05.2017 வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

பெரியவிளான்,
இளவாலை.

குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
24 . 04 . 1930



ஆண்டவன் அடியில்
30 . 05 . 2013

**பீதாம்பரம் ஜெகநாதன்**

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் (A.O) - நீர்ப்பாசனத் திணைக்களம்)

திதி: வைகாசி தேய்பிறை சஷ்டி (16.05.2017)

கண்ணிமையாய் எமைக் காத்து
சாதனைகள் பல புரிய வைத்தாய்
பார்போற்ற வாழ வைத்து
குமரனடியில் சேர்ந்து விட்டாய்
உன் நினைவுகள் உன் சந்ததியோடு என்றும்.......
ஆண்டுகள் நான்கல்ல யுகங்கள் நான்கானாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்...

071 621 0346
குடும்பத்தினர்.

# திருமலை எண்ணெய்க் குதங்களை ஐ.ஓ.சிக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு

கொழும்பு,மே 16

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை, இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சிக்கு வழங்கும் நடவடிக்கைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்வதற்கு இந்தியா கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளன.

நாட்டுக்குப் பெரும் இலாபத்தை ஈட்டும் இந்த எண்ணெய்க் குதங்களை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கே வழங்க வேண்டும் எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

2003 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், மொத்தமுள்ள 102 குதங்களில் 99 குதங்களை இந்தியன் ஒயில் நிறுவனத்துக்கு ஒப்படைக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் 6 மாதங்களுக்குள் குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அத்தகைய ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை.

ஐ.ஓ.சி. 2013 ஆம் ஆண்டில் இருந்து 16 குதங்களைப் பயன்படுத்துகிறது. இது எப்படி சாத்தியம் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபன தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பி உள்ளன.

இந்தியா, சீனா அல்லது வேறு யாருக்குக் கொடுக்கப்பட்டாலும் அதனை எதிர்த்து நாம் போராடுவோம் என்றும் கூட்டுதாபன தொழிற்சங்க வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ற-ஐ)

# தேசிய அரசின் முரண்பாடுகளுக்கு விரைவில் தீர்வு

தேசிய அரசில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய அரசின் இரு கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடிப்பதா? அல்லது முடிவுக்கு கொண்டு வருவதா? என்பதில் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை தேசிய அரசின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கைச்சாத்திட்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு, சுயாதீனமாக இயங்கவுள்ளோம் என்று சுதந்திரக் கட்சியினர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ற-ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**கனகராசா விமலா**



பிறப்பு
14.02.1960

இறப்பு
16.04.2017

அன்பு வழியில் எம்மை அரவணைத்து ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து இன்பமிகு நல்லறமாய் இல்லறத்தை ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
நாள்கள் முப்பத்தொன்று ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்.

6/1, மீனாட்சி அம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்

ஜீவதாஸ் குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்

பிறப்பு
30 . 09 . 1971



இறப்பு
02 . 04 . 2017

**அமரர் சிவபுண்ணியம் செல்வநாதன்**

02.04.2017 அன்று சிவபதமடைந்த வடமராட்சி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், நெல்லியோடை, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவபுண்ணியம் செல்வநாதன் அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும். எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுற்ற செய்தியறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை நெல்லியோடை அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தனிப்பட்ட அழைப்பு விடுக்கத் தவறியிருந்தால் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

நெல்லியோடை, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## இலங்கைக்கு மலேசியா கைகொடுக்கும்

*மலேசிய தலைமை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,மே 16

இலங்கையின் அரச சேவை முகாமைத்துவ நடவடிக்கைகளைத் தொழில்நுட்பமயப்படுத்துவதற்கு மலேசிய அரசு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும் என்று மலேசிய தலைமை அமைச்சர் நஜிப் ரஸாக் தெரிவித்தார். "ஒரே கரையோரம் ஒரே பாதை" என்னும் தொனிப் பொருளின் கீழ் சீன தலைநகர் பீஜீங்கில் நடைபெற்று வரும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீனா சென்றுள்ளதலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மலேசிய தலைமை அமைச்சர் நஜிப் ரஸாக்கை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்..

இந்தச் சந்திப்பில் இலங்கை மலேசிய நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தயாரிப்பதற்கான பின்னணி தொடர்பில் கருத்துகள் பரிமாறப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ)

# கட்சி கவனிக்காது இருந்தால் ஒதுங்குவதே எனக்குள்ள வழி

## இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கவலை

கொழும்பு,மே 16
"அதிகாரமற்ற இராஜாங்க அமைச்சராகவே இருந்து வருகிறேன். கட்சியில் உரிய கவனிப்பு இல்லையென்றால் அரசியலில் இருந்து ஒதுங்குவதைத் தவிர வேறு வழியில்லை".
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.
கொலன்னாவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
"இராஜாங்க அமைச்சராக இருக்கின்ற போதிலும், அமைச்சிலுள்ள சிற்றூழியர் ஒருவருக்கிருக்கும் அதிகாரம் கூட எனக்கு இல்லை. அரசுக்குள் அதிகாரமற்ற நபராக இருப்பதால் என்றாவது ஒருநாள் நீங்கள் எதிரணிப் பக்கம் செல்வீர்கள் தானே என்று ஒருவர் என்னிடம் கேட்டார். கொள்கை அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியில் அரசியல் செய்பவர்கள் நாங்கள்.
அந்தக் கட்சியில் உரிய கவனிப்பு இல்லையென்றால், அதில் இருந்து விலகுவது தான் வழி. மாறாக, எதிரணிப் பக்கம் செல்லமாட்டேன் என நான் பதிலளித்தேன். சட்டத்துறையில் இருந்திருந்தால்நான் அப்போது அரச தலைவர் சட்டத்தரணியாகியிருப்பேன். அரசியலில் ஈடுபட்டதால் அந்தச் சந்தர்ப்பமும் கை நழுவிப் போயுள்ளது - என்றார்.
(ந-ஐ)

### முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
### அறிவித்தல்
### பகிரங்க மூடிய கூறுவிலை விற்பனை

மு/க.தொ.கூ.சங்கங்களின் சமாசத்துக்குச் சொந்தமான நல்ல நிலையில் உள்ள மகேந்திரா உழவு இயந்திரம் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வாகன இலக்கம் | இனம் |
|---|---|
| NPRB - 6202 | மகேந்திரா உழவு இயந்திரம் |

*மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனைக்கு விடப்படும். இவ் வாகன விற்பனைக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் 500/= செலுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும். இப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

*மேற்கூறிய வாகனத்தைப் பார்வையிட சமாசத்தின் தலைமைக் காரியாலயம், மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரியில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை விடுமுறை தவிர்ந்த நாள்களில் பார்வையிட முடியும்.

*விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் சமாச தலைமைக் காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*இம்மூடிய கூறுவிலை விண்ணப்பங்கள் 16.05.2017ஆம் திகதி தொடக்கம் 29.05.2017ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். வாகனத்துக்கான மூடிய கூறுவிலைகள் அன்றைய தினம் 10.30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.

*மூடிய கூறுவிலைகள் கிடைக்காதவிடத்து அல்லது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக இருக்கும் இடத்து 29.05.2017ஆம் திகதி அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்குப் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

*மூடிய கூறுவிலை விண்ணப்பங்களுக்கும் அல்லது பகிரங்க ஏலவிற்பனை கேள்வி கோரலுக்கும் ஆரம்ப வைப்பாக 5000 செலுத்தப்பட வேண்டும். இப்பணம் மீளளிக்கக் கூடியது.

*இவ் வாகனத்துக்கு விண்ணப்பிப்போர் அல்லது கேள்வி கோருவோர் 29.05.2017ஆம் திகதி அன்றைய தினம் நண்பகல் 12.30 மணிக்கு முன்பாக முழுப்பணத்தையும் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தலைவர் / பொதுமுகாமையாளர்**
**முல்/கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம்**
**முல்லைத்தீவு**
**021 229 0008**

### விற்பனைக்குண்டு

யாழ். சிவதொண்டர் நிலையத்துக்கு முன்பாக அருகில் K.K.S. வீதியில் 2 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கட்டடம் அமைந்துள்ளது. கட்டடம் களஞ்சியசாலைக்கு பயன்படுத்தக்கூடியது. கட்டடம் வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ உள்ளது.

**077 385 1549**

### காணி விற்பனைக்கு

மீசாலைக்கிழக்கு சிற்றம்பலம் வீதி, நெல்லியடி முருகன் ஆலயத்துக்கு அருகில் பால் சேகரிப்பு நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. குடியிருப்புக்கு உகந்தது.

**077 615 0968**

### பொதுக்கூட்ட அறிவித்தல்
### வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம் வருடாந்த பொதுக்கூட்டம் 2017

ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 03.06.2017 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு வலி-வடக்கு பிரதேச செயலக பிரதிநிதிகளின் பிரசன்னத்துடன் நடைபெறும்.
**இடம்: வயாவிளான் மத்திய கல்லூரி மண்டபம்**
முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதனால் குடும்பத்திற்கு ஒரு உறுப்பினராவது வருகை தந்து குடும்பப் பதிவை உறுதிப்படுத்தவும்.
**குறிப்பு: வருடாந்த பொங்கல்-மடை 10.06.2017 சனிக்கிழமை நடைபெறும்.**
**செயலாளர்.**

### தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 31.03.2017க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 27.05.2017ம் திகதி காலை 10.30 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

### பாதுகாப்பு மற்றும் காரியாலய சுத்திகரிப்பு ஊழியர்கள் தேவை

மேற்படி பதவிகளுக்கு சேர்ந்து கொள்ள விரும்புவோர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 16 ஆம், 17ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நேரில் வந்து வேலையினை பெற்றுக் கொள்ள முடியும்.

அங்கர் செக்கூறிற்றி சேவிஸ்
114, செம்மணி றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

**077 239 2850/ 077 539 6350**

### காணி விற்பனைக்குண்டு

கோப்பாய் தெற்கு, இறைவரிப்பகுதியில், கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கும் இராஜபாத வீதி சந்திக்கும் இடையில், மேற்குப் பக்கமாக 10 அடிப்பாதையில் 2 ஆவது காணி 5 நிலப்பரப்பு உறுதிக்காணி தோட்டக் காணி, கிணறு, 4 தென்னை மரம், வாட்டர் டாங் உடன் விற்பனைக்கு உண்டு. காணியைப்பார்வையிட்ட பின்னர் தொடர்புகொள்ளவும்.
தரகர்கள் தேவையில்லை.

**075 045 5171**



### யாத்திரைத்தல திருவிழா
### புனித பிலிப்பு நேரியார் ஆலயம்
### செம்பியன்பற்று
### 17.05.2017 - 26.05.2017

17.05.2017 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

01. நற்கருணை வழிபாடு - 25.05.2017 (வியாழக்கிழமை) மாலை 5மணி
02. திருநாள் திருப்பலி - 26.05.2017 (வெள்ளிக்கிழமை) காலை 6.30மணி

யாத்திரிகர்களின் நலன்கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ் நிலையங்களில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

திருவிழாக்கால வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஆலய நிர்வாகத்துடன் 20.05.2017 அன்று காலை 10.00 மணிக்கு தொடர்பு கொள்ளவும்.

*புனிதரின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**பங்குத் தந்தையர்களும் பங்கு மக்களும்.**

DMI COMPUTER EDUCATION

### DMI COMPUTER EDUCATION

**புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

- COMPUTER APPLICATION ASSISTANT - NVQ3 (CAA) — 3 Months Full Time / 6 months Part time
- INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY TECHNICIAN -NVQ4 (ICT) — 6 Months Full Time

16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை பெற்று, நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கி கொள்ள விரும்புகின்றவர்கள் நேரடியாக **DMI COMPUTER EDUCATION** க்கு வருகைதந்து விண்ணப்பிக்கலாம்.

**கற்கைநெறி முடிவில் அரச, தனியார் துறையில் பயிற்சி பெற்றுதரப்படும். பயிற்சியின் பின் நேரடி வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும்.**

விண்ணப்ப முடிவு திகதி
31/05/2017

மேலதிக விபரங்களுக்கு.
**DMI COMPUTER EDUCATION**
NO.113, Kannathiddy Road, Jaffna
021 222 4403 / 0777 17 35 17

பதிவாளர்
16/05/2017

### அங்கத்தவர்களை இணைத்தலும் புதுப்பித்தலும்

கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் யாப்பு விதிக்கமைய கிளிநொச்சி மாவட்ட நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தரமாக வதியும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து அங்கத்துவம் கோரப்பட்டுள்ளது. சென்ற வருடம் வருடாந்த அங்கத்துவமாக இணைந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தமது அங்கத்துவப் பணமாக 100/= வைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஆயுள் சந்தா செலுத்தி சேர விரும்புபவர்கள் 2000/= வைச் செலுத்த வேண்டும்.

அங்கத்தவராக சேர விரும்புபவர்கள், புதுப்பித்துக் கொள்வோர் அனைவரும் 16.06.2017 ஆம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை , நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

Secretary
Patient Welfare Socity
District General Hospital
Kilinochchi.

**செயலாளர்**
**சி.ஜீவநாயகம்**
**077 804 9166**

# பிறிமியர் என்டெர்பிறைசெஸ்

* இலத்திரனியல் தராசு மற்றும் பில் மெசின் விற்பனைக்கு உண்டு.
* இலகுத்தவணை முறையில் பெற்றுக்கொள்ள முடியும்.
* திருத்தம் மற்றும் சேர்விஸ் செய்து தரப்படும்.




**075 041 1677, 076 362 6615**
பருத்தித்துறை வீதி, குஞ்சர்கடைச் சந்தி, கரணவாய்.கரவெட்டி.

# வன்னியிலிருந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு இன்னமும் வீடில்லை

## தென்மராட்சிப் பிரதேசத்திலேயே இவ்வாறு அதிகம் பேர் என சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மே 16

வன்னியிலிருந்து திரும்பி யாழ்ப்பாணத்தில் மீள்க்குடியமர்ந்தவர்களுக்கு முன்னுரிமை யின் அடிப்படையில் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன. எனினும் இன்னமும் வீடுகள் கிடைக்காத நிலையில் பலர் இருக்கின்றனர். தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகமானவர்கள் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்று, போர் முடிவின் பின்னர் அருணாசலம் முகாமிலிருந்து முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் மீசாலை கிழக்கில் குடியமர்ந்த கிருஸ்ணபிள்ளை விஜயகுமார் (வயது 50) தனக்கு இன்னமும் வீடு கிடைக்கவில்லை என்று ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

"1995 ஆம் ஆண்டு தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால் சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிளாலிக் கடலேரி ஊடாக வன்னிக்குச் சென்றோம். அங்கும் இறுதிக் கட்டப் போரில் பல அவலங்களை எதிர்கொண்டோம். உறவுகளை இழந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம். முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் இங்கு கொண்டு வந்து விடப்பட்டோம். சொந்த மண்ணுக்கு வந்து விட்ட சந்தோசம் ஏற்பட்ட போதிலும் நாங்கள் வசித்த வீடு கற்குவியலாக காணப்பட்டது. எமது சொந்த நிலத்திற்குள் கொட்டில் அமைத்து இன்று வரை வசித்து வருகின்றோம். மீளக்குடியமர்ந்தபோது வழங்கப்பட்ட தறப்பாள் இன்று வரை எம்மைக் காப்பாற்றி வருகிறது.

வன்னியிலிருந்து மீளக்குடிய மர்ந்தவர்களுக்கு வீடமைப்புத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதும் கடந்த 7 வருடங்களாக வீடு கிடைக்கவில்லை. எமது பிள்ளைகள் குப்பி விளக்கிலேயே படிக்கிறார்கள். நாளாந்தக் கூலி வேலை செய்யும் நாம் பொருள்களின் விலைவாசி அதிகரிப்பினால் நிரந்தர வீடு அமைக்க முடியாமல் தத்தளிக்கின்றோம். வருடாவருடம் வீடமைப்புத் திட்டத்திற்காக எமது பெயர்கள் பதிவு செய்யப்படுகின்ற போதிலும் இறுதிப் பட்டியலில் எமது பெயர் நீக்கப்பட்டு விடுகிறது. ஏன் என்ற காரணம் எமக்குத் தெரியவில்லை. எல்லோரையும் போல நிரந்தர கல்வீட்டில் வாழ வேண்டுமென்ற ஆசை எமக்கு இருக்கின்றது." என்று ஆதங்கத்துடன் கூறினார் விஜயகுமார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 55 குடும்பங்கள் வன்னியிலிருந்து இங்கு வந்து மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தியாவிலிருந்து 119 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தியாவிலிருந்து வந்த குடும்பங்களில் 17 குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த வர்களில் பெரும்பாலானவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-5,9)

# இடுப்புப் பகுதி சிதைந்து இருந்தது கணவர் அடையாளம் காட்டினார்

## லில்லி மேரி கொலை வழக்கில் சாட்சியங்கள் பதிவு

யாழ்ப்பாணம்.மே.16

இடுப்புப் பகுதி சிதைந்து காணப்பட்டது. முகம் அடையாளம் காணமுடியாமல் இருந்தது. உடல் முழுவதும் மணலால் மூடப்பட்டிருந்தது. கணவர் தான் இது தன்னுடைய மனைவி என்று அடையாளம் காட்டினார்.

இவ்வாறு சாட்சியமளித்தார் மார்டீன் வீதியில் உள்ள வீட்டின் உரிமையாளரான வயோதிபப் பெண் லில்லி மேரிக் கொலை வழக்கின் 10ஆவது சாட்சி நீதிபதி வசந்தசேனன். யாழ்ப்பாணம் மார்டீன் வீதியில் வீட்டின் உரிமையாளரான வயோதிபப் பெண் லில்லிமேரியைக் கொலை செய்த வழக்கின் சாட்சியப் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 9, 10 ஆவது சாட்சிகளின் சாட்சியங்கள் நேற்று யாழ்ப்பாணம் மேல் மன்றில் மன்றின் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டன. மன்றில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஸாந் முன்னிலையாகியிருந்தார். எதிரி தரப்பில் சட்டத்தரணி ரஞ்சித்குமார் முன்னிலையாகியிருந்தார்.

நீதிபதி வசந்தசேனன் சாட்சியமளித்தார்.

85வயதுடைய பெண் ஒருவர் கடந்த 2 மாதங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார். தற்போது ஜெரோம் என்பவர் அந்தப்பெண்ணை தொண்டையை நெரித்து கொலை செய்துள்ளார். உடலத்தைப் புதைத்துள்ளார் என்று றொக்சி என்பவர் தமது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். உடலைத் தோண்டி உடல் கிடைத்தால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு கோரியிருந்தனர். எனக்கு இந்தத் தகவல் தொலைபேசி மூலமாக கிடைத்தது.

நான் அங்கு சென்ற பின்னர் கால் அடி தோண்டப்பட்டது. அதற்கு மேல் தோண்ட முடியாமல் போகவே இரண்டு வேலையாள்களை வைத்து தோண்டப்பட்டது. உடல் காணப்பட்டது. இடுப்புப் பகுதிகள் சிதைந்து காணப்பட்டது. நெஞ்சுப்பகுதியில் அணிந்திருந்த உடைகளும் காணப்பட்டது. முகம் அடையாளம் காணமுடியாமல் இருந்தது. உடல் மண்ணால் மூடப்பட்டிருந்தது. உடலம் 4அடி இருக்கும்.

உடலத்தை எடுத்து பொலித்தீன் பையால் பொதி செய்து வைத்தியசாலைக்கு அனுப்பினோம். உடலத்தை கணவர் தன்னுடைய மனைவி என்று அடையாளம் காட்டினார். என்றார்.

9ஆவது சாட்சியான சட்ட வைத்திய அதிகாரி இரட்ணசிங்கம் சாட்சியமளித்தார்.

12ஆம் திகதி மார்ச் மாதம் 2009ஆம் ஆண்டு குறித்த உடற்கூற்றுச் சோதனை மதியம் 12மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.


வீட்டின் 30 சென்றிமீற்றர் தூரத்தில் உடலம் புதைக்கப்பட்ட இடம் காணப்பட்டது. அந்த இடத்தில் ஒரு அடி ஆழத்தில் தோண்டும் போது வலது பக்கவாட்டில் இரண்டு கைகளும் கால்களும் மடிந்த நிலையில் உடலம் காணப்பட்டது. தலைப் பகுதி வீட்டை நோக்கியதாகக் காணப்பட்டது. உடலம் மிகவும் நுணுக்கமான முறையில் தூக்கி எடுக்கப்பட்டது. உடலத்தை டினேஸ்ரூபன், பிரசன்னா என்பவர்கள் அடையாளம் காட்டினார்கள். உடலம் எடுக்கும் போது நானும் நீதவானுடன் நின்றேன்.

உடலத்தின் இடது பக்க தலையில் ஒரு கண்டல் காயமும், உடல் இழையங்கள் அழுகிய நிலையிலும், முழு உடலும் ஈரலிப்புத் தன்மையுடனும் காணப்பட்டது. கழுத்து திருகப்பட்டிருந்தது உள்ளே மொட்டையான விசையால் தாக்கப்பட்டிருந்தது. தலையில் காயம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. உடனடியாக இறப்பை ஏற்படுத்தக்கூடிய காயங்களாக அந்தக் காயங்கள் இருந்தன. என்றார்.

சாட்சியப் பதிவு நிறைபெற்றது.

மேல் மன்றின் நீதிபதி சாட்சியங்களின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் முதல் தோற்றளவில் சாட்சியங்கள் காண்பிக்கப்பட்டுள்ள நிலையில் இனி எதிரி தரப்பு சாட்சியங்கள் அளிக்கலாம் என்று மேல் மன்று நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டார். எதிரி தரப்பு சாட்சிகளுக்காக இவ்வழக்கை 7ஆம் திகதி ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டார். (ற-12)

# மரண அறிவித்தல்



மலர்வு: 01.09.1951 உதிர்வு: 13.05.2017

## சங்கரப்பிள்ளை சோதிலிங்கம்

**(மணியம்)**

**(பிரபல வாகன வர்த்தகர்)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சோதிலிங்கம் (மணியம்) 13.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருக்குமார் மற்றும் தவக்குமார் (பாபு - லண்டன்), பபிதா (லண்டன்), விஜயகுமார் (சசி), சஜிதா (சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூறி (லண்டன்) அஜெந்தன் (லண்டன்), கிருஸ்ணலதா, சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அனூஸ், அஸ்வின், கீர்த்தன், அஸ்வீ (லண்டன்), பிரனாவ், நிதூஸ், டிவ்யா (சங்கானை) ஆகியோரின் பேரனும், திலக்ஷனின் (லண்டன்) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

**104, வல்லை றோட், சங்கானை.**

**தொ.பே: 077 44 97 103**

# சு.க. சார்பான பதவிக்கு அமைச்சர்கள் கடும் போட்டி





கொழும்பு, மே 16
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நியமிக்கப்படவுள்ள அமைச்சரவை இணைப்பேச்சாளர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு, அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர மற்றும் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுவதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

கூட்டரசின் அமைச்சரவைப் பேச்சாளராக ஆரம்பத்தில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நியமிக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளராக இருந்த அமைச்சர் கயந்த கருணாதிலக்கவையும் உள்வாங்கும் வகையில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் பதவி உருவாக்கப்பட்டது. ராஜிதவும், கயந்தவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர்களாகச் செயற்பட்டு வந்தனர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பொறுப்பை அமைச்சர் கயந்தவும்; கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொறுப்பை ராஜிதவும் நிறைவேற்றி வந்தனர்.

தொழிற்சங்கங்களின் போராட்டங்களின்போது அத்தியாவசிய சேவைகள் முடங்காமல் இருக்கும் வகையில், அதை முன்னெடுப்பதற்காக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா தலைமையில் சிறப்புச் செயலணி அமைக்கும் விவகாரத்தால் ராஜிதவுக்கும், சுதந்திரக் கட்சி அமைச்சர்களுக்குமிடையிலே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதையடுத்து, அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்த சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் தமது கட்சியின் சார்பில் அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கோரியிருந்தனர். அதன் அடிப்படையில் சுதந்திரக் கட்சியின் சார்பிலும் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

ஆரம்பத்தில் முன்னாள் அமைச்சரவைப் பேச்சாளராகச் செயற்பட்ட அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவின் பெயர் இந்தப் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டது. அதற்கு அவர் பச்சைக்கொடி காட்டவில்லை. இதையடுத்து அந்தப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு எஸ்.பிக்கும், தயாசிறிக்குமிடையே போட்டி நிலவுவதாக அறியமுடிகின்றது.

இந்த வாரம் வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படுவார். புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், புதியவர் பங்கேற்பார் என்றும் தெரியவருகின்றது. தனது தரப்புப் பேச்சாளர் விவரத்தை சுதந்திரக்கட்சி உத்தியோகபூர்வமாக இந்த வாரம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ -5)



## மோடியுடன் இரகசிய சந்திப்பையே மகிந்த நடத்தினார்

ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே 16
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நடத்திய பேச்சு இரகசியமானது.

இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியத் தலைமை அமைச்சரை மகிந்த ராஜபக்ச கடந்த வியாழக்கிழமை இரவு சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். மகிந்த ராஜபக்சவின் கோரிக்கையை ஏற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இது குறித்து மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவரான ஜி.எல்.பீரிஸ் இந்திய ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்தியத் தலைமை அமைச்சருடன் மகிந்த ராஜபக்ச நடத்திய பேச்சு இரகசியமானது. அதுபற்றி வெளிப்படுத்த முடியாது. இதனை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். கடைசி நேரத்தில் நாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியத் தலமை அமைச்சர் எங்களைப் பின்னிரவில் வரவேற்றார்" - என்றார். (ஐ)

அரசியல் பழிவாங்கல்கள் குறித்து

## புதிய அமைப்பை உருவாக்க மகிந்த அணியினர் தீர்மானம்



கொழும்பு, மே 16
2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பதவிக்கு வந்த கூட்டரசு 'இதுவரை மேற்கொண்ட அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுப்பதற்காக' 'அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களின் தேசிய அமைப்பு' என்ற பெயரில் அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு மகிந்த அணியினர் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் மகிந்த அணி ஆதரவுக் கட்சிகளின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவரது இல்லத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே, இந்தப் புதிய அமைப்பை உருவாக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் முன்னாள் அரச தலைவர், அவரது குடும்ப உறுப்பினர்கள், அதிகாரிகள் உட்படப் பலர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகினர். இந்தப் பழிவாங்கல்கள் இன்னமும் தொடர்கின்றன. இந்த அராஜகத்தை முறியடிக்கும் நோக்கிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்படவுள்ளது என்று மகிந்த அணி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ - 5)

## நீதிமன்றத் தடையுத்தரவை ஏற்க மறுத்த மருத்துவருக்கு மறியல்

கொழும்பு, மே 16
தம்பதெனிய மருத்துவமனையின் மருத்துவரையும், அவரது தந்தையையும் விளக்கமறியலில் வைக்குமாறு குளியாப்பிட்டி நீதிவான் ருவன் தம்மிக்க திசாநாயக உத்தரவிட்டார்.

குளியாப்பிட்டி நீதிமன்றம் வழங்கியிருந்த இடைக்காலத் தடையுத்தரவொன்றை ஏற்க மறுத்ததுடன், அந்தத் உத்தரவை விநியோகிக்கச் சென்ற பொலிஸ் கொன்ஸ்டபிளைத் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குடும்பப் பிரச்சினையொன்று தொடர்பாக மருத்துவரின் சகோதரர் குளியாப்பிட்டி நீதிமன்றில் வழக்குத் தொடுத்திருந்தார். அது தொடர்பில் நீதிமன்றம் விடுத்த இடைக்காலத் தடையுத்தரவை இவர்கள் ஏற்க மறுத்தனர். தீர்ப்பை விநியோகிக்கச் சென்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தரையும் காரசாரமாகத் திட்டினர் என்றும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குமாறு அவர்களது சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை நிராகரித்த நீதிவான், அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவைப்பிறப்பித்துவழக்கை ஒத்தி வைத்தார்.

(ஐ - 5)

## முதலீட்டாளர்களுக்கு சிறப்பு வரிச்சலுகை

கொழும்பு,மே 16
நாட்டில் முதலீட்டாளர்களின் வருகையை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு சிறப்பு வரிச்சலுகைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். வருடாந்தம் 5 தொடக்கம் 6 பில்லியன் டொலர்கள் வருமானத்தை ஈட்டக் கூடிய முதலீடுகள் தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து, அரசு அவர்களுக்கான சகல வசதிகளையும் வழங்கும். குறித்த வரிச்சலுகை தொடர்பான சட்டவரைபு, விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நிதியமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# பழுதடைந்த உலங்கு வானூர்தியைத் திருத்துவதற்கு புதுடில்லியில் இருந்து நிபுணர்கள் வருவர்

இந்திய அரசு தெரிவிப்பு



கொழும்பு,மே 16
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்துக்குப் பாதுகாப்பு வழங்க கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்தியைத் திருத்துவதற்கு புதுடில்லியில் இருந்து நிபுணர்களை அனுப்புவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது. கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எம்.ஐ17 ரக உலங்கு வானூர்திக்குப் பொலிஸார் தொடர்ந்தும் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

இந்தியத் தலைமை அமைச்சர் கண்டியில் இருந்து கட்டுநாயக்க புறப்பட்டபோது, இந்த உலங்கு வானூர்தி பழுதடைந்தது. அதனால் அதனை அங்கேயே விட்டு விட்டு ஏனைய உலங்குவானூர்திகள் மூலம் இந்தியத் தலைமை அமைச்சரும், அவரது குழுவினரும் கட்டுநாயக்க சென்று புதுடில்லி திரும்பினர். இலங்கை வானூர்திப் படையினர் வசமுள்ள எம்.ஐ.17 ரக உலங்கு வானூர்தி பழுடைந்த நிலையில், கண்டியில் தரித்து நிற்கிறது. அதனைத் திருத்துவதற்கு இலங்கை வானூர்திப்படையின் பொறியியலாளர்கள் முன்வந்த போதிலும், இந்தியா அதனை ஏற்கவில்லை. புதுடில்லியில் இருந்து தொழில்நுட்பக் குழுவினரை விரைவில் அனுப்பி, அதனைத் திருத்தி எடுத்துச் செல்வதாக அறிவித்துள்ளது. இந்தியத் தலைமை அமைச்சரின் பயணத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்ட உலங்கு வானூர்தியில் சிறப்புப் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதுபற்றிய இரகசியங்கள் கசிந்து விடக் கூடாது என்பதற்காகவே, இலங்கை வானூர்த்திப் பெற படையினரது உதவியை இந்தியா விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கிடையே, இந்தியத் தலைமை அமைச்சரின் பயணத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு வானூர்தியிலும் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டது. எனினும், அது உடனடியாகவே இந்தியத் தலைமை அமைச்சரின் குழுவில் இருந்த தொழில்நுட்பக் குழுவினரால் சீர்படுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



உலகின் மீது இணையத் தாக்குதல்

## மற்றுமொருமுறை நடக்கும் என உலக நாடுகள் அச்சம்

லண்டன், மே 16
உலகமெங்கும் உள்ள பல்லாயிரக்கணக்கான நிறுவனங்கள் மற்றும் அரச இணையத் தளங்கள் மீது நடத்தப்பட்ட 'ரான்சம்வேர்' இணையத் தாக்குதல்கள் இன்னும் சில தினங்கள் தொடர்ந்து நடத்தப்படலாம் என்று பிரிட்டன் அச்சம் வெளியிட்டது.
அண்மையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உலகெங்கிலும் உள்ள 99 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்களின் மீது இந்த இணையத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமது இணையத் தளங்களை வலுவாகக் கண்காணிக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, ஸ்பெய்ன் நாடுகளிலும் இந்தத் தாக்குதல் உணரப்பட்டுள்ளது. தற்காலிகத் தீர்வின் அடிப்படையில் தாக்குதலில் இருந்து மீண்டுள்ள போதிலும் அடுத்த சில தினங்களில் மீண்டும் மீண்டும் சில தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று பிரிட்டன் தரப்பிலிருந்து அச்சம் வெளியிடப்பட்டது. (ம)




## மக்ரோன் - மெர்க்கல் இந்தவாரம் சந்திப்பு

பரிஸ், மே 16
பிரான்ஸ் அதிபர் மக்ரோன், ஜேர்மனி அதிபர் மெர்க்கல் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இந்த வாரம் நடைபெறவுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
பிரான்ஸ் அதிபர் தேர்தல் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மக்ரோன் வெற்றிபெற்றார். நேற்றுமுன்தினம் அவர் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார். இதையடுத்து அவரது உத்தியோகபூர்வ பயணங்களின் திகதிகள் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் மக்ரோன் தனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை ஜேர்மனிக்கு மேற்கொள்ளவுள்ளார்.
மக்ரோன் தனது தேர்தல் பரப்புரையில், பிரான்ஸ் தற்போது எதிர்கொள்ளும் வேலையற்றவர்கள் பிரச்சினையை தான் வெகுவாகக் குறைப்பேன் என்று வாக்குறுதி வழங்கினார். இந்தத் திட்டத்துக்கு மெர்க்கல் பெரும் ஆதரவைத் தெரிவித்தார்.
பிரான்ஸின் வேலையற்றவர்கள் பிரச்சினையை எதிர்கொள்ள ஜேர்மனி முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று மெர்க்கல் உறுதியளித்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே மெர்க்கல் - மக்ரோன் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.
மக்ரோன் அடுத்ததாக அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்திக்க அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ கருத்துக்கள் எவையும் வெளியாகவில்லை. (ம)

## அரசியலுக்கு வருவதை கடவுளே தீர்மானிப்பார்

ரஜனி நேற்றுத் தெரிவிப்பு

சென்னை, மே 16
"நான் அரசியலுக்கு வருவதைக் கடவுளே தீர்மானிப்பார்" இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் திரையுலக சுப்பர் ஸ்டார் ரஜனி.
ரஜனிக்கும் அவரது ரசிகர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று சென்னையில் நேற்று இடம்பெற்றது. அப்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"நான் அரசியலுக்கு வருவதென்பது



அடிக்கடி பேசுபொருளாகிறது. இந்த விடயத்தில் முடிவெடுக்கும் சக்தி கடவுளுக்கு மட்டமே உள்ளது. அவ்வாறு அரசியலுக்கு வர நேர்ந்தால் பணம் சம்பாதிக்க நினைப்பவர்களை அருகேகூட சேர்க்கமாட்டேன்" என ரஜனி மேலும் தெரிவித்தார். (ம)

## தமிழக அரச பேருந்துகள் இயங்கவில்லை நேற்று

சென்னை, மே 16
ஊதிய ஒப்பந்தம், நிலுவைத் தொகை ஆகியவற்றை வலியுறுத்தி தமிழக அரச போக்குவரத்துக் கழகத்தினர் காலவரையற்ற போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர். தமிழக அரசுக்கும் போக்குவரத்துக் கழகத்துக்கும் இடையில் ஏழு சுற்றுக்களாக நடந்த பேச்சு தோல்வியடைந்ததை அடுத்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது தமிழக போக்குவரத்துக் கழகம். இதனால் தமிழகத்தில் நேற்று பெரும் போக்குவரத்துச் சிரமம் ஏற்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## அமைதிக் வடகொரிய அச்சுறுத்த

ஐ.நா. சபை கொதிப்

வொஷிங்டன், மே 16
உலக அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக வடகொரியா விளங்குகிறது என்று ஐக்கிய நாடுகளை சபை கண்டனம் தெரிவித்தது.
அமெரிக்காவினதும் உலக நாடுகளினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வடகொரியா நேற்றுமுன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) புதிய ஏவுகணைச் சோதனை நடத்தியது. தலைநகர் பியாங்யாங்கில் உள்ள குசாங் பகுதியில் இருந்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட 2ஆயிரம் கிலோமீற்றர் தூரம் பயணித்துஜப்பான்கடலில்சென்று ஏவுகணை விழுந்தது என்று மேலும் தெரிவிக்கப்படு கிறது.
வடகொரியாவின் ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபையும், ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டே இருந்தது. வடகொரியாவிடம் இருந்து தம்மையும் கொரியத் தீபகற்பத்துடன் தொடர்புபடும் தமது நட்பு நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ளவும் கொரியத் தீபகற்பத்தில் தனது போர்க் கப்பல்களை



நிறுத்தியுள்ளது அமெரிக்கா. இதனால் அந்தப் பிராந்தியத்தில் போர்ப் பதற்றம் நிலை கொண்டுள்ளது. இதனால் வடகொரியா அத்துமீறல்களை மேற்கொள்ளாது என்று கருதப்பட்ட நிலையில் உலக எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதனை நடத்தியது வடகொரியா.
"உலக நாடுகளுடன் வடகொரியா இணைந்தும் இணங்கியும் செயற்பட வேண்டும். அந்த நாடு தனது அணுவாயுதக் கொள்கைகளையும் திட்

டங்களையும் ...
டும்" என்று ஐக்...
சபையின் கண்...
பில் குறிப்பிடப்ப...
முன்னதாக, இ...
னையை அடுத்...
ரியா மீது கடும்...
ரத் தடைகளைக்...
ருவதற்கு உலக...
அழைப்பு வி...
அமெரிக்கா. அ...
ரின் உத்தியோக...
மான வெள்ளை...
யின் செய்தித்...
சீன் ஸ்பைசர்...
விப்பை வெளியி...



# உலக நாடுகளை இணைக்கும் திட்டம்; சீனாவில் நேற்று மாநாடு




பீஜிங், மே 16

ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளை இணைத்து சீனா மேற்கொள்ளவுள்ள மிகப்பெரும் பொருளாதாரத் திட்டம் தொடர்பான உலகத் தலைவர்கள் மாநாடு சீனாவின் பீஜிங் நகரில் நேற்று ஆரம்பமானது.

தனது பொருளாதார வர்த்தகத் தொடர்புகள் மற்றும் வலையமைப்பைச் சீனா பலமடங்கு விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்படி ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் விதத்தில் 'சில்க் ரோட்' என்ற பெயரில் பெரும் பாதைகளை அமைக்கவுள்ளது.

இந்தப் பாதைகளின் மூலம் ஒவ்வொரு நாடும் மற்றைய நாட்டுடன் மிகக்குறைந்த செலவில் போக்குவரத்துச் செய்ய இயலும். இந்தப் பாதைகளின் மூலம் தனது உற்பத்திப் பொருள்களை உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வீதத்தை பலமடங்கு அதிகரிக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான மாநாடு நேற்று நடைபெற்றது. திட்டத்துக்கு உடன்பட்ட 29 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

"உலகளாவிய திறந்த பொருளாதாரா தளத்தை நாம் உருவாக்க வேண்டும். அது நிலைத்து நிற்கவும், வளர்ச்சி பெறவும் உதவ வேண்டும். நாம் இணைந்து ஒரு கூட்டுச் சூழலை உருவாக்க வேண்டும். அது, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு விதிகளில் ஒரு நியாயமான, சமமான மற்றும் வெளிப்படையான அமைப்பாகத் திகழும்" எனச் சீன அதிபர் ஜின் பிங் தெரிவித்தார்.

இந்தியாவின் காஸ்மிர் (ஆக்கிரமிப்பு) பகுதி வழியாகவும் வீதி செல்லவுள்ளதால் திட்டத்தை இந்தியா புறக்கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



ளையும் கைவிட வேண்
ன்று ஐக்கிய நாடுகள்
ன் கண்டனக் குறிப்
ிப்பிடப்பட்டது.
தாக, இந்தச் சோத
ய அடுத்து, வடகொ
து கடும் பொருளாதா
டகளைக் கொண்டுவ
கு உலக நாடுகளுக்கு
ப்பு விடுத்துள்ளது
க்கா. அமெரிக்க அதிப
ந்தியோகபூர்வ இல்லா
வெள்ளைமாளிகை
சய்தித் தொடர்பாளர்
பைசர் இந்த அறி
வெளியிட்டார். (ம)

# ஏமனில் கொலராத் தாக்கம் 115 பேர் பரிதாப உயிரிழப்பு

## நோயாளிகளைப் பராமரிப்பதில் மருத்துவமனைகள் அவதி



சனா, மே 16

ஏமனில் கொலரா நோய் பரவி வருவதை யடுத்து கிட்டத்தட்ட 120 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 8 ஆயிரத்து 500 பேர் நோயின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர்.

இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் அச்சம் வெளியிடப்பட்டது.

கடந்த மாதம் இறுதி வாரத்தில் இருந்தே நோயின்தாக்கம்மிகவும்தீவிரத்தன்மை யுடன் பரவி வந்தது என்று சொல்லப்படுகிறது. ஏமனில் ஓராண்டுக்குள் இரண்டாவது முறையாகக் கொலரா நோய் பரவியுள்ளது.

நோயாளிகளின் சடுதியான அதிகரிப்பால் ஒரே படுக்கையில் 4 கொலரா நோயாளிகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவசர நிலையை அடுத்து, தெற்கு சூடான், நைஜீரியா, சிரியா ஆகிய நாடுகளுடன் மனிதாந்த நெருக்கடி மிகுந்த பட்டியலில் உலக சுகாதார அமைப்பு ஏமனையும் சேர்த்துள்ளது. (ம)

# எவரெஸ்டில் எட்டு தடவைகள்; நேபாளப் பெண் புதியசாதனை

எவரெஸ்ட் சிகரத்தில் எட்டு தடவைகள் ஏறி நேபாள பெண் புதிய சாதனை படைத்தார்.

நேபாளத்தைச் சேர்ந்த மலை ஏறும் வீராங்கனை லாக்பா செர்பா. இவருக்கு 44 வயது. 3 குழந்தைகள் உள்ளனர். 2000ஆம் ஆண்டில் முதல்முறை எவரெஸ்டைத் தொட்டார். தனது முதல் குழந்தை பிறந்து வெறும் எட்டு மாதங்களேயான நிலையில் எவரெஸ்டைத் தொடும் முயற்சியில் அவர் வெற்றிபெற்றார்.

அதன் பின்னர் அவருக்கு மலை ஏறும் ஆர்வம் அதிகரித்தது. எனவே தொடர்ந்து இரண்டாவது தடவை எவரெஸ்டைத் தொட்டபோது 2 மாத கர்ப்பிணியாக இருந்தார். மிக அண்மையில் எட்டாவது தடவையாகவும் ஏறியுள்ளார். இதன்மூலம் அதிக தடவைகள் எவரெஸ்டை அடைந்த பெண் என்ற சாதனையை அவர் படைத்தார். (ம)





உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரா[illegible]ாப்பரசர் பிரான்சிஸ், போர்த்துக்கலுக்கு தற்போது பயணம் மேற்கொன்[illegible]ாளார். இது தொடர்பான ஒளிப்படங்கள் பல சமூக வலை[illegible]ாங்களில் வைரலாகப் பரவி வருகின்றன. (ம)

# கைதிகள் மீது சூடு 17 பேர் உயிரிழப்பு

சென்னை, மே 16

பசிபிக் பெருங்கடலிலுள்ள பப்புவா நியூகினியா நாட்டுச் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற சிறைக் கைதிகள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பசிபிக் பெருங்கடலின் தென் மேற்கு பகுதியிலுள்ள சிறிய நாடான பப்புவா நியூ கினியாவின் இரண்டாவது பெரிய நகரமான லேவில் அமைந்துள்ள சிறைச்சாலையில், நேற்றுமுன்தினம் சுற்றுச்சுவரை உடைத்து கைதிகள் தப்பிக்க முயற்சி செய்தனர். இதனையடுத்தே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பிச் சென்ற கைதிகளில் மூன்று பேர் பிடிப்பட்டனர். எனினும் 57 கைதிகள் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களைத் தேடும்பணிகள் நடைபெற்று வருகின்றன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கலாமா?

யாழ். நகரில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் இரு இளைஞர்கள் வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்து அட்டகாசம் புரிந்துவிட்டுப்போனார்கள். தமிழ்த் திரைப்படங்களில் வரும் காட்சிக்கு ஒப்பாக அவர்கள் இருவரும் தெருவில் வாளுடன் நின்று சண்டித்தனம் புரிந்தனர். அங்கு நின்றிருந்தவர்களை வெருட்டினர். பின்னர் பொலிஸார் வருவதற்கு முன்னர் தப்பியோடிவிட்டனர்.

நகரின் இதயத்தில் -ஸ்ரான்லி வீதியில் - இந்தச் சம்பவம் நடந்தேறியது. அந்த வீதி எப்போதுமே நெரிசல் மிகுந்தது. பல கடைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் என எப்போதும் கூட்டம் நிரம்பி வழியும் பகுதி. பல நூற்றுக் கணக்கானவர்களுடன் பகல் பொழுதுகளில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இடம். பல தரப்பட்டவர்களும் வந்துபோகும் ஒரு தளம். அங்குதான் சுமார் 20 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் கையில் வாளுடன் வந்திறங்கி அதனைச் சுழற்றிக்காட்டி அட்டகாசம் புரிந்தனர். ஆனால், அவர்களைத் தடுக்கவோ, பிடிக்கவோ எவரும் முன்வரவில்லை. ஏன்?

பயம் மற்றும் நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கிச் செல்லும் மனப்பாங்கு. ஸ்ரான்லி வீதியில் அன்று நின்றிருந்த பலரும் அந்த இளைஞர்களைவிடப் பலசாலிகளாகவும், வயது அதிகமானவர்களாகவும் துணிவு மிக்கவர்களாகவும் இருந்திருப்பார்கள். ஆனால், அவர்களை மடக்கவோ, பிடிக்கவோ எவரும் விரும்பவில்லை.

அப்படி ஏதாவது முயற்சி செய்தால் அந்த இளைஞர்களின் கைகளில் இருக்கும் வாள்களுக்கு இரையாகிவிடுவோம் என்கிற அச்சம் சிலருக்கு. வேறு பலருக்கோ அந்த அச்சம் இல்லை என்றாலும், இந்தப் பிரச்சினையில் தலையிடப்போய் நானும் என் குடும்பமும் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டு பின்னர் பொலிஸ் நிலையத்திற்கும் அலையவேண்டியிருக்கும்; எதற்குத் தேவையில்லாத வேலை என்று ஒதுங்கிப் போகும் மனோநிலை.

இந்த இரண்டும்தான் சண்டித்தனத்தின் மூலதனம். எல்லாத் தமிழ்த் திரைப்படங்களிலும் சொல்வதைப் போல மக்களிடம் உள்ள பயம்தான் சண்டித்தனத்தின் மூலதனம். அது போய்விட்டால் சண்டியர்களை எவரும் சட்டை செய்யப்போவதில்லை.

இப்போது எம்முன் உள்ள கேள்வி, இதுபோன்ற சண்டியர்களை அப்படியே விட்டுவிட்டு - பொறுப்பான ஒரு பொதுமகன் என்கிற எம் ஒவ்வொருவரது பொறுப்பையும் தட்டிக் கழித்துவிட்டு - சண்டியர்களையும் சண்டித்தனத்தையும் வளர்த்துவிடப்போகிறோமா என்பதுதான்?

அன்று ஸ்ரான்லி வீதியில் நின்றிருந்தவர்களில் மூன்றிலொரு பகுதியினராவது அந்தச் சண்டியர்களின் முன்னே வீதியில் இறங்கியிருந்தால் அவர்களால் நிச்சயம் தப்பிச் சென்றிருக்க முடியாது. அத்தோடு அவர்களைப் போன்றவர்களுக்கு அது ஒரு தெளிவான செய்தியாகவும் இருந்திருக்கும்.

சண்டியர்களைக் கட்டுப்படுத்தவில்லை, சண்டித்தனத்தைத் தடுக்கவில்லை என்று பொலிஸார் மீதும், நீதிமன்றங்கள் மீதும் விமர்சனங்களை வைத்துவிட்டு, எமது பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்வது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகாது. இந்தச் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. ஒன்றிணைந்த மக்கள் சக்தியின் முன்பாக இவர்களைப் போன்ற சண்டியர்கள் தூசுக்குச் சமானம். ஆனால், நாம் எப்போதுமே எமது ஒன்றிணைந்த சக்தியைத் திரட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் தவறுகிறோம். தனியன்களாகவே நின்று எமது பாதுகாப்பு, குடும்பம் என்கிற வட்டத்திற்குள் அணுகி பலவிடயங்களையும் கோட்டைவிட்டுவிடுகிறோம்.

அப்படி எமது கடமையை நாம் தட்டிக்கழித்துக்கொண்டு பொலிஸார் மீதும் நீதித்துறை மீதும் குற்றஞ்சாட்டுவது முறையானது அல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பவர்கள் அவர்கள்தான் என்கிறபோதிலும், அவர்களுக்கு உதவிகரமானவர்களாக நாம் இருப்பதும் அவசியம். ஒவ்வொருவரும் தமது சமூகக் கூட்டுப் பொறுப்புணர்வை உணர்ந்து இத்தகைய சமயங்களில் செயற்பட வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற தேவையற்ற செயல்களையும் குற்றங்களையும் களைய முடியும்.



கட்டுரை

# அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றியீட்ட ரணில் வகுக்கும் வியூகம்

விமல் வீரவன்சவுடன் ஒரு நேர்காணல்

■ எம்.ஐ.முபாறக்

2020 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் புலம்பெயர் தமிழர்களின் லட்சக்கணக்கான வாக்குகளால் வெற்றி பெறுவதற்கு ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டத்துக்கு ஜே.வி.பி சூட்சுமமான முறையில் துணைபோவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.
சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். குறித்த நேர்காணலின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கேள்வி :** புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் தடுப்பதற்காக நீங்கள் இப்போது எத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளீர்கள்?

**பதில் :** நாட்டை இரண்டாகப் பிரிக்கும் தேச விரோத அரசமைப்பு ஒன்றையே இந்த அரசு கொண்டு வரவுள்ளது. அரசுக்கு மூன்றில் இரண்டுமடங்கு பெரும்பான்மை உள்ளதால்தான் இதை இலகுவாக நிறைவேற்ற முற்படுகின்றது. இந்த மூன்றில் இரண்டுமடங்கு பெரும்பான்மையை இல்லாது செய்வதற்கே நாம் முயற்சிக்கிறோம்.
எந்த வகையிலாவது எமது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கையை அதிகரித்து, அரசுக்கு இருக்



“

இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சியளித்தல் என்ற போர்வையில் அமெரிக்கக் கடற்படையினர் திருகோணமலைக்குள் நுழையவுள்ளனர். மகிந்தவின் ஆட்சியில் அமெரிக்காவால் இதைச் செய்ய முடியவில்லை. அதனால்தான் அமெரிக்கா மகிந்தவின் அரசைக் கவிழ்த்தது. மறுபுறம் இந்தியாவுக்கு எண்ணெய்த் தாங்கிகளை வழங்கினால் அவற்றைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் இந்தியாவும் அங்கு நுழையும். ஆட்சி மாற்றத்துக்கு இந்தியா உதவியதாலேயே இலங்கை அரசு, பதிலுக்கு இந்த உதவியைச் செய்கிறது. இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

கும் மூன்றில் இரண்டுமடங்கு பெரும் பான்மையை இல்லாதொழிப்போம். மூன்றில் இரண்டு மடங்கு பெரும் பான்மையை வைத்துக்கொண்டு இந்த அரசு மேற்கொண்டுவரும் தேச விரோதச் செயற்பாடுகள் அனைத்தையும் நாம் தடுத்து நிறுத் துவோம்.
ரணிலுக்கு வாக்களித்தவர்கள் கொழும்பு மக்கள்தானே தவிர, இந்த நாட்டின் ஏனைய பகுதிகளது மக்கள் அல்ல. அப்படிப்பட்ட ஒருவரால் எப்படி முழு நாட்டையும் நிர்வகிக்க முடி யும்? இதற்கு நாங்கள் முற்றுப் புள்ளி வைப்போம்.

**திருமலை மாவட்டத்தை ஆக்கிரமிக்க அமெரிக்க மற்றும் இந்திய நாடுகள் முயற்சிப்பு**

**கே:** திருமலை எண்ணெய்த் தாங்கி களை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஏற் படப் போகும் பாதிப்பு என்ன?

**ப:** இந்தியாவும் அமெரிக்காவும் சீனா வின் பரம எதிரி நாடுகள். இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து சீனாவு டன் மோதுவதற்கு இலங்கையைத் தளமாகப் பாவிப்பதற்குத் திட்டமிடு கின்றன. அதற்குத் திருமலைத் துறை முகம்தான் வசதியானது. இதனால்தான் அமெரிக்காவும் இந்தியாவும் திருமலைமாவட் டம் முழுவதையும் ஆக்கிரமிப் பதற்கு முயற்சி செய்கின்றன.
அந்த மாவட்டத் தில் கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் திட் டம் ஒன்று அமெரிக்காவிடம் உண்டு. இலங் கைக் கடற்ப டையினருக்கு பயிற்சியளித் தல் என்ற போர் வையில் அமெ ரிக்கக் கடற்ப டையினர் திரு கோணமலைக் குள் நுழைய வுள்ளனர். மகிந்தவின் ஆட்சியில் அமெரிக்காவால் இதைச் செய்ய முடியவில்லை.
அதனால்தான் அமெரிக்கா மகிந்த வின் அரசைக் கவிழ்த்தது.
மறுபுறம் இந்தியாவுக்கு எண்ணெய்த் தாங்கிகளை வழங்கினால் அவற் றைப் பாதுகாத்தல் என்ற போர்வை யில் இந்தியாவும் அங்கு நுழையும்.
ஆட்சி மாற்றத்துக்கு இந்தியா உதவி யதாலேயே இலங்கை அரசு, பதி லுக்கு இந்த உதவியைச் செய்கிறது.
இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத் தலாக அமையும்.

**கே:** 2020 இல் அரச தலைவர் தேர் தல் இடம்பெற்றால் மகிந்த அணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவா?

**ப:** அது தொடர்பில் இன்னமும் முடி வெடுக்கவில்லை. இருந்தாலும் அதை இப்போது சொல்லமாட்டோம். கோத்த பாய அரசியலுக்கு வருவது சிறந்தது என்பதே எனது நிலைப்பாடாகும்.
நான் எந்த ராஜபக்சவையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மகிந்த ராஜபக்சவை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். அதற் காக அவர்களுடன் பிரச்சினை என்று அர்த்தமல்ல. நான் எல்லோருடனும் நல்ல உறவைப் பேணி வருகின்றேன்.

> “
> அரசின் தேச விரோதச் செயற்பாடுகளால் இந்த அரசுக்கு சிங்கள மக்களின் வாக்குகள் குறைந்து விட்டன. தமிழ்,முஸ்லிம் மக்களின் வாக்குகளைக் கொண்டுதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற வேண்டும். வெளிநாடுகளில் லட்சக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் வாழ் கின்ற னர். அவர்க ளின் வாக்குகளைக் கொண்டு அரசுத் தலைவராக ஆவ தற்கு ரணில் திட்ட மிட்டுள்ளார். ஜே.வி.பி அந்தத் திட்டத் துக்குத் துணை போகின்றது. உண்மையில் இந்த நாட்டு மக்களின் வாக்கு ரிமையை மதிக்கும் திட்டம் அல்ல இது. அந்த உரிமையைக் கொள்ளையடிக்கும் ரணிலின் திட்டமே இது.



**மைத்திரி தரப்புடன் இணைந்து நாம் பயணிக்கப் போவதில்லை**

**கே:** இனி வரும் அன்னத்துத் தேர்க ளிலும் மைத்திரி-மகிந்த தரப்புகள் ஒன்றிணைந்தே போட்டிட வேண்டும் என்று மைத்திரி தரப்புக் கூறி வருவது பற்றி?

**ப:** தேர்தல்கள் வரும்போது மாத்திரம் அவர்களுக்கு இது நினைவுக்கு வரு கிறது. தேர்தல்கள் முடிந்ததும் மறந்து விடுகிறார்கள்.
மைத்திரி அவருக்குத் தேவையான ஆள்களை தேசியப் பட்டியலில் போட் டுக்கொள்வார். ரணில் ஆட்சி அமைக்க மூன்றில் இரண்டு மடங்கு பெரும் பான்மையைப் பெற்றுக் கொடுப்பார். அப்போதெல்லாம் நாம் எல்லோரும் ஒன்று என்று நினைப்பதில்லை.
நாம் எம்மை நாடாளுமன்றில் தனிக் கட்சியாக ஏற்குமாறு கூறினால், அப் போது நாம் எல்லோரும் ஒன்று என்று நினைப்பதில்லை. இப்போதுதான் அந்த நினைப்பு வருகின்றது. இது தேர் தலில் அவர்களுக்கு ஏற்படப் போகும் தோல்வி குறித்த அச்சத்தால் தோன் றிய திட்டமாகும். ஆகவே அவர்களு டன் இணைந்து பயணிக்கும் வாய்ப்பு கள் அறவே இல்லை. ஒரு தடவை பாடம் கற்றுவிட்டோம். இனி மேலும் அத்த கைய கயிற்றை விழுங்க நாங்கள் தயாராக இல்லை


**கே:** ஜீ.எல் பீரிஸ் தலைமையில் உரு வாக்கப்பட்டிருக்கும் பொது ஜன முன் னணியிலா இனி வரும் தேர்தல்களில் போட்டியிடுவீர்கள்?

**ப:** இல்லை. அந்தக் கட்சியானது எமது கூட்டணியில் உள்ள கட்சிகளுள் ஒன்று. அந்தக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகவே போட்டியிடுவோம். எமது கூட்டமைப்பின் பலத்தை மேலும் அதிகரிக்கும் வேலையில் தான் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். எமது பலம் என்னவென்று மே தினக் கூட்டத்தின்போது முழு நாட்டுக்குமே விளங்கிவிட்டது.

**அடுத்த அரசுத் தேர்தலில் ரணிலை வெல்லவைக்க ஜே.வி.பி.தீட்டும் திட்டம்**

**கே:** வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் இருந்தவாறே வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஜே.வி.பி கோரி வருகின்றமை தொடர்பில் உங் கள் நிலைப்பாடு என்ன?

**ப:** அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்கான திட்டம்தான் அது.
அரசின் தேச விரோதச் செயற்பாடுக ளால் இந்த அரசுக்கு சிங்கள மக்க ளின் வாக்குகள் குறைந்துவிட்டன. தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குக ளைக் கொண்டுதான் அடுத்த ஜனாதி பதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற வேண்டும். வெளிநாடுகளில் லட்சக் கணக்கான புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களின் வாக்குக ளைக் கொண்டு அரசுத் தலைவராக ஆவதற்கு ரணில் திட்டமிட்டுள்ளார். ஜேவிபி அந்தத் திட்டத்துக்குத் துணை போகின்றது. உண்மையில் இந்த நாட்டு மக்களின் வாக்குரிமையை மதிக்கும் திட்டம் அல்ல இது. அந்த உரி மையைக் கொள்ளையடிக்கும் ரணி லின் திட்டமே இது. அதிகமான சிங்கள வாக்குகள் ரணிலுக்கு எதிராக இருப்ப தால் புலம்பெயர் தமிழர் மற்றும் முஸ் லிம்களின் வாக்குகளைப் பெற்றாலும் அவரால் வெல்ல முடியாது. இந்த அரசை நாம் வெகு சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்; என்றார்.



## ஆசிரியருக்கான கடிதம்

### சட்டம் இறுக்கமாகச் செயற்படுத்தப்படல் அவசியம்

“பிச்சையெடுக்குமாம் பெருமாள், அதனைத் தட்டிப் பறிக்குமாம் அனுமான்” என்கிற கணக்காக. பலருக்கும் வாழ்வாதார உதவிகளாக வழங்கப்படும், ஆடு, கோழிகள் களவாடப்படுகின்ற செய்திகள் வெளிவந்தவண்ணமிருந்தன. அதிலும் ஒருபடி மேலேபோய் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்து மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டி திருடப்பட்ட செய்தியும் அண்மையில் வெளிவந்திருந்தது. கல்வி கற்கச் செல்வதற்காகவே அந்தத் துவிச்சக்கரவண்டி அன்பளிப்பாக எவராலோ வழங்கப்பட்ட நிலையில், நோகாமல் சீவிக்கும் ஒரு தரப்பால் அது திருடப்பட்டுள்ளது.
தவிச்ச முயல் அடிக்கும் செயற்பாடாக இவை அமைந்துள்ளமை எமது சமூகம் எங்கே செல்கின்றது என்கின்ற வினாவை எழுப்புகின்றது. சட்டம் ஒழுங்கு மீறப்படுவது பல தரப்பினரதும் இயலாமையை வெளிப்படுத்துகின்றது. சமூகத்தில் இவற்றைக் களைவதற்கான ஒரு கூட்டுப் பொறுப்பு வேண்டும். அந்த இடத்தில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதே கேள்வியாக ஆகி விடுகிறது.
திருடனாய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியா தென்று நினைத்துக் கொண்டு வாளாவிருப்பது அலைகள் ஓய்ந்த பின்னர் கடலில் இறங்குவோம் என்பதற்கு ஒப்பானதாகும்.
இன்று அடுத்தவருக்கு ஏற்படும் கஷ்டமோ சிரமமோ, நாளை எமக்கு ஏற்படாது என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. எனவே சமூகம்சார் செயற்பாடுகளில் கூட்டுப் பொறுப்பு டன் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவையாகிறது.

அரியாலையூர்
எஸ்.செல்வம்

JAT
Get the right finish, first.

## விருப்பத் தெரிவுக்குரிய தொழில் வழங்குநராக ஜட் கோல்டிங்ஸ்

"சிறந்த வர்த்தகக் குறியீடாகத் தெரிவு"

இலங்கையின் மிகச் சிறந்த தொழில் வழங்குநராக ஜட் ஹோல்டிங்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.
இலங்கையில் விருப்பத் தெரிவுக்குரிய தொழில் வழங்குநராக தத்தமது வர்த்தகக் குறியீடுகளை கட்டியெழுப்புவதில் தனித்தன்மையை வெளிப்படுத்தக்கூடிய உள்நாட்டு நிறுவனங்களை அங்கீகரித்து பாராட்டும் வகையிலேயே "இலங்கையின் சிறந்த தொழில் வழங்குநர் விருதுகள்" திகழ்கின்றது.
இதன்பிரகாரம் தொழில் வழங்குநர் வர்த்தக குறியீடல் நிறுவகம், உலக எச்.ஆர்.டி காங்கிரஸ் மற்றும் ஸ்டார்ஸ் ஒவ் தி இன்டஸ்ட்ரி குழுமம் என்பன ஒன்றிணைந்து இவ்விருதை வழங்கியுள்ளது.
இவ்விருதானது ஆசிய வணிகங்கள் கூட்டுக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த விருதாக காணப்படுகின்றது.
அந்தவகையிலே ஜட் கோல்டிங்ஸ் நிறுவனமானது மனிதவளம் தொடர்பில் சிறந்த நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் மூலோபாயத் திட்டமிடல்களை முன்மொழிவதில் கொண்டுள்ள வெளிப்படையான தனித்துவ அடையாளங்களை தொழில் வழங்குநராக வெளிப்படுத்தி வருவதனை அங்கீகரிப்பதாக இந்த விருது அமைந்துள்ளது.
"350 இற்கும் அதிகமான ஊழியர்களின் பக்கபலத்துடன் மிக வேகமாக வளர்ச்சியடைந்து செல்லும் ஒரு கம்பனி என்ற வகையிலே நாம் இதைவிட பெருமிதம் கொள்ள முடியாது" என நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குழாம் தெரிவித்துள்ளது.

# பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்தவே அதிக நிதி ஒதுக்கீடு

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



"உயர்தரப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துவிடுவது தொடர்பில் பெற்றோர்கள் போராடி வருவதற்கு பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளும், முரண்பாடுகளுமே காரணமாக அமைந்துள்ளன.

கிராமப்புறப் பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டே அரசு கல்வி தொடர்பாக அதிக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
அதேபோன்று கல்வி தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகைகளை வேறு கல்வி சாராத செயற்பாடுகள் தொடர்பில் செலவிடுவதற்கு எந்தவிதத்திலும் அனுமதியளிக்க முடியாது எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.
இதேவேளை மாகாணங்களின் கல்வி தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித் தொகைகள் அதிகப் பாடுகள் குறித்தும் அந்த நிதியை வேறு செயற்பாடுகளினுள் செலவிடுவது தொடர்பில் முதலமைச்சர்களால் விடுவிக்கப்பட்டிருந்த கோரிக்கை குறித்தும் அரச தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.
அத்துடன் மாகாணங்களில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் இன்னமும் கூட கழிப்பறை வசதிகள் குடிதண்ணீர் வசதிகள் கதிரை, மேசைகள் போன்ற தளபாடங்கள் இன்மை என இன்னமும் பௌதீக வள ரீதியிலே அவலப்படும் நிலையொன்று இருக்கும் சந்தர்ப்பங்களில் முதலமைச்சர்கள் இத்தகைய கோரிக்கையொன்றை விடுத்திருந்தமை குறித்து தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
உயர்தரப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துவிடுவது தொடர்பில் பெற்றோர்கள் போராடி வருவதற்கு பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளும் முரண் பாடுகளுமே காரணமாக அமைந்துள்ளன.
எனவே பாடசாலைகளின் பௌதீக வளத்தை அவற்றின் தரத்தை மேம்படுத்துவதே அரசின் கொள்கை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

### நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு அரசிடம் கோரிக்கை

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுவதான பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களுக்கான தரக்கட்டுப்பாட்டு விதிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இது குறித்தான அறிக்கையொன்றை வெளியிட்டு கருத்துரைத்துள்ள நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ரஞ்சித் பிரிஸ், "இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் சில பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களில் நச்சு இரசாயன அணுக்கள் அடங்கியுள்ளது. இந்த விடயங்கள் சுற்றுச் சூழல் துறைசார் நிபுணர்கள் அண்மையில் மேற்கொண்டிருந்த ஆய்வொன்றின் மூலம் தெரியவந்தள்ளது. புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்களை இவை ஏற்படுத்துகின்றன.
தற்போது இலங்கைக்குள் பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யும் போது எந்தவொரு தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகளும் பின்பற்றப்படுவதில்லை. இந்தச் செயல்நிலைகள் தரம் குறைந்த விளையாட்டுப் பொருள்கள் எந்தவித தடையுமின்றி நாட்டுக்குள் உள்வருவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி தொடர்பான தரக்கட்டுப்பாட்டு விதிமுறை ஒன்றையும் அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்" – என்றார்.

## நாடு முழுமையுமான சேவை வலையமைப்பை அமைத்துக்கொண்டது அபான்ஸ்

### வாடிக்கையாளர்கள் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெறமுடியும்

நவீன உலகத்தின் வழ்க்கை முறைகளுக்கும், தேவைகளுக்கும் ஈடுகொடுத்து ஒத்திசைவாக்கம் பெறும் வகையில் அபான்ஸ் சேவைப்பிரிவானது உயர் தரத்திலான நவீன தொழில்நுட்கத்துடன் கூடிய சேவை வலையமைப்பினை நாடு முழுமையுமாக வாடிக்கையாளர்களுக்கென அறிமுகம் செய்துள்ளதாக அபான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
இதன்பிரகாரம் தற்போது 24 மணிநேர சேவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வலையமைப்பின் மூலம் வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் தொலைபேசி வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அவசரத்தேவைகள் ஏற்படும் பட்சத்திலே உரிய இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அபான்ஸ் சேவைப் பிரிவின் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவரை வரவழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.
இவைதவிர இணையத்தளமூடான வாடிக்கையாளர் தொடர்பு சேவை, புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல், சேவைக்கான கட்டணத்தை செலுத்துதல், உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிதல், நடமாடும் சேவைகள் மற்றும் துரித சேவைகள் மூலம் சேவைகளையும் தேவைகளையும் விரைவாகவும் துரிதமாகவும் செய்திடக்கூடிய வாய்ப்புக்கள் என பலதரப்பட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருவதாக அபான்ஸ் தெரிவித்துள்ளது.
மேலும் வாடிக்கைகளுக்கான சகல வசதிகளையும், அதியுயர் சேவைகளையும் வழங்குவதற்காக அபான்ஸ் சேவைப்பிரிவானது நாடளாவிய ரீதியிலே 17 சேவைப் பிரிவுகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட 100 சேவை முகவர்களை கொண்டுள்ளதாகவும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான சகல சேவைகளையும் உயர்தர உதிரிப்பாகங்களை கொண்டு விரைவான, செயற்றிறன் மிக்கதான சேவைகளாக வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளது.

## டி.எவ்.சி.சி. வங்கி – சதோச மோட்டார்ஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

### குறைந்த விலையில் தரமான வாகனக் கொள்வனவை மேற்கொள்ள முடிகிறது

டி.எவ்.சி.சி வங்கி வாடிக்கையாளர்கள் லீசிங் வசதி ஊடாக இசுசு வர்த்தக நாம வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை டி.எவ்.சி.சி வங்கி மற்றும் சதோச மோட்டார்ஸ் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.
சதோச மோட்டார்ஸ் இலங்கையில் இசுசு வர்த்தக வாகனங்களுக்கான ஏக முகவர்களாக விளங்குகின்றது. ஜப்பானிய வர்த்தகநாமமான இசுசு உலகின் முதற்தர வர்த்தக வாகனமாகக் கொள்ளப்படுகிறது.
அந்த வகையிலே இலங்கையின் சந்தைகளில் தரம் மற்றும் நம்பிக்கைக்கான உதாரணமாக விளங்கும் டி.எவ்.சி.சி வங்கி மற்றும் சதோச மோட்டார்ஸ் ஆகியனவற்றின் தற்போதைய பங்குடமையானது புதிய ஒப்பந்தத்தின் கைச்சாத்திடல் மூலம் குறைந்த விலையில், தரமான வாகனம் ஒன்றினை டி.எவ்.சி.சி வங்கி வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க.நா.சபாரத்தினம்

கடந்த சனிக்கிழமை வெளியான **"தொழிலாளரும் தொழிற்சூழலும்"** என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி...)

# சேவையின் தேவைகள் தரவல்ல மேன்நிலைகள்

சேவையின் தேவைகள் என்ற பல் பரிமாணங்களின் வழியேயாக ஒவ்வோர் தொழில்முறைமைகளும் தமக்குரித்தான தனித்துவப் பெறுமதிகளைப் பெற்றுக் கொள்கின்றன.

தொழில் அமைவுகளோடு சட்டதிட்டங்களை முன்னிலைப்படுத்தி நன்மை, தீமைகளில் செயலுறுதிகளை தர்க்க ரீதியிலே தாக்க வன்மைக்கு உட்படுத்துகின்றன. இதனை யாரும் மறுதலித்திட முடியாது.

**கவலைக்குரிய செயற்பாடுகள்**

இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு சிலரின் செயற்பாடுகள் மக்கள் சார்பு நிலையில் இடர்பாடுகளை ஏற்படுத்துகின்றது. அதனை அவர்கள் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களாகச் சித்தரிக்க முற்படுகின்றனர்.

உண்மையில் அவர்களும் சேவை என்ற சொற்பதத்துக்குரியவர்களாக மாற வேண்டும்.

மக்களுடன் நாளாந்தம் தொடர்புடைய கிராம அலுவலர்களைக் கிராம சேவையாளர் எனக் குறிப்பிடுவதே வழமையாக உள்ளது. உண்மையான பணியாளருக்கு அந்தச் சொல் பொருத்தம். அவர்கள் தங்களது பணிக் கூற்றின் இடையே பல செயல்நிலைகளைப் பெற வேண்டியுள்ளது. இவர்களிடம் இருந்தான பயனாளிகளின் தகுதியை இனங்காணும்போது, சமூகத்தின் சாதாரணநபர் தொடக்கம் அரசின் மேல்நிலைப்பட்ட நிர்வாகப் பகுதிவரையான அனைவரும் தகுந்த பதில் அளிக்கைக்குக் கடமைப்பட்டுள்ளனர்.

எனவே உண்மை, நேர்மை, நிதானம், நேரம் பாராத கடமை உணர்வு எனப் பங்களிப்பு செய்யும்போது சேவை என்ற சொற்பதனை இவர்களது தொழிலுடன் இணைத்துக் குறிப்பிடப்படுவது என்பது சாலவும் பொருத்தம் ஆகும். அத னைப் பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு ஆகும்.

**கடமையுணர்வு**

இவர்கள் தவிர ஏனைய நிர்வாக சேவைப் பணியாளர்கள், உயர் அதிகாரிகள் எனச் சகல பணியாளர்களது கடமைகளும் மக்களுக்குரித்தானது. மக்கள் சிரமங்களை இலகுபடுத்தி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் சகல பணியாளர்களும் மக்கள் சேவகர்களே. அரச பணியில் உள்ளோர் நாட்டுக்கு விசுவாசமாகவும், கடமையில் நேர்மையாகவும் இருந்து நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சேவையாற்றுவது இன்றியமையாததாகும். அதேபோன்று போக்குவரத்துச் சேவை பற்றி சிந்தி ப்போமாகில், அவர்களும் சேவை என்ற பதத்தினுள் முன்னிலை பெறுகின்றனர்.

பயணத்தின் வழிகாட்டிகளாக மக்களைப் பல்வேறு அசௌகரியங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்கின்றனர். பிரயாணத்தில் ஈடுபடும் பயணிகளை உரிய இடத்தில் கொண்டு சேர்க்கும் நம்பிக்கையின் முக்கிய கதாபாத்திரமாக இவர்கள் விளங்குகின்றனர்.

சுகாதாரத் தொழிலாளர்கள் பற்றிச் சிந்திக்கும் போது சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் முக்கியமானவர்கள். தங்கள் கடமை நேரப்பகுதியில் மட்டுமே பணியில் ஈடுபட்டாலும் அவர்களது கடமை என்பது பிரத்தியேகமானது. சூழலின் சுத்தம் பேணி மக்களின் சுகாதார நலனின் தொண்டாற்றும் தனித்துவங்களாக விளங்குகின்றனர்.

**ஏனைய தொழில் வரையறைகள்**

இதுதவிர ஏனைய அத்தியாவசிய சேவைகளான தீயணைப்புப்பகுதியினர், குடிதண்ணீர் விநியோகப் பிரிவினர், மின்சார சபையினர், அவசர வாகனச் சேவை வழங்குநர்கள் (அம்புலன்ஸ்) மற்றும் பாதுகாப்புச் சேவையினர் என அனைவரும் பலவிதமான எதிர்வினைகளைச் சந்திக்கின்றனர். சேவை எனும் தேவை எவ்வளவு அவசியமாகவுள்ளதோ அதே அளவுக்கு அவர்களின் பணிச்சூழல் என்பதும் அந்த அளவுக்கு அபாயகரமானதாகவே உள்ளது.

ஆக, ஒவ்வொரு தொழில் நிலைகளிலும் எடுக்கப்படுவதான முயற்சிகளில் அர்ப்பணிப்பான சேவைகள் பயன் தருவதுடன் நன்மதிப்பினை மேலோங்கச் செய்கிறது. இதற்கு மாறானவை தொழிற்படையின் வினைத்திறனின்மையையும், இலக்கினை கண்டடையாத கீழ் நிலையையும் நிறுவனம் சார்ந்து தந்துவிடுகிறது.




இந்தச் செயல்நிலைகளை ஒப்பிட்டு நோக்கும் போது, தொழில் ரீதியாக யார் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதும் எங்கே மனிதம் என்ற உயர்வின் தார்ப்பரியங்கள் தழைத்தோங்குகிறது என்பதும் புலப்படும்.

அவ்வாறே விவசாயம், கடற்றொழில், பனை சார் தொழில்களின் செயல்நிலைகளும் முன்னுரிமை பெறுகிறது. இவர்கள் தொழிலாளராகவும், தொழில் கொள்வோராகவும் முன்னிலை பெறுகின்றனர்.

**வருமானத்தை அதிகம் ஈட்டும் தொழில் நிறுவனங்கள்**

சில தனியார் நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் என்பன கூடுதல் வருமானங்களைப் பெற்றாலும் தொழிலாளர்களின் சம்பளம் அளவானதாகவே இருக்கும். இந்த நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு ஊழியர் சேமலாப நிதித் தொகைகள் அதிகமாக்கப்பட வேண்டும்.

**தினவரவும் கையொப்பமும்**

பல தனியார் நிறுவனங்களில் 8 மணித்தியாலங்களுக்கும் அதிகமாகவே கடமை நேரம் அமைகிறது. சில இடங்களில் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத வேலை நடைமுறைமைகள் பின்பற்றப்படுகின்றன. அந்தவகையிலே தினவரவு, கையொப்பம் இடும் நடைமுறைகள் தொடர்பிலும் அவர்களுக்குரிய ஊதியம், மேலதிக கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன செலுத்தப்படும் விடயங்கள் குறித்தும் ஆவண ரீதியான விடயங்களைப் உறுதிப்படுத்த வேண்டியது தொழில்திணைக்களத்தின் கடமையாகும்.

**பாதிக்கப்படும் தொழில் நிறுவனங்கள்**

தொழிலாளர் நடத்தை மூலங்கள், திட்டமிடப்படாத நிர்வாகச் செயற்பாடுகள் மூலம் தொழில் முயற்சிகள் பல பாதிப்புகளைச் சந்திப்பது மாத்திரமன்றி தொழில் நிறுவனங்களை மூட வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இதற்கான முக்கிய காரண காரியங்களாக பின்வருவனவற்றைச் சொல்லிவிட முடியும்

1. நிர்வாகிகளின் அக்கறையின்மை
2. தகுந்த மேற்பார்வையின்மை
3. பணியாள் ஒற்றுமையின்மை
4. முறையான நிதிக்கட்டுப்பாடு பேணப்படாமை
5. பணித் தொகுதியில் உள்ள நேர்மையின்மை, விசுவாசமின்மை
6. திட்டமிடலில் உள்ள குறைபாடுகள்

தவிர இந்த விடயங்கள் அத்தனையும் தனியார், பொது நிறுவனங்களோடல்லாது கூட்டுறவு நிறுவனங்கள் மீதாயும் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக கூட்டுறவு நிறுவனங்களின் அதிகாரம் என்பது அங்கத்தவர்கள் சார்ந்தே காணப்படுகிறது. அங்கு தகுந்த நிர்வாக அமைப்பு என்பது உருவாகாதவிடத்து மேற்கூறப்பட்ட பாதிப்புகள் அதிகரித்த விதமாக இடம்பெற வாய்ப்புகள் அதிகம் உண்டு. தற்போதைய நிலையில் கூட்டுறவு நிறுவனங்களை தொழிலாளரின் விசுவாசமான, நேர்மையான உழைப்பால் மட்டுமே பாதுகாக்க முடியும்.

> **ம**னிதனை மனிதன் என மதிக்கும் பண்பாட்டைத் தனிமனிதராக வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் செயல்நிலைகள் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனது கடமை என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். யதார்த்தங்களைத் தெரிந்துகொண்டும், சிந்தனை பூர்வமாகப் புரிந்து கொண்டும் சேவையின் தேவைகளை மேன்நிலைப் படுத்திக் கொள்ளவேண்டும்.

**தொழிற்சங்க அமைப்புக்கள்**

ஒவ்வொரு தொழிற் சூழலிலும் தொழிற்சங்க அமைப்புகள் உருவாக்கப்பட்டு தங்கள் உரிமைகளைக் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. தொழிற்சங்க அமைப்புகள் உருவாகும் போது சில அரசியற் கட்சிகள் சார்பானதாக அமைக்கப்படுகின்றன.

இவற்றை ஆரோக்கியமான அமைப்பாகக் கருதிவிட முடியாது. ஏனெனில் எந்த ஒரு செல்வாக்குள்ள சூழலிலும் ஒரு அரசியற் கட்சிக்கு 60 வீதத்துக்கு மேற்பட்ட ஆதரவு இருப்பதில்லை. மிகுதி 40 வீதமானவர்கள் எதிர்ப்பாளர்களாகவே அமைவர். இதனால் நூற்றுக்கு நூறு வீதம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தொழிலாளர் கருத்துக்கள் வேற்றுமைப்படுவதால் தொழில் ஸ்தாபனம், தொழிலாளர் ஐக்கியம் என்பன பாதிக்கப்படுகிறது. இதில் ஏற்படுவதான நஷ்டம் என்பதும் தொழிலாளருக்கும், தொழில் நிறுவனத்துக்குமானதாக அமைந்துவிடுகிறது.

தவிர ஒப்பந்த அடிப்படையில் வேலை கொள்வோர் தொழிலாளர் பாதிப்படையும் போது அவர்களுக்கான நஷ்ட ஈடுகளை வழங்க முற்படுவதில்லை என்ற குறைபாடுகள் எங்கும் காணப்படுகின்றன. இவை தொடர்பாக தொழிற் திணைக்களம் கரிசனை கொள்வதுடன் பணியாளர் நலன் சார்ந்த பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம் என்ற பழமொழியை முது மொழியாகச் சிந்தித்துச் செயலாற்றுதல் நன்று.

**வரலாற்றின் அடிப்படைகள்**

வரலாற்றுக் குறிப்புகளில் இடம்பெற்றுள்ளதான தொழிலாளர் நிலைமைகளை அவதானிக்கும் போது அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் சகல நாடுகளிலும் தொழிலாளர் சுரண்டல் அதிகமிருந்ததை காண முடிகிறது. 18 தொடக்கம் 20 மணித்தியாலங்கள் வேலை பெறப்பட்டு அவர்களது உழைப்பானது சுரண்டப்பட்டுள்ளது. அதன் பின்னான காலத்தில் தொழிலாளர்கள் 10 மணிநேர வேலை கோரியமைக்கு தொழிலாளர் தமது நிறுவனங்களை அழிக்க முற்பட்டதான பொய் வழக்குகள் புனையப்பட்டதுடன் அவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்ட வரலாறுகளும் காணப்படுகின்றன.

1856 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலும் 1866 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் தொழிற்சங்கங்கள் 8 மணி நேர வேலை கோரி தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்தியதை அறிய முடிகிறது. ஒரு அரை நூற்றாண்டு காலப்பகுதிகளுக்கு முன்பான போராட்டங்களின் பிரதிபலிப்பே தொழிலாளர் வேலைநேரம் என்பது 8 மணித்தியாலங்கங்கள் என்ற நிலமைகளைத் தோற்றுவித்ததுடன் தொழிலாளர் தினமாக மேதினக் கொண்டாட்டங்களின் வெளிப்பாடுகளையும் தந்தது எனலாம்.

இந்த உரிமைகளை பேணிப் பாதுகாப்பதென்பது ஒவ்வொரு தொழிலாளரின் கடமையாக இருப்பதுடன் வேலை கொள்ளும் தொழிற்பகுதிகள் (அரசு உட்பட) உறுதியான நிலையில் இருந்துகொண்டு தொழில் கொள்ளும் அமைப்புகளின் ஆரோக்கியம் பேணவும் பங்களிக்க வேண்டும். இதன் மூலமே எதிர்கால சந்ததியும் தொழில் வாய்ப்பைப் பெறுவதான சந்தர்ப்பங்களை உருவாக்கும். அனைவரும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, மனிதனை மனிதன் என மதிக்கும் பண்பாட்டைத் தனிமனிதராக வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் செயல்நிலைகள் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனது கடமை என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். யதார்த்தங்களைத் தெரிந்துகொண்டும், சிந்தனை பூர்வமாகப் புரிந்து கொண்டும் சேவையின் தேவைகளை மேன்நிலைப் படுத்திக்கொள்ளவேண்டும்.

# 2017 வைகாசி மாத பலன்



## கன்னி

மற்றவர்களின் மனம்கோணாமல் பேசும் நீங்கள் கைமாறு கருதாமல் உதவுபவர்கள். சனியும், கேதுவும் வலுவாக இருப்பதால் முடியாததையும் முடித்துக் காட்டுவீர்கள். சவால்களில் வெற்றி பெறுவீர்கள். ஏமாற்றங்களிலிருந்து விடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தையும் தந்து முடிப்பீர்கள். திருமணம், சீமந்தம் என அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளாலும், விருந்தினர்களின் வருகையாலும் வீடு களைக்கட்டும். பிரபலங்களும் ஆதரவாக இருப்பார்கள். பங்குகள் மூலமாக பணம் வரும்.
அரசால் ஆதாயம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சொந்த ஊரில் பொதுக் காரியங்களையெல்லாம் முன்னின்று நடத்துவீர்கள். வேற்றுமொழி, மாற்றுமதத்தினரால் ஆதாயமடைவீர்கள். செவ்வாய் 9ல் நிற்பதால் உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சொத்துப் பிரச்சினைக்குச் சுமூகமான தீர்வு காண்பீர்கள். 8ஆம் திகதி முதல் புதன் சாதகமான இடத்துக்கு வருவதால் மனஇறுக்கங்களிலிருந்து விடுபடுவீர்கள். உறவினர், நண்பர்களுடனான மோதல்கள் விலகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். ராசிக்குள் குரு நிற்பதால் மூட்டு வலி, முதுகு வலி வந்து போகும். கணவன்மனைவிக்குள் சிறிய பிரச்சினைகள் வந்து நீங்கும்.
வீண் சந்தேகத்தையும் தவிர்க்கப்பாருங்கள். உங்களின் பிரபல யோகாதிபதியான சுக்கிரன் இந்த மாதம் முழுவதும் சாதகமாக இருப்பதால் எதிர்ப்புக்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்பார்த்த வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். கன்னிப் பெண்களே! உங்களுடைய ரசனை மாறும். உயர்கல்வியில் முன்னேறுவீர்கள். நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். சலுகைத் திட்டங்களை அறிவிப்பீர்கள். வாடிக்கையாளர்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதத்தை அறிந்து கொள்வீர்கள். கடையை வேறு நல்ல இடத்திற்கு மாற்றுவீர்கள்.
உத்தியோகத்தில் அலைச்சல் அதிகரிக்கும். மூத்த அதிகாரிகளால் பிரச்சினைகள் வெடிக்கும். சிலருக்கு புது வேலையும் கிடைக்கும். கலைத்துறையினரின் படைப்புக் கள் நல்ல விதத்தில் வெளியாகும். யதார்த்தமான பேச்சாலும், விவேகமான முடிவுகளாலும் வெற்றி பெறும் மாதமிது.

# வரலாற்றில் இன்றைய தினம்

1204 -லத்தீன் பேரரசின் முதல் பேரரசாக 9ஆம் போல்வின் முடிசூடினார்.
1568 -ஸ்கொட்லாந்து அரசி மேரி இங்கிலாந்தைச் சென்றடைந்தார்.
1770 -பின்னாளில் பிரான்சின் அரசரான லூயிஸ் அகஸ்ரி தனது 15 ஆவது வயதில் 14 வயது மேரி அன்ரனிற்றாவைத் திருமணம் செய்தார்.
1811 -ஸ்பெயின் போர்த்துக்கல் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கூட்டுப் படைகளால் அல்பீயூரா சண்டையில் பிரான்ஸ் தோற்கடிக்கப்பட்டது.
1812 -புசாறெஸ்ற் ஒப்பந்தத்தில் ரஷ்ய பீல்ட் மார்ஷல் மிக்கெய்ல் குருஷேதவ் ஒப்பமிட்டதையடுத்து ரஷ்ய துருக்கி போர் முடிவுக்கு வந்தது.
1822-கிரேக்க நகர் சௌலி துருக்கியரால் கைப்பற்றப்பட்டது.
1877 -பிரான்சில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.
1929 -கொலிவூட்டில் முதன் முதலாக அக்கடமி விருதுவழங்கும்கொண்டாட்டம்இடம்பெற்றது.
1951 -கண்டங்களுக்கிடையேயான முதலாவது ஒழுங்கான திட்டமிடப்பட்ட விமான சேவைதற்போதைய ஜோன் F கெனடி பன்னாட்டு விமானநிலையமென அழைக்கப்படும் ஐடில் வைல்ட் விமான நிலையத்துக்கும் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்துக்கும் இடையே எல்.அல்இஸ்ரேல் விமான சேவையால் தொடங்கப்பட்டது.
1966 -கலாசாரப் புரட்சியின் தொடக்கத்தைக் குறிக்கும் மே16 அறிவித்தல் சீன கம்யூனிஸ்ட் கட்சியால் விடுக்கப்பட்டது.
1969-வெனிரா திட்டத்திற்கமைய சோவியத் யூனியனின் வெனிரா 5 விண்கலம் வீனஸில் தரையிறங்கியது.
1974-யூகோஸ்லேவியாவின் ஆயுள் அரச தலைவராக யோசிப் புறொஷ்டிட்டோ தேர்வானார்.
1983-சூடான் மக்கள் விடுதலை இராணுவ இயக்கம் சூடானிய அரசுக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டது.
1991-ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாம் எலிசபெத் மகாராணி அமெரிக்க காங்கிரசின் கூட்டு அமர்வில் உரை நிகழ்த்தினார். அமெரிக்க காங்கிரசில் உரையாற்றிய முதல் பிரித்தானிய முடிக்குரியவர் இவரேயாவார்.
1997 -ஷயர் அரசதலைவர் முபுடு செசெ செகோ நாட்டை விட்டுத் தப்பியோடினார்.
2003 -கஸபிளன்கா பயங்கர வாதத் தாக்குதலில் மொரக்கோவில் 33 குடிமக்கள் உயிரிழந்ததுடன் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனரை.
2014 -கென்ய தலைநகர் நைரோபியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

**நாளை**

**வைகாசி-03**
புதன்கிழமை -17.05.2017
திதி: ஷஷ்டி பி.ப.01.13
நட்சத்திரம்: திருவோணம் முழுவதும்
சுபநேரம்:04.23-05.53 வரை
ராகுகாலம்:11.53-01.23 வரை

# சரியான வேளையில் வழங்கப்பட்ட ஆதீன முதல்வரின் அறிவுரை

இரண்டு விக்னேஸ்வரன்களும் தமது கடமைகளைச் சீராக நிறைவேற்றி வைப்பதில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார் நல்லை ஆதின முதல்வர்.
சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பொறுப்பு வகிக்கின்றார். ஆர்.விக்னேஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரண்டு பதவிகளையும் தமிழர்கள் மிகவும் உயர்வாகக் கருதுகின்றனர். வடக்கு மாகாண சபை தமிழ் மக்களின் பெரும் எதிர்பார்ப்புடன் அமைக்கப்பட்டது. இதன் மூலமாகத் தமது அபிலாசைகள் நிறைவேற்றி வைக்கப்படும் என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகும். முதலமைச்சர் என்ற வகையில் சி.வி.விக்னேஸ்வரன் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். தேவையற்ற பிரச்சினைகளில் இவர் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை விடுத்துத் தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதில்கூடிய கவனம் செலுத்த வேண்டும்.
தமிழர்களின் மிகப்பெரிய கல்விச் சொத்தாக யாழ். பல்கலைக்கழகம் கருதப்படுகின்றது. பல புகழ்வாய்ந்த கல்வி மான்கள் உலவிய இடம் இது. சமீப காலமாக இதன் மாண்பைக் குலைக்கின்ற வகையில் பல சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அங்கு கற்பிக்கின்ற விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கும் சமுதாயத்தில் உயர்வான மதிப்பு உண்டு. ஆனால் இவர்களில் ஒரு சிலரின் தவறான நடவடிக்கைகள் ஒட்டுமொத் தப் பல்கலைக்கழகச் சமூகத்தையே தவ றான கண்கொண்டு பார்க்க வைத்துள்ளது.




புதிய துணைவேந்தர் தெரிவு தொடர்பாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுப் புதிய துணைவேந்தரான ஆர்.விக்னேஸ்வரன் தமது கடமைகளைச் சிறப்பாக ஆற்றவேண்டும். இதனால் அவர் தொடர்பாக எழுந்த விமர்சனங்கள் வலுவிழந்து போவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | | | | | 9 | |
| | 9 | | | 4 | | 7 | | |
| | 8 | 5 | | | | 4 | 6 | |
| | | 1 | 2 | | 4 | | | 9 |
| | 2 | | 5 | 9 | 6 | | | |
| 9 | | | 8 | | | 2 | | |
| | 6 | 2 | | | | 1 | 4 | |
| | | 9 | | 2 | | | | |
| | | | | | | 9 | 2 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





# லாரன்ஸ் அன்னைக்கு கொடுத்த பரிசு

தமிழ் சினிமாவில் பிரபலமான நடிகராக இருப்பவர் ராகவா லாரன்ஸ். நடன அமைப்பாளராக தனது திரைப்பய ணத்தை ஆரம்பித்து, இன்று, நடிகராக, இயக் குநராக, தயாரிப்பாளராக உயர்ந்துள்ளார். சினிமா தவிர்த்து சமூக நலத்திட்ட உதவி களையும் தனது அறக்கட்டளை மூலமாக அவர் செய்து வருகிறார். இந்த நிலையில் தனது அம்மா கண்மணிக்கு லாரன்ஸ் கோயில் கட்டியுள்ளார். சென்னை திருமுல்லை வாய லில் ராகவேந்தர் கோயில் அருகே தனது தாயார் கண்மணிக்கு லாரன்ஸ் கட்டியுள்ள கோயிலை, அன்னையர் தினமான நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இந்த விழா வில் வயது மூத்த ஆயிரம் தாய்மார்களுக்குச் சேலையும், ஆறு விவசாயப் பெண்களுக்கு தாலியையும் லாரன்சின் தாயார் கண்மணி வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சினிமா பிர பலங்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அக்னி @Akniee1

புரிந்து கொண்டு
பிரிந்து போன
எல்லா உறவுகளுக்குமே தெரியும்
அவர்களுக்கு நம்மை புரியவில்லை என்று....

18 15

நவரசமான ரசனையுடைய பொண்ணு வேணும் என்று தேடி அலையுறவனுக்கு...



புளிரசம் கூட ஒழுங்கா வைக்கத் தெரியாத பொண்டாட்டிதான் அமைவா... ஏன்னா... விதி... வலியது...!



மருத்துவர்:
நம்ம ஆஸ்பத்திரி விளம்பரத்துக்கு ஒரு நல்ல பஞ்ச் ஜோக் சொல்லு?

தாதியர்:
கூட்டிட்டு வாங்க தூக்கிட்டுப் போங்க, பணம் எங்களுக்கு பிணம் உங்களுக்கு..

கட்டிய மனைவியின் கன்னத்தில் உன் கைரேகை பதிய வைப்பதில் அல்ல ஆண்மை...



கடைசி வரை உன் அன்பால் அவள் உள்ளத்தில் காதல் ரேகையைப் பதிய வைப்பதே ஆண்மை...

அடுப்பில வைக்கிற குக்கரும் பொண்ணுங்க மனசுல இருக்கிற ரகசியமும் ஒன்னு....



பத்து நிமிடத்தில வெளிய வரல என்றா வெடிச்சிரும்...!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். அரசு வகையில் நன்மை உண்டாகும்.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணி யாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். சேமிப்பு உயரும்.

**கடகம்:** உறவினர் விடயத்தில் அதிருப்தி உண்டாகும். தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம்.

**சிங்கம்:** குடும்பப் பிரச்சினையில் சுமுக தீர்வு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். நிலுவைப் பணம் வசூலாகும். நண்பருக்குத் தேவையான உதவி புரிவீர்கள்.

**கன்னி:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விடா முயற்சியும், கடின உழைப்பும் தேவை. லாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச் செல வுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**துலாம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டு வர். முயற்சிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடு வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** பிறர் விடயத்தில் தலையிட வே ண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் காண் பீர்கள். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும்.

**தனுசு:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்ட மிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** குடும்பத்தினர் பாசத்துடன் நடப்பர். தொழில், வியாபாரத்தில் திட்ட மிட்ட இலக்கு நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். பணி யாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர். பெண் கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

**கும்பம்:** நண்பரின் பேச்சால் வருத்தம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண் கள் குடும்பநலனில் அக்கறை காட்டுவர்.

**மீனம்:** மற்றவர் விமர்சனத்தைப் பொருள் படுத்த மாட்டீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் படிப்படி யாக அதிகரிக்கும். வீடு வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள்.



# தப்புக் கணக்கு

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்து தன்னைச்சுத்தமாக்கிக்கொண்டு வந்து கொண்டிருந்தது. எதிரே ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது செல்ல வேண்டி ஏற்பட்டது. அப்போது அதன் எதிரில் பன்றி ஒன்று சேற்றில் உருண்டு புரண்டு குளித்து விட்டுதன் வாலை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. அப்போது யானை பன்றிக்கு வழிவிட்டு ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றது. பன்றி யானையைக் கடந்து சென்ற பின் யானை தன் வழிபோனது. அப்போது பன்றி அதன் பின்னால் வந்த பன்றியிடம் "பார்த்தாயா? மிருகங்களில் பெரியதென்று பேர் எடுத்தது யானை. அது இப்படி எனக்குப் பயந்து வழிவிட்டு நின்று ஒதுங்கிப் போகிறதே!" என்றது பெருமையாக. மற்றப் பன்றி "ஆமாம் எத்தனை அடக்க ஒடுக்கமாக விலகி இடம் கொடுத்துவிட்டுச் செல்வதை நானும் தான் பார்த்தேன்" என்று தலையாட்டியது.

இவர்களின் பேச்சுக்குரல் கேட்ட யானை தனக்குள் சிரித்துக் கொள்ள, மற்றொரு யானை அதனிடம் "உண்மையாகவா? நீ பன்றிக்கு பயந்து போய்விட்டாயா?" என்று கேட்டது. கோவில் யானையோ மீண்டும் சிரித்துக் கொண்டு 'நானோ' பெரிய உடம்புக் காரன். பாலமோ மிகவும் ஒடுக்கமானது. தற்செயலாக இருவரும் ஒரே நேரத்தில் பாலத்தைக் கடக்க நேர்ந்து நான் சற்று கால் இடறி பன்றி மீது விழுந்து விட்டால், பன்றி நசுங்கிச் செத்து விடும். மேலும் நான் குளித்து சுத்தமாக இருக்கிறேன். பன்றி தனது வாலையும் ஆட்டிக் கொண்டு வந்தது. தற்செயலாக பன்றியின் உடலெங்கும் இறைந்து கிடக்கும் சேறுகள் என்மீது விழுந்து விட்டால் குளித்து விட்டு வந்து சேற்றைப் பூசிக் கொண்டதாக ஆகிவிடுமென எண்ணியே நான் அடக்கமாக ஒதுங்கி நின்று பன்றிக்கு வழி விட்டேன். அதை பன்றி தப்புக் கணக்குப் போட்டு விட்டது" என்று மீண்டும் வாய் விட்டு சிரித்தது யானை.

**தன்பலம் பலவீனம் அறிந்தவர்கள் அடக்கமாகவே இருப்பார்கள். அடக்கத்தை அச்சம் என்று எவரும் தப்புக் கணக்குப் போட்டு விடக் கூடாது.**

**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின் (குறள் – 123)**

***பொருள் : அடக்கமே நமக்கு அறிவான செயல் என்று அறிந்து ஒருவன் அடங்கியிருப்பானாகில் அவ்வடக்கம் நல்லோரால் அறியப்பட்டு அவனுக்கு சிறப்பை உண்டாக்கும்.***




வன விலங்குகளில் அரசன் என்று சிங்கம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. திறந்த புல்வெளிகளிலும், நாணல் புதர்களிலும் சிங்கம் வாழும். அந்தப் பகுதிகளில் புல்மேய வரும் மான், வரிக்குதிரை, காட்டுக் கழுதை முதலியவற்றை சிங்கங்கள் வேட்டையாடி உண்ணும். பொதுவாக பெண் சிங்கமே இரையின் மீது பாய்ந்து கொல்லும். காட்டு எருமை போன்ற பெரிய விலங்குகளை ஆண் சிங்கம் பாய்ந்து கொல்லும். பசி உள்ள போது மட்டுமே சிங்கம் மற்ற மிருகங்களைக் கொல்லும். முதிர்ந்த வலிமை இழந்த சிங்கம் விலங்குகளைக் கொல்ல இயலாததால் அது மனிதனைக் கொன்று தின்னும். சிங்கங்கள் பல ஒன்று சேர்ந்து இரவில் இரை தேடச் செல்லும் வழக்கத்தையுடையன. ஆண்சிங்கத்துக்கு தலையிலும், கழுத்திலும், தோள்களிலும் அடர்ந்து வளர்ந்த நீண்ட பிடரி மயிர் உண்டு. பெண் சிங்கத்துக்கு பிடரி மயிர் இல்லை. பெண், குட்டி ஈனும் காலங்களில் ஆண் சிங்கமே இரை தேடி பெண்ணுக்கு கொடுக்கும். இதுசோம்பல்மிகுந்தவிலங்கு. ஆனால் இரை தேடும் நேரங்களிலே இது சுறு சுறுப்பாக இயங்கும். இவை 20 ஆண்டுகள் வரை வாழும். நன்கு வளர்ந்த சிங்கம் 1 மீற்றர் உயரம் இருக்கும். பெண் ஆணைவிடச் சிறியது. நிறையிலும் ஆண் எடையிலும் பாதியளவே உடையது. முன்னர் உலகின் பல பாங்களிலும் வாழ்ந்த சிங்கங்கள் தற்பொழுது ஆபிரிக்கா கண்டத்தின் சில பகுதிகளிலும், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலும் மட்டுமே வாழுகின்றன.

## சிங்கமும் முயலும்

சிங்கம் ஒன்றின் உணவாய் நாளும்
ஒரு விலங்கு சென்றதாம்
அங்கு வாழ்ந்த சிறிய முயலின்
நாளும் வந்து சேர்ந்ததாம்

மூளை கொண்ட முயலார் ஒரு
திட்டம் தீட்டி நின்றாராம்
வேளை வந்த போது அவரும்
நடந்து பிந்திச் சென்றாராம்

பசியினாலே வாட்ட முற்ற
சிங்கம் சீறிச் சினந்த தாம்
அசிங்கம் ஒன்றைக் கிணற்றில் கண்டேன்
என்று முயலும் சொன்னதாம்

போட்டியாக இன்னும் ஒன்றா?
காட்டு கொல்வேன் என்றதாம்
கூட்டிச் சென்ற முயலும் கிணற்றுள்
குனிந்து காட்டி நின்றதாம்

கிணற்றுள் சிங்க நிழலைக் கண்டு
கொல்லக் கிணற்றுள் பாய்ந்ததாம்
சுணக்கமின்றி முயலும் ஓடி
செய்தி சொல்லி மகிழ்ந்ததாம்






- கோயில்கள் ஒரு ஊரின் பெருமைக்கு எடுத்துக் காட்டாகும்.
- அவையே ஊரின் சிறப்புக்கு அணிகலனாகவும் விளங்குகின்றன.
- கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார் ஔவை மூதாட்டி.
- பொதுவாக கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம்.
- கிறிஸ்தவரின் வழிபாட்டிடம் ஆலயம் என்றும், பௌத்தர்களினது விகாரை என்றும், இஸ்லாமியரது பள்ளிவாசல் என்றும், இந்துக்களினது கோயில் என்றும் அழைக்கப்படும்.
- கோயில் திருவிழாக்கள் ஊர் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவன.
- நாங்கள் இந்துக்கள். எங்கள் கோயில் திருவிழாவருடாவருடம்இருபத்தைந்து நாள்கள் இடம் பெறும்.
- திருவிழாக்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்தமாடலுடன் முடிவுறும்.
- இரவு வேளைகளில் கோயிலும், சூழலும் பளிச் சென்று ஒளி வீசும்.
- கோயில் கொடியேறினால் ஊர் மக்கள் அனைவரும் பக்தியில் மூழ்கி விடுவர்.
- மக்கள் மச்சம் மாமிசம் தவிர்த்து காய்கறி, பால் பழம் என்பவற்றை உணவாகக் கொள்வர்.
- திருவிழாக் காலங்களில் கோயில்களில் ஆறு கால பூசைகளும், விசேட பூசைகளும் நடைபெறும்.
- கோயில் சூழல் பக்தர்களால் நிறைந்து தெய்வீக மணம் கமழும்.
- தேர்த் திருவிழா மிகவும் முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்ததாகும்.
- அலங்கரிக்கப்பட்ட தேரில் சுவாமி வெளி வீதி வலம் வருவது கண் கொள்ளாக் காட்சி.
- இந்தத் தேர் திருவிழாவைக் கண்டு களிக்க ஊர் மக்கள் மட்டுமல்ல, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இன, மத வேறுபாடின்றி மக்கள் வந்து கூடுவர்.
- பக்தர்கள் தங்களது வேண்டுதல்களை (நேர்த்திக் கடன்) பல வழிமுறைகளில் நிறைவேற்றுவர்.
- அடியார்கள் விரதமிருத்தல், தீ மிதித்தல், அங்கப் பிரதட்சணம் போன்றவற்றில் ஈடுபடுவர்.
- மேலும் கால்நடையாக தலயாத்திரை வருதல், பலவகைக் காவடி ஆட்டங்கள், காரகாட்டங்கள் போன்றவையும் இடம்பெறும்.

## கிறிஸ்ட்டபர் கொலம்பஸ் (1451 – 1506)



அமெரிக்கா கண்டத்துக்கு வழி கண்டு பிடித்தவர் கொலம்பஸ். புகழ்பெற்ற இந்த மாலுமி இத்தாலியில் ஜெனோவா நகரில் பிறந்தார். அந்த நாள்களில் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் செல்வாக்கைக் கேள்விப்பட்ட கொலம்பஸ், அந்த நாடுகளுக்குச் செல்ல கடல்வழியாக சுருக்கமான பாதையைக் கண்டுபிடிக்க விரும்பினார். பூமி உருண்டையாக இருப்பதால் ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டால் இந்தியாவை விரைவில் அடையலாமென நினைத்து ஸ்பெயின் நாட்டு அரசரிடம் உதவி பெற்று 1492 இல் 90 பேருடன் மூன்று கப்பல்களில் கொலம்பஸ் குழுவினர் மேற்கால் புறப்பட்டுப் போயினர். போகும் வழியில் அந்திலாந்திக் சமுத்திரத்தில் கியூபா, ஹேட்டி ஆகிய தீவுகளைக் கண்டுபிடித்து, அங்கே அப்போது வாழ்ந்தவர்களை இந்தியர் எனக் கருதி மேற்கிந்திய தீவுகள் என பெயர் வைத்து மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பி 17 கப்பல்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுடன் மீண்டும் புறப்பட்டுப் போய் அமெரிக்காவுக்கு அண்மையில் சில தீவுகளைக் கண்டுபிடித்தார். 1498இல் மூன்றாவது முறையும் சென்று தென்னமெரிக்க கண்டத்தின் கரையை அடைந்தார். நான்காவது முறையாகவும் ஸ்பெயின் அரசரின் உதவியில் 1502 இல் புறப்பட்ட இவர், தனது முயற்சியில் வெற்றி பெறாமலே 1506 இல் இறந்தார். இந்தியாவுக்கு புதுவழி கண்டு பிடிக்கும் முயற்சியில் கொலம்பஸ் வெற்றிபெறவில்லையாயினும் அவரது விடா முயற்சியினால் புதிய கண்டமான அமெரிக்காவை அடைய இவர் வழி கண்டு பிடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார்.





**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரிசையிலும் ஐந்து சொற்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு சொற்கள் ஒன்றை ஒன்று ஒத்தவை. இரண்டு சொற்கள் ஒன்றுக்கொன்று எதிரானவை. எஞ்சியிருக்கும் சொல்லின் கீழ் கோடிடுக.**

உ+ம் மகிழ்ச்சி, ஒளி, பகல், வெளிச்சம், கவலை

1. வெள்ளை, உருவம், வெண்மை, அருவம், உயரம்
2. அழகு, ஞாபகம், ஒலி, மறதி, வனப்பு
3. தூரம், குற்றம், தாமதம், மாசு, விரைவு
4. வானம், மேடு, பூமி, கடல், ஆழி
5. புராதன, அபிவிருத்தி, நவீன, முன்னேற்றம், அமைதி
6. சிநேகிதம், துரும்பு, நட்பு, தூண், திடம்
7. ஏற்றுமதி, சந்திரன், பவனம், இறக்குமதி, மதி
8. சினம், கோபம், நண்பகல், நள்ளிரவு, கானல்
9. அபாயம், குறைவு, கொடுமை, நிறைவு, ஆபத்து
10. தூரம், உணவு, சமீபம், போசனம், வனப்பு

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் இரு சொற்கள் ஒன்றுக்கொன்று எதிர்க் கருத்துடையவை. அந்தச் சொற்களின் கீழ் கோடிடுக.**

உ+ம் புத்திரன், அடியாள், அன்னை, நடிகை, தோழி, தந்தை

1. ஆக்கம், வெந்நீர், தீயோர், அகம், அகலம், புறம்
2. அண்மை, விரிதல், தூய்மை, சேய்மை, வெற்றி
3. இன்பமான, பெரிய, திண்மையான, பிரபலமான, துன்பமான, பெருமையான
4. காலம், சம்பவம், வாதி, தூரம், திரவம், திண்மம்
5. துணிவுள்ள, மூடுதல், கோழையான, விசாலமான, தளர்ச்சியுள்ள, குறையுள்ள
6. மரியாதையான, மானமுள்ள, மதிப்புள்ள, கீர்த்தியான, அவமதிப்புள்ள
7. மேடு, மலை, குளம், பள்ளம், காலம், இருள்
8. அனாவசியம், ஆயாசம், மங்கலம், அவசியம், ஆதரவு, யோக்கியம்.
9. பேரன், பிரான், மணமகன், பிராட்டி, பாங்கி, பாதகி
10. வன்மையற்ற, கசப்பான, கொடூரமான, சின்னஞ்சிறிய, இனிப்பான, பொருத்தமற்ற



# ஒட்டகம்

## உணவையும் நீரையும் சேமித்து வாழும் "பாலைவனக் கப்பல்"

மத்திய மற்றும் தென் அமெரிக்கக் காடுகளில் வளரும் ஸ்லோத் (Sloth) எனும் விலங்கு ஒரு மந்தமான விலங்கு. சடுதியாக இவற்றைப் பார்க்கும் போது எமது நாட்டில் காணப்படும் தேவாங்கு (குரங்கு) போலவே இவை தோற்றம் தருகின்றன.

இவற்றின் பெயருக்கு ஏற்றாற்போல் இவை வேகம் குறைந்தவை. மில்லியன் ஆண்டுகளில் எப்படியோ தப்பிப் பிழைத்துக்கொண்ட அரிய விலங்கு இனமாகக் காணப்படுகிறது. இவற்றின் அழிவுக்கு பேராசையும் சுயநலமும் கொண்ட மனிதர்களே காரணமாகச் சொல்லப்படுகின்றனர்.

இவை மரங்களின் மேலேயே வசிக்கும் மிகச் சாதுவான விலங்குகள். அதிலும் ஒரு குறிப்பிட்ட மரத்தின் இலைகளை மட்டுமே உணவாக உட்கொள்கின்றன. இந்த இலைகளை பசி அடங்கும்வரை உண்கின்றன. அதன் பின்னர் ஒருவார காலத்துக்கு வேறு எதையும் அவை உண்பதில்லை. இவற்றின் சமிபாட்டு அமைப்பு என்பது இந்தச் செயல்நிலைகளுக்கு இயைபாக்கமடைந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இவை ஒருபோதும் மரத்துக்கு மரம் தாவுவதில்லை. மரத்தின் மேலும் கீழுமாகவே இயக்கமுறுகின்றன. கால்களில் 'பாவ்' என்று சொல்லப்படும் விரல் அமைப்பு இல்லை. நீண்டதான மூன்று நகம் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. நகர மயமாதல், காடழிவு, சாலைகளை அமைத்தல் போன்ற காரணிகள் இந்த விலங்கு இனத்தையும் அழிவு நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன. மரங்களை வெட்டி அழிக்கும்போது மேலிருந்து விழுந்தே இவற்றுள் பல அழிவடைந்து போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலகம் முழுவதிலும் சேர்ந்து இவற்றின் தற்போதைய எண்ணிக்கை நூற்றைம்பது என்று கணிப்பிடப்பட்டுள்ளது.



# ஸ்லோத் (Sloth)

## அழிவின் நிலை விலங்கு

ஒட்டகம் என்றவுடன் பாலைவனத்தின் தோற்ற வெளியும் சேர்ந்தே நினைவு கொள்ளப்படுகிறது.

பாலைவனத்தை வாழ்விடமாகக்கொண்டு வாழும் இந்த மிருகங்களிடம் இருக்கும் விசேடத்துவம், அவற்றால் உணவும் நீரும் இன்றி நீண்ட காலம் வாழத்தக்க தன்மையாகும்.

ஆம், அவற்றின் முதுகில் இருப்பதான கட்டி போன்ற அமைப்பினுள் பல நாள்களுக்குத் தேவையான கொழுப்பைச் சேமித்துவைத்துக்கொள்கின்றன. அத்துடன் வயிற்றினுள் அண்ணளவாக 4 லீற்றருக்கும் மேலான நீரையும் சேமித்துவைத்துக்கொள்கின்றன. இரை தேவைப்படும் போது அவற்றை சமிபாட்டுக்கு அனுப்பும் திறனை ஒட்டகங்கள் இயற்கையாகவே கொண்டுள்ளன.

ஒட்டகங்களின் மூக்கை அவதானிக்கும்போது அவை இரு புறமும் அமைந்தி ருப்பதுடன் சவ்வு போன்ற அமைப்பானதாகத் தோற்றம் தரும். இவை கூட சுவா சத்தில் மணற் துகள்கள் இடையூறு செய்வதைத் தடுப்பதற்கான இயைபாக்கமாகவே கொள்ளப்படுகிறது.

அவ்வாறே அவற்றின் காதுகளில் இருப்பதான அடர்த்தியான முடிகளும் தூசுகள் காதுக்குள் செல்வதை தடுப்பதற்கான செயலுறுதியைக் கொண்டுள்ளன.

அதேபோன்று ஒட்டகங்களின் கால்களை நோக்கின், அடிப்பகுதி எப்போதும் தட்டையானதாக அமைந்திருக்கும். காரணம், மணலினுள் புதைவதை தடுப்பதற்கே.

இந்த நிலையிலே ஒட்டகங்களின் கண் இமைகள் நீண்டு அழகாக இருக்கும்.

மணல் புயல்கள் நிறைந்த பாலைவனத்தில் பயணிக்கும்போது கண்களைத் தூசுகள், மணல்கள் பாதிக்காமல் இருப்பதற்கான இயைபாக்கமாகவே இந்த அமைப்பை இவை கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இன்று...

நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவைமாற்றத்தை முன்னெடுப்பதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியாக உள்ளார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம்சிங்கவும் அதற்கு இணங்கியுள்ளார். அமைச்சரவை மாற்றத்தின் பின்னரே அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுவதில் அரச தலைவர் உறுதியாக உள்ளார்.

இதன் காரணமாக வழமையாகச் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறாது என்று தெரிய வருகின்றது. கடந்த காலங்களில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள காலங்களிலும் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்று வந்தது.

தலைமை அமைச்சர் ரணில் நாடு திரும்பிய பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் அதன் பின்னரே, அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சிவசுப்பிரமணியம்



பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சிவசுப்பிரமணியம் நேற்று (15.05.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தணிகாசலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப் பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சுரேஷ்குமாரின் பாசமிகு தாயும் அன்ஜலிக்கின் பாசமிகு மாமியும் றொகானின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
021 226 3870

தகவல்:
குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுகளில்

8 ஆம் ஆண்டு

மலர்வு 25.04.1984
உதிர்வு 16.05.2009



கதிர்காமவேலன் ஹரிதாஸ்

25 ஆம் ஆண்டு

மலர்வு 11.03.1972
உதிர்வு 28.08.1992



கதிர்காமவேலன் சிறிகாந்தன்

பாதி வாழ்க்கையினிலே கண்ணிமைக்கும் முன்னே
மறைந்துவிட்ட உமதுறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்து விட்ட உமதன்பின் உலராத வாசனையும்
ஆண்டுகள் பலகோடி ஆனாலும் அகலாது எமைவிட்டு.....

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

என்றும் உங்கள் பிரிவுத்துயரில் வாடும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 03 . 1953



மறைவு 26 . 05 . 2016

### திருமதி சிவமணி சோமசுந்தரம்

அம்மா ! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ ?
ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ ?
செம்மையாம் சிரிப்பு செந்தழிப்பாம் பூ வதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ ?
உம்மைக்காக்க உழைத்தோம் முடியவில்லை !
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம் !
எம் வீட்டு நாயகியே ! என்றென்றும் நாம் மறவோம் !
இறைவன் தாள் மலரில் நீமலரப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கண்ணன் ஸ்ரோர்ஸ்
வேம்படி, காரைநகர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2877 திகதி: 15.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இல. | புதன்கிழமை ஜக்பொட்
17 22 43 58 Q | 20 | ரூ. 61,156,622/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.05.17 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1363 சீட்டிழுப்பு திகதி 2017.05.15
வெற்றி இலக்கங்கள் 22 29 44 64 ஆங்கில எழுத்து C
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,620,260/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 650
சீட்டிழுப்பு திகதி 15.05.2017 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 30 34 47 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45, 234, 528/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
பச்சை நிற டிக்கட்டுக்கள் 18.05.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கேள்வி அறிவித்தல்-திருத்தம்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
## சபைநிதி வேலைத்திட்டம்

03.05.2017 ஆம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் காட்டப்பட்ட அட்டவணையில் 6 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட இருக்கவேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் என்பது இருக்க வேண்டிய தரம் எனவும் அதன் தலைப்பின் கீழ் 01 தொடக்கம் 07 வரையுள்ள "குறிப்பிட்ட தரம் அல்லது அதற்கு மேல்" என்ற வாசகம் "குறிப்பிட்ட தரம்" எனவும் மாற்றப்பட்டுள்ளது.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்) 16.05.2017

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.04.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

அமரர்

**அருளம்பலம் சுந்தரலிங்கம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17.05.2017) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

No. 15, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
சு. தனேஸ்குமார் (கண்ணன்)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி சிவக்கொழுந்து



பிறப்பு 06.04.1930 இறப்பு 11.05.2017

யாழ். கல்வியங்காடு கோப்பாயைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவக் கொழுந்து (11.05.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்புமருமகனும் பார்வதி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் இந்திராணி (ஜேர்மனி), ராஜலிங்கம் (பிரான்ஸ்), கிருபாராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஆச்சிமுத்து, சுப்பிரமணியம், கனகம்மா, வேலாயுதம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தங்கராஜா (ஜேர்மனி), கமலினி (பிரான்ஸ்), தனராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலக்ஷன் அனோஜா (பிரான்ஸ்), நிஷாந் டாரிகா (ஜேர்மனி), கார்த்தீஸ் (ஜேர்மனி), பிரவீணன் (பிரான்ஸ்), பிரணவன் (பிரான்ஸ்), பிரியங்கா (பிரான்ஸ்), ஸ்டீபன் (பிரான்ஸ்), சிவதாஸ் தனுஷா (லண்டன்), டிலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.05.2017) புதன் கிழமை பி.ப 1 - 2 மணிக்கு Crematorium of Pere Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris France Metro Station Gambetta/ Pere Lachaise) இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
மச்சான், பெறாமக்கள்

## திருத்தம்

**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் தையல் போதனாசிரியர் தரம் III**

**பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**

**திறந்த போட்டிப் பரீட்சை – 2017**

மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சை தொடர்பாக **05.05.2017ஆம்** திகதிய **தினக்குரல், உதயன், வலம்புரி** ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட **அறிவித்தல் மற்றும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரம் சார்பாக** மேற்படி பரீட்சைக்குரிய விளம்பரத்தின் **பந்தி 04.5** ஆனது பின்வருமாறு திருத்தப்படுகிறது.

**திருத்தம்:-**
விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை தொடர்பான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் என்பன மாற்றமின்றி அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

**ரூ.வரதலிங்கம், செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.** 15.05.2017

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 12.06.1948 விண்ணில் 16.04.2017

திருமதி
**இராசபூரணம் கந்தையா**



கடந்த 16.04.2017 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் துண்டுப்பிரசுரங்கள், பனர்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எல்லா வகையிலும் உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**114, திருமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**பிள்ளைகள்**
**078 810 0016**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 06.04.1948 மறைவு 16.04.2017

கடந்த 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி
**சிவபாலாம்பிகை பரமசிவம்பிள்ளை**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (16.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் A.R.V இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன்அழைக்கின்றோம்.

A.R.V இல்லம், பொன்னாவளை, களபூமி, காரைநகர்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

திருமதி
### தயாநிதி சண்முகநாதன்



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதி சண்முகநாதன் 15.05.2017 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சண்முகநாதனின் (ESS JEY ELECTRICAL SALES Rep.) அன்பு மனைவியும் கிருத்திகன் (Soft Logic Life), கார்த்திகன் (துர்க்கா மிக்ஷர்), அனந்தீசன் (NETWORK ENGINEER, Tekxeon Interconnect (Pvt) Ltd) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**077 808 4770,**
**077 857 5755**

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**

## பாதுகாப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் வவுனியா, புளியங்குளம் புதூர் செல்லும் வீதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்த தாவது:

கொழும்பிலிருந்து நேற்றுப் பிற்பகல் 1.35 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி யாழ்தேவி தொடருந்து பயணித்துள்ளது. இதன்போது வவுனியா, புளியங்குளம் புதூர் பகுதியிலுள்ள நாகதம்பிரான் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள பாதுகாப்பற்ற கடவையில் உழவு இயந்திரம் ஒன்று மணல் ஏற்றியவாறு வந்துள்ளது. இதன் போது தொடருந்து மோதியதில் உழவு இயந்திரத்தில் பயணித்த இரு இளைஞர்களும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். புதூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஜெகநாதன் ரஜிதரன்(வயது20), புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் கீர்த்தீபன் (வயது -21) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பாதுகாப்பான தொடருந்துக் கடவை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆயினும் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (த)

## பெருமளவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் அவை இன்று இராணுவத்தினரின் உதவியுடன் மீட்கப்பட உள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் குறித்த கிணற்றில் இருந்து 20 பெட்டிகள் மீட்கப்பட்டன.

அந்த பெட்டிகளுள் பொதி செய்யப்பட்ட நிலையில் 300 கைக்குண்டுகள், 40 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் 31, 60 மில்லிமீற்றர் மோட்டார் குண்டுகள் 41 இருப்பது கண்டறியப்பட்டன. அந்த வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டன.

வலி.வடக்கு தையிட்டி அரசடிப் பிள்ளையார் கோயிலை அண்மித்துள்ள காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் பணி இடம்பெறுகிறது. நேற்று முன்தினம் குறித்த காணியிலுள்ள கிணற்றை இறைத்துச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது வெடிபொருள்கள் கண்டறியப்பட்டன.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது. பொலிஸார் சிறப்பு அதிரடிப்படையினரை வரவழைத்தனர். குண்டுகள் சில மீட்கப்பட்டன. மீட்புப் பணிகள் நேற்றும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் நேற்று நண்பகல் வரை குண்டுகள் மீட்கும் பணிகள் இடம்பெற்றன. அந்தக் கிணற்றினுள் இன்னும் வெடிபொருட்கள் இருப்பது இனம்காணப்பட்டுள்ளது. எனவே இராணுவத்தினரின் உதவியுடன் இன்று அவை மீட்கப்படும் எனப் பொலிஸார் மேலும் கூறினர். (த-21-26)

**ஆள் தேவை**

புடைவைக்கடைக்கு விற்பனையாளராக/ பழக விரும்பும் ஆண் / பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**வேலையாள்கள்தேவை**

குளிர்பான நிலையம் ஒன்றுக்கு பரிமாறுபவர், ரீமேக்கர் தேவை
தகுந்த ஊதியம்வழங்கப்படும்.
**தொடர்புக்கு ; 075 895 9976**

**வீடு வாடகைக்கு**

யாழ்.சுண்டுக்குளிப் பகுதியில் வீடுவாடகைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு;**
**077 9841394**

## முதல்வர்...

வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக இருந்த திருமதி ரூபினி வரதலிங்கத்தை, வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சின் செயலாளராகவும், வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக சி.ஏ.மோகன்ராஸையும் வடக்கு மாகாண ஆளுநர் குரே நியமித்திருந்தார். இவர்களுக்கான நியமனக் கடிதம் கடந்த வாரம் வழங்கப்பட்டிருந்தது. முதலமைச்சர் அமைச்சின் செயலராகப் பதவி வகிக்கும் திருமதி வி.கேதீஸ்வரனை அதே அமைச்சில் மூத்த உதவிச் செயலராக நியமித்தும் ஆளுநர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனை அடுத்தே முதலமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையிலான இழுபறி ஆரம்பித்துள்ளது. தனது அமைச்சுக்கான செயலாளரை அந்தப் பதவியில் இருந்து தூக்குவதற்கும் அந்த இடத்திற்குப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்கும் முன்னர் தன்னோடு கலந்தாலோசிக்கப்படவில்லை என்று முதலமைச்சர் கொதித்துப் போயுள்ளார். ஆளுநர் இவ்வாறு தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் அவர் கருதுகிறார். இதனாலேயே ஆளுநரால் மாற்றங்கள் வழங்கப்பட்ட மூவரையும் புதிய நியமனங்களை ஏற்கவேண்டாம் என்று முதலமைச்சர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதங்கள் முதலமைச்சர் அலுவலகத்தால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவசர அவசரமாக குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன. அந்தக் கடிதத்தில், வடக்கு மாகாண ஆளுநருடன் இந்த நியமனங்கள் தொடர்பில் தான் பேச்சு நடத்த உள்ளார் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதுவரை ஆளுநரால் வழங்கப்பட்ட நியமனங்களை ஏற்க வேண்டாம் என்றும் கேட்டுள்ளார்.

எனினும், இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு அவர்களது தர நிர்ணயத்திற்கு ஏற்ப பதவி ஒதுக்கீடுகளை வழங்க வடக்கு மாகாண சபை தவறியிருப்பதே ஆளுநர் இந்த விடயத்தில் மூக்கை நுழைப்பதற்கான தேவையை ஏற்படுத்தியது என்று ஆளுநர் தரப்பு வட்டாரங்கள் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தன. அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் அவர்களது சேவை மூப்பு அடிப்படையிலேயே நாடு முழுவதும் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஆனால், வடக்கு மாகாண சபையில் அந்தத் தர நிர்ணயம் பின்பற்றப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. கூட்டமைப்பின் அமைச்சர்கள் தம்மோடு ஒத்திசைந்து போகக்கூடியவர்களையே தமது அமைச்சுக்களின் செயலாளர்களாகவும் திணைக்களங்களின் தலைவர்களாகவும் நியமிக்க விரும்புகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு நீண்ட நாள்களாகவே உண்டு.

மகிந்தவின் காலத்தில் ஆளுநராக இருந்தவரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தனக்கு வேண்டிய விதத்தில் அதிகாரிகளைத் தூக்கிப் பந்தாடி வந்தார். சரியான, தெளிவான காரணங்கள் இன்றி அவரது உத்தரவின் பேரில் இரவோடு இரவாக அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றதும் இந்த நிலையில் மாற்றம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது நடக்கவில்லை.

பதவி நிலையில் சேவை மூப்பு அதிகாரிகள் பலர் இருக்கத்தக்கதாக மிக இளநிலையில் இருந்தவரான பற்றிக் நிரஞ்சன் வடமாகாண விவசாய அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டார். இது அரச தாபன விதிக் கோவைக்கு முரணானது. நீண்ட இழுபறியின் பின்னர் மிக அண்மையிலேயே அவர் அந்தப் பதவியிலிருந்து மாற்றப்பட்டார். ஆளுநரே அந்த இடமாற்றத்தையும் வழங்கினார்.

அதுபோன்றே முதலமைச்சர் அமைச்சின் செயலாளராக இருப்பவரிலும் பார்க்க சேவை மூப்புடைய அதிகாரிகள் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். அவர்களில் ஒரு சிலர் பதவிகள் வழங்கப்படாமல் அல்லது அவர்களது தரத்துக்குக் குறைந்த பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். அப்படியிருக்கத்தக்கதாக முதலமைச்சர் அமைச்சின் செயலாளராக நிர்வாக சேவைத் தரநிலையில் இரண்டாம் இடத்தில் (கிளாஸ் வன்) உள்ளவரான திருமதி வீ.கேதீஸ்வரன் பதவியில் உள்ளார்.

அவர் சேவையில் இணைந்ததன் அடிப்படையில் தற்போது நிர்வாக சேவையின் முதல் இடத்தில் (ஸ்பெசல் கிளாஸ்) இருக்கவேண்டியவர் என்றாலும் சில காரணங்களால் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். ஆனால் அவரது பதவியில் நிர்வாக சேவையின் முதல் இடத்தில் இருக்கக்கூடிய அதிகாரி ஒருவரே இருக்க வேண்டும். அதனடிப்படையிலேயே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது.

இது தவிர நிர்வாக சேவைக்கு உரிய பதவிகளில் வேறு சேவைகளைச் சேர்ந்தவர்களும் நீண்ட காலமாக அமர்ந்துள்ளனர். அவர்களை அந்தப் பதவிகளில் இருந்து அகற்றி நிர்வாக சேவை அதிகாரிகளை நியமிப்ப தற்கும் அமைச்சர்கள் சிலர் தடையாக இருக்கின்றனர். இதுபோன்ற நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாகவே ஆளுநர் இந்த விடயத்தில் நிலைமையை நேர் சீர் செய்ய வேண்டியேற்பட்டது.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5,101)

## வடமத்திய...

எனினும் அது தொடர்பான கடிதத்தை ஏற்க ஆளுநர் மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. வடமத்திய மாகாண சபை 33 உறுப்பினர்களைக் கொண்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் (அரச தலைவர் மைத்திரியின் அணி) வசம் அதன் ஆட்சி உள்ளது. அண்மையில் இந்த மாகாண சபையின் அமைச்சரவையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மாற்றி அமைத்தார். அரச தலைவர் ஆட்சிக்கு வந்த உடனேயே அதன் முதலமைச்சராக இருந்தவரான எம்.ரஞ்சித்தை அந்தப் பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

நீக்கப்பட்ட ரஞ்சித்தை மீண்டும் முதலமைச்சராக நியமித்து ஆட்சி அதிகாரத்தைத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்றே மகிந்த அணியினர் முதலமைச்சரைக் கோரி வருகின்றனர். இது தொடர்பில் வடமத்திய மாகாண ஆளுநரை, மகிந்த அணியின் 17 மாகாண சபை உறுப்பினர்களும் நேற்று நேரில் சென்று சந்தித்தனர். தம்மை ஆட்சி அமைக்கக் கோரும் கடிதத்தை அவர்கள் சமர்ப்பித்தனர் என்றும் அதனை ஏற்க ஆளுநர் மறுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

## இனவாதத்தின்...

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று, அமெரிக்க காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (உ-5)

## சவேந்திர...

துறைப் பொறுப்பாளராக இருந்தவரான எழிலன் உள்ளிட்ட பலர் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். அவர்களது உறவினர்களால் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களில் சிலரின் உறவினர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆட்அகொணர்வு மனு தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுவின் மீது விசாரணை செய்து அறிக்கையிடுமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிவான் மன்றுக்குப் பணித்தது. அதனடிப்படையில் விசாரணை இடம்பெற்று வருகிறது. நேற்றைய தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மார்ச் மாதம் 30ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த காலப்பகுதியில் இறுதிக்கட்டப் போரில் ஈடுபட்டிருந்த 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை சாட்சியாக நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிடும்படி வாதிகள் தரப்புச் சட்டத்தரணி கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்படாதவர்களை இந்த வழக்கில் சாட்சியாகக் கூப்பிட முடியாது என்று தெரிவித்து அந்தக் கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்று. வழக்கு விசாரணை ஜூன் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-7)

## வித்தியா...

நேற்றுக் காலை 8 மணியிலிருந்து மாலை 5 வரை இந்த அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், "நீதி விசாரனையில் அரசியல் தலையீடு வேண்டாம்","யாழ் மேல் நீதிமன்ற விசாரணையில் சட்டமா அதிபருக்கு நம்பிக்கையில்லையா", நீதி விசாரணை யாழ் மேல் நீதிமன்றத்திலேயே இடம் பெற வேண்டும்",நீதி எங்கே செல்கின்றது","கூட்டாட்சி அரசே நீதியான தீர்ப்பைத் தா",ட்ரயல் அட்பார் விசாரணை முறையில் எமக்கு நம்பிக்கை இல்லை" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியாவின் விசாரனைகளை ஆரம்பத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடத்தினார்கள். பின்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தினார்கள். தற்போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் சில அரசியல் சக்திகள் அதனைக் கொழும்புக்கு மாற்றி வழக்கைத் திசை திருப்பப் பார்க்கின்றனர்.

இந்த வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலேயே இடம் பெறவேண்டும். பல வழக்குகளுக்கு நீதியான தீர்ப்புக்களை வழங்கிய யாழ். மேல் நீதிமன்றின் மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆகவே எவ்வாறான விசாரணை முறைமை என்றாலும் அது யாழ்ப்பாணத்திலேயே இடம் பெறவேண்டும் என வலியுறுத்துகிறோம். அதற்காகவே இந்த அடையாள உணவு ஒறுப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் - என்றனர். (த-8)

## கேரளக்...

மட்டும் இப்படி அதிகளவானோர் கஞ்சாவுடன் கைது செய்யப்படுமளவுக்குப் போதைப் பொருள் கடத்தல் இடம்பெறுகின்றமை குறித்துப் பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கம்பகா போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சிறப்புச் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எவ்வாறு கஞ்சா கிடைக்கின்றது? என்ன ஒழுங்கமைப்பில் கடத்தல்,விற்பனை இடம் பெறுகின்றது? என்பது தொடர்பில் பொலிஸாருக்கும் இன்னும் தெரியவில்லை. அவை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-4)

## வடக்கு...

கண்டியில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

"மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக அம்பாறைக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கான யோசனை இந்திய அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது" என்றார் அவர்.

வெசாக் கொண்டாட்டங்களுக்காக இலங்கை வந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, மலையகத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போது அங்குள்ள தமிழ் மக்களுக்கு வீடு கட்டித் தருவதாக உறுதியளித்திருந்தார். வேறு பல உதவிகளைச் செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். (உ-5)

## நந்திக்...

நிலையிலும் இறுதிப் போர் நடைபெற்ற பிரதேசமான நந்திக்கடல் பகுதியில் தற்பொழுதும் மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் மிதிவெடிகள் காணப்படுகின்றன.

உள்நாட்டுப் போர் முடிவடைந்து 8 வருடங்களாகியும் நந்திக்கடல் பகுதியில் போர் வடுக்கள் இன்றும் அந்த இடங்களில் காணப்படுகின்றது என அப்பகுதிக்கு சென்ற சிலர் தெரிவிக்கின்றனர்.

நந்திக் கடலில் ஏராளமான கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் நந்திக்கடலை அண்டிய கடற்கரைப்பகுதியில் மண்ணுக்குள் புதையுண்ட மிதிவெடிகள் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் அந்தக் கடற்கரையை பயன்படுத்துவதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர். (உ-6)

## சிவாஜிலிங்கத்தை...

கரியப்படுத்த இடமளிக்கப்படமாட்டாது" என்று அவர் தெரிவித்தார்.

அரநாயக்க பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார். "வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக இராணுவத்தினரை விமர்சிக்கின்றனர். அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் இராணுவத்தினரின் சேவையை பாராட்ட வேண்டிய அளவிற்கு இராணுவத்தினர் பொறுப்புடன் செயற்பட்டனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் ஐந்து பேர் சுற்றி நின்று, விளக்கேற்றி இராணுவத்தினரை விமர்சிக்கின்றமை தொடர்பில் நாம் கவலையடைகின்றோம். முப்படையினர் பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தின் காரணமாகத்தான் அவரால் அவ்வாறு செயற்பட முடிகின்றது என்று அவருக்குச் சொல்லிக் கொள்கின்றோம். புலம்பெயர் தமிழர்களின் பணத்தைப் பெறவே அவர் இப்படியான நாடகத்தை நடத்துகிறார்" - என்றார். (உ-5)

## குமுதினி...

கொலை செய்யப்பட்டு நேற்றுடன் 32 ஆண்டுகள் நிறைவடைந்தன. நெடுந்தீவின் மாவலித்துறையில் இருந்து நயினாதீவின் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு குமுதினிப் படகில் சென்றவர்களே நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

இந்த நினைவு நிகழ்வு நேற்று நெடுந்தீவில் இடம்பெற்றது. இதில் பசுந்தீவு ருத்திரனின் நீலக்கடலலையின் நினைவுகள் என்ற கவிதை நூல் வெளியீடும் நடைபெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன், பசுபதிப்பிள்ளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-8)

## மோடி...

ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

மோடி இலங்கைக்கு வருவது கலாசார ரீதியான பயணம் மட்டுமே என்று அரசு கூறியிருந்தது. அவர் ஐக்கிய நாடுகள் வெசாக் தின நிகழ்வுகளில் மட்டும் கலந்துகொள்ளவே இலங்கை வருகிறார் என்றும் கூறியிருந்தது. அது உண்மையாக இருந்தால் அவர் ஐ.நா. வெசாக் தின நிகழ்வுகளைப் பற்றி தான் பேசியிருக்க வேண்டும்.

ஆனால் மோடி பேசியதில் 75 வீதமானவை இலங்கை, இந்திய இருதரப்பு உறவைப் பற்றியதுதான். இதனை ஊடகங்களில் வெளியான செய்திகள் மூலமே நீங்கள் அறிந்து கொள்ளலாம். சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாக உள்ள 'எட்கா' உடன்படிக்கைக்கான தடைகளை உடன் நீக்குமாறு அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இரு நாட்டு வர்த்தகமும் சுதந்திரமாக இயங்கவேண்டும். இந்திய பெருங்கடலால் நாம் பிரித்திருந்தாலும் இருநாட்டு பாதுகாப்பும் ஒன்றுதான் என்று கூறியிருந்தார். அதாவது, பாதுகாப்பு விடயத்தில் இலங்கை எமது கட்டுப்பாட்டில்தான் இயங்க வேண்டும் சுதந்திரமாகச் செயற்பட முடியாது என்று அவர் கூறுகின்றார். இது எமது நாட்டு சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட பெரும் சவால். அதேபோல், டிக்கோயாவில் அரச தலைவரையும், தலைமை அமைச்சரையும் தனது இருபக்கத்தில் வைத்துக் கொண்டு 1919 நோயாளர் காவுவண்டிச் சேவை நாடு பூராகவும் விரிவாக்கப்படும் என்றும், மலையக மக்களுக்கு மேலும் 10 ஆயிரம் வீடுகள் வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

எமது நாட்டில் வந்து நின்றுகொண்டு இவ்வாறு கூறுவதற்கு அவர் யார்? இந்தியா இலங்கையை தமது ஒரு மாநிலமாகக் கருதியே செயற்படுகிறது. அதனால்தான் மோடி இப்படிக் கூறியுள்ளார் - என்றார். (உ-5)

## திக்கமுனை...

முள்ளிவாய்க்கால் படுகொலையின் நினைவு நிகழ்வு நான்காம் நாளான நேற்று வடமராட்சி திக்கமுனைக் கடற்கரையில் நடைபெற்றது.

மாவீரர் ஒருவரின் தந்தையான பி.ஜி.தங்கவேல் தலைமையில் இந்த நினைவு இடம் பெற்றது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், சிவயோகன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (த-8-4-22)



## எல்லே தொடர்; யாழ். சம்பியன்

கரணவாய், மே 16
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டம் கிண்ணம் வென்றது.
அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. முதலில் விளையாடிய யாழ்ப்பாண மாவட்ட அணி முதல் இன்னிங்ஸில் 16 ஓட்டங்களைச் சேர்த்தது. பதிலுக்குக் களமிறங்கிய கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டு இன்னிங்ஸிலுமாகச்சேர்த்து 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதையடுத்து இன்னிங்ஸாலும் 9 ஓட்டங்களாலும் வெற்றிபெற்று சம்பியனானது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-422-108)

# கபடியைக் கைவிட்டுள்ளது மெதடிஸ்த பெண்கள் அணி

### தேசியத்தில் சம்பியனாக வலம்வந்த நிலையில்

யாழ்ப்பாணம், மே 16
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில் தேசியச் சம்பியனாக வலம்வந்திருந்த நிலையில் இனிவரும் காலங்களில் கபடித் தொடர்களில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்துள்ளது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.
கடந்த வருடம் நடைபெற்ற தேசியமட்ட கபடித் தொடரில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி தேசியத்தில் சம்பியனாகியிருந்தது. ஆனால் கபடி பெண்களுக்கு உரித்தான விளையாட்டு அல்ல என்று முடிவெடுக்கப்பட்டு அந்தப் பாடசாலை ஒதுங்கியுள்ளது.
இந்த முடிவால் நடப்பு வருடத்தில் தேசியமட்டத் தொடரில் வடக்குக்கு கிடைக்கவேண்டிய சில பதக்கங்கள் கிடைக்காமல் போகலாம் என்று கருதப்படுகிறது.
இந்த விடயம் தொடர்பில் குறித்த பாடசாலையின் அதிபர் செல்வி ஜி.டி.தேவராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது", கபடிப் போட்டிகளில் விபத்துக்கள் கூடுதலாக காணப்படுவதனால் பெண்களுக்கு பொருத்தமற்ற விளையாட்டாக தென்படுகிறது. வீராங்கனைகள் உடல் ரீதியாக பாதிப்படைவது எனக்கு நல்லதாகத் தெரியவில்லை. எமது பாடசாலையின் பெருமைக்காக அவர்கள் உடல் உபாதைக்குள்ளாவதை நான் விரும்பவில்லை. எனவே மாணவிகளின் பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களின் சம்மதத்துடன் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளோம்.
அத்துடன் எமது பாடசாலையில் கூடைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளை அறிமுகப்படுத்தி வருகின்றோம்" என்றார்.
இதுதொடர்பாக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் செல்வக்குமரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, "பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி கபடியை கைவிட்டது வடமராட்சி கல்வி திணைக்களம் மற்றும் வடமாகாண கல்வி திணைக்களம் என்பவற்றுக்கு இழப்பாகும். விபத்து என்பது எல்லா விளையாட்டுக்களிலும் ஏற்படும். முறையான பயிற்சி மற்றும் நுட்பங்களை பயன்படுத்தும் போது விபத்தைத் தவிர்க்க முடியும். தேசிய மட்டத்தில் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் தொழில் வாய்ப்புக்களில் புள்ளிகள் கிடைக்கும். இது மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமையும். பாடசாலையின் நிர்வாகச் செயற்பாட்டில் நாம் ஓரளவுக்கு மேல் தலையிட முடியாது. இவர்கள் இப்போட்டியைக் கைவிட்டமை வடமராட்சி கல்வி வலயத்துக்கு இழப்பு என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்றார். (ம-422)

## கோப்பாய் ம.வித்தி. கரப்பந்தில் மகுடம்

கரணவாய், மே 16
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயது ஆண்கள் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயம் சம்பியனானது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயமும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் மோதின.
3 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் மகா வித்தியாலய அணி கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 1:1 என்றாக்கியது புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி.
கிண்ணத்தைத் தீர்மானிப்பதற்கான இறுதி செற்றில் மிகவும் ஆக்ரோசத்துடன் விளையாடிய கோப்பாய் மகா வித்தியாலயம் 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று 2:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா சிறிசுமணா வித்தியாலயமும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயமும் மோதின. இதில் 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது சிறிசுமண வித்தியாலயம். (ம-422-108)



## வெளியேற்றப்பட்டது மத்தி.

யாழ்ப்பாணம், மே 16
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் தோல்வியடைந்து வெளியேறியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து முருங்கன் மகா வித்தியாலய அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் முருங்கன் மகா வித்தியாலய அணி வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது. இதையடுத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது.
பிறிதொரு ஆட்டத்தில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற முன்னேற்றம் கண்டது. (ம-23)



## ஹப்பினஸ் வென்றது

யாழ்ப்பாணம், மே 16
பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஹப்பினஸ் அணி வெற்றி பெற்றது.
சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஹப்பினஸ் அணியை எதிர்த்து றெயின்போ ரைகர்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் ஹப்பினஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சேவியர் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 16
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் சென். சேவியர் அணி முன்னேற்றம் கண்டது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சேவியரை எதிர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலய அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் வெற்றிபெற்றது.
மற்றொரு ஆட்டத்தில் அளம்பில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியை எதிர்த்து தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் அளம்பில் ஆர்.சி. அணி வெற்றி பெற்றது. (ம-23)



# தகுதியாட்டம் இன்று

ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதியாட்டம் இன்று இரவு நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் மும்பை, புனே அணிகள் மோதவுள்ளன.

ஐ.பி.எல். விதிமுறையின்படி முதலாவது தகுதியாட்டத்தில் வெற்றிபெறும் அணி நேரடியாக இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும். இந்த ஆட்டத்தில் தோல்வியடையும் அணி, லீக் சுற்றில் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பிடித்த அணிகளுக்கு இடையிலான விலகலாட்டத்தில் வெற்றிபெறும் அணியுடன் இரண்டாவது தகுதி ஆட்டத்தில் விளையாடும். மொத்தத்தில் இறுதியாட்டத்துக்குச் செல்லப்போகும் அணியொன்றைத் தீர்மானிக்கும் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்துள்ளது.

புனே அணியின் சகலதுறை வீரர் ஸ்டோக்ஸ் தனது தாய்நாடான இங்கிலாந்துக்குத் திரும்பியுள்ளார். இதனால் புனே அணிக்கு இன்று பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)



# அனித்தா சாதனை


யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கோலூன்றிப் பாய்தலில் பெண்கள் பிரிவில் அனித்தா புதிய சாதனை படைத்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இந்தப் போட்டி நடைபெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சாத்விகா கடந்த வருடம் நடைபெற்ற போட்டியில் 2.82 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து படைத்திருந்த சாதனையை, நடப்பு வருடத்தில் அனித்தா 3.10 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து முறியடித்து தங்கம் வென்றார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஹெரினா 2.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், சாத்விகா 2.70 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)





# வெற்றியுடன் விடைபெற்றது பாகிஸ்தானின் 'தடுப்புச்சுவர்'

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தடுப்புச் சுவர் என்று அழைக்கப்படும் அந்த அணியின் டெஸ்ட் தலைவர் மிஸ்பா, நட்சத்திர வீரர் யுனிஸ் கான் இருவரும் பன்னாட்டுக் கிரிக்கெட் அரங்கில் இருந்து நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) வெற்றியுடன் விடைபெற்றுச் சென்றனர்.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றிபெற்றிருந்தன. இதனால் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்திலேயே கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டது.

இந்த ஆட்டம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. இந்த ஆட்டத்தில் 101 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான். அந்த அணி 2:1 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது. தீவுகள் தோல்வியடைந்தாலும் சகலதுறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட சேஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். பாகிஸ்தான் வீரர் யாசிர் சாஜ் தொடராட்ட நாயகனாகத் தெரிவானார்.

இந்த ஆட்டத்துடன் பாகிஸ்தான் அணியின் தடுப்புச் சுவர் என்று வர்ணிக்கப்பட்ட அணித்தலைவர் மிஸ்பா மற்றும் அனுபவ வீரர் யுனிஸ்கான் இருவரும் ஓய்வை அறிவித்துச் சென்றனர். அவர்களுக்கு ஏனைய வீரர்களால் சிறப்பான கௌரவம் வழங்கப்பட்டது.

பன்னாட்டு டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் பாகிஸ்தான் அணி முதலிடம் பிடித்தது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அடைவுக்காக அந்த அணியின் தலைவர் மிஸ்பாவுக்கு அப்போது பற்பல வாழ்த்துக்கள் குவிந்திருந்தன.



நடைபெற்றுமுடிந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் தனது 10 ஆயிரமாவது ஓட்டங்களை எட்டினார் யுனிஸ்கான். இந்த அடைவை எட்டிய முதலாவது பாகிஸ்தான் வீரராக அவர் உள்ளார்.

மிஸ்பாவுக்குப் பின்னர் தலைமைப் பொறுப்பு சர்பராஸ் அகமட்டுக்குக் கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கபடியில் கலக்கியது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், மே 16

மாகாணமட்ட கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

வல்வெட்டித்துறை ரேவடி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. 59:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-422)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 16

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யங் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

கபடித் தொடர்

## பெண்கள் பிரிவிலும் யாழ்ப்பாணம் மகுடம்

யாழ்ப்பாணம், மே 16

வடமாகாண ரீதியிலான கபடியில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வல்வெட்டித்துறை ரேவடி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 66:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-108-422)



## சுழிபுரம் விக்ரோறியா வென்றது கிண்ணம்

கரணவாய், மே 16

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி நடப்பு வருடச் சம்பியனானது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் மோதின. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி. அந்த அணி தனது ஆதிக்கத்தை தொடர்ந்து தக்கவைத்து இரண்டாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா சிறிசுமணா வித்தியாலயமும் மன்னார் எருக்கலம்பட்டி மத்திய மகா வித்தியாலயமும் மோதின. இதில் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை கைப்பற்றியது எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம். (ம-422-108)

## பல்மாஸை வென்றது பார்சிலோனா

லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பல்மாஸை வென்றது பார்சிலோனா அணி. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் நெய்மர் முதல் கோலைப் பதிவுசெய்தார். 12 ஆவது நிமிடத்தில் பல்மாஸ் பதிலடி கொடுத்தது. 32 ஆவது நிமிடத்தில் சுவாரஸ், பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா.
இரண்டாம் பாதியின் 54 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார் சுவாரஸ். 78 ஆவது நிமிடத்தில் நெய்மர் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)

## அயர்லாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து

முத்தரப்புத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் அயர்லாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து. பங்களாதேஷ், நியூசிலாந்து, அயர்லாந்து அணிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் அயர்லாந்தும் நியூசிலாந்தும் மோதின. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 7 இலக்குகள் இழப்புக்கு 289 ஓட்டங்களைக் குவித்தது. புறூம் அதிகபட்சமாக 79 ஓட்டங்களைச் சேர்த்தார். பந்துவீச்சில் மெக்கார்த்தி 2 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்துக்கு கெவின் ஓ பிரைன் சதம் கடந்த போதிலும் அந்த அணி 238 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 51 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)



# மட்ரிட் ரென்னிஸ் கேலப் சம்பியன்

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்ன் தொடர்) நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் சிமோனா கேலப் சம்பியனானார்.
பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் 8ஆவது இடத்திலுள்ள ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்பை எதிர்த்து பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்ரினா மோர்தினார்.
மூன்று செற்களைக்கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை கடும் போராட்டத்தின் பின்னர் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். இரண்டாவது செற்றை கிறிஸ்ரினா 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தனர்.
மூன்றாவதும் இறுதியுமான செற்றில் வெற்றிபெறுபவரே சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கேலப் வெற்றி பெற்றார். (ம)

## பரிசுத்தொகை உயர்வு

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான பரிசுத்தொகை 28.7 கோடியாக (இந்திய மதிப்பில்) உயர்த்தப்பட்டுள்ளது.
இது தொடர்பாக பன்னாட்டு கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான (மினி உலகக்கிண்ணம்) மொத்தப் பரிசுத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. கிண்ணம் வெல்லும் அணிக்கு 14 கோடி ரூபா வழங்கப்படும். இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும் அணிக்கு 7 கோடி ரூபா வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## சங்கா அபார சதம்

இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் சர்ரேயைப் பிரதிநிதித்துவம் செய்து வரும் சங்கா, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சதம் கடந்தார்.
சர்ரேயை எதிர்த்து ஹாம்சயர் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹாம்சயர் முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 பந்துப்பரிமாற்றங்களில் அந்த அணி 8 இலக்குகள் இழப்புக்கு 271 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பெய்லி ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களைக் குவித்தார்.
பந்துவீச்சில் ராம்போல் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.
பதிலுக்குக் களமிறங்கிய சர்ரே 38 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களைக் குவித்த நிலையில் மழை குறுக்கிட்டதன் காரணத்தால் டக்வேர்த்லூயிஸ் விதிப்படி 66 ஓட்டங்களால் சர்ரேக்கு வெற்றி வழங்கப்பட்டது. சங்கா 124 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.
கடந்த ஆட்டத்தில் சங்கா விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் இந்தச்சதத்தின் மூலம் அவர் தெரிவுக் குழுவுக்கு தக்க பதில் வழங்கினார். (ம)




**விற்பனைக்கு**
யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய தரமான பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - டினேஸ்குமார் 077 706 0638

**வீடு வாடகைக்கு உண்டு**
கிளிநொச்சி நகரில் இருந்து 1 Km தூரத்திற்குள் 4 அறைகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
077 760 4667

**ஆங்கிலம்** 3 மாத பயிற்சி நெறி
இளைஞர் யுவதிகள், O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
திங்கள், புதன் பிரிவுகள் - 17.05.2017
1.காலை 08-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
செவ்வாய்,வியாழன் பிரிவுகள் - 18.05.2017
1.காலை 8-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON Expert in Language Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 1570 486 021 320 3313



## பார்சிலோனாத் தொடரைத் தனதாக்கினார் ஹமில்டன்

உலக காரப்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பார்சிலோனாச் சுற்றில் வெற்றிபெற்றார் பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன்.
நடப்பு வருடத்துக்கான உலக காரப்பந்தயத் தொடர் 20 சுற்றுக்களாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஐந்தாவது சுற்று ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பந்தயத் தூரமான 307 கிலோ மீற்றரை ஒரு மணித்தியாலம், 35 நிமிடங்கள், 56 செக்கன்களில் அடைந்து முதலிடம் பிடித்தார் பிரிட்டன் வீரர் ஹமில்டன்.
ஜேர்மனி வீரர் வெட்டல் இரண்டாவது இடத்தையும், ஆஸ்திரேலிய வீரர் டானியல் மூன்றாவது இடத்தையும் கைப்பற்றினர்.
முடிவடைந்த முதல் ஐந்து சுற்றுக்களின் நிறைவில் 104 புள்ளிகளுடன் வெட்டல் முதலிடத்திலும், 98 புள்ளிகளுடன் ஹமில்டன் இரண்டாவது இடத்திலும், வல்டெரி மூன்றாவது இடத்திலும் உள்ளனர். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.